விலை : 20.00
website : www.valampurii.lk
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 பங்குனி 09 செவ்வாய்க்கிழமை (22.03.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 094

# அதிகாரங்களை பகிர்ந்தளிக்க தயாராகவே இருக்கிறேன்

## மாகாண முதலமைச்சர்களிடம் ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு



(கொழும்பு)

ஜனாதிபதி என்ற வகையில் 19-வது அரசியல் அமைப்புத் திருத்தத்தின் கீழ் மாகாணங்களுக்குரிய அதிகாரங்களை பகிர்ந்து கொடுக்க தாம் தயாராக இருப்பதாக தெரிவித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னர் தாம் சுகாதார அமைச்சராகவும், விவசாய அமைச்சராகவும் பதவி வகித்த காலத்தில் மாகாணத்தின் கண்காணிப்பு அதிகாரங்களை மாகாண முதலமைச்சர்களுக்கு எழுத்துமூலம் வழங்கியிருந்தமையையும் நினைவு கூர்ந்துள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க....

## அமை. சம்பிக்கவுக்கு எதிராக பிரேரணை



(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமயவின் செயலாளரும், அமைச்சருமான சம்பிக்க ரணவக்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை

24ஆம் பக்கம் பார்க்க....


## கொத்து ரொட்டி விசமானதால் 3 சிறுவர்கள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலிப் பகுதியில் அமைந்துள்ள கொத்து ரொட்டிக் கடை ஒன்றில் தந்தை வாங்கி கொடுத்த கொத்து ரொட்டியினை உண்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 சிறு

23ஆம் பக்கம் பார்க்க....

## மோ.சைக்கிள் விபத்து; குடும்பஸ்தர் உயிரிழப்பு



23-ம் பக்கம்...

## 3 பொதிகளில் 6 1/2 கிலோ கஞ்சா; இந்திய மீனவர்கள் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு 6.5 கிலோகிராம் கேரளா கஞ்சாவினை கொண்டு வந்த இந்திய மீனவர்கள் இருவரையும் எதிர வரும் ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி பெருமாள் சிவகுமார் நேற்றைய தினம் உத்தரவிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் அதிகாலை கடலில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த கடற்படையினர் சந்தேகத்திற்கிடமான முறையில் வந்த நாட்டுப் படகினை மறித்து சோதனையிட்டனர்.

இதன் போது 3பொதிகளில் மிகவும் சூட்சுமமான முறையில் தண்ணீர் உட்புகாதவாறு பொதியிடப்பட்ட கஞ்சாவினை சோதனையின பின்னர் கைப்பற்றியுள்ளனர்.

அத்துடன் இரு மீனவர்களையும கைது செய்ததுடன் அவர்கள் பயணித்த படகினையும் மீட்டிருந்தனர்.

குறித்த இருவரையும் நேற்றை

24ஆம் பக்கம் பார்க்க....

## தனிமையில் இருந்த மூதாட்டி மரணம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் பகுதியில் கண் பார்வையற்ற நிலையில் தனிமையில் வசித்துவந்த மூதாட்டி ஒருவர் வீட்டு முற்றத்தில் உயிரிழந்து இரண்டு நாட்களாக வெயிலில் காய்ந்த நிலையில் நேற்றையதினம் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

சுன்னாகம் தெற்கு பகுதியினை

23ஆம் பக்கம் பார்க்க....

## ஐ.நா அறிக்கைக்கு முன்னதாக உள்ளக பொறிமுறையின் இறுதி வரைபை இலங்கை அரசு தயாரிக்க முயற்சி!

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தினால முன்னெடுக்கப்படவுள்ள உள்ளக விசாரணைப். பொறிமுறையின் இறுதி வடிவம் மே மாத இறுதியில் தயாராகும். எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜெனிவாவில் எதிர்வரும் யூன் மாதம் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 32ஆவது கூட்டத்தொடரில் ஐ.நா மனிதவுரிமைகள

24ஆம் பக்கம் பார்க்க....

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு புத்தி சுகவீனம் ஏற்பட்டுள்ளது

### கண்டபடி உளறுவதாக கம்மன்பில சாடல்




(கொழும்பு)

1996 ஆம் ஆண்டு குண்டு தாக்குதலை எதிர்கொண்ட பின்னர், முனனாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கு புத்தி சுகவீனம் ஏற்பட்டுள்ளதாக பிவித்திரு ஹெல உறுமயவின் தலைவ

24ஆம் பக்கம் பார்க்க....

## "எனது மகளையும் கொலை செய்ய மகிந்த திட்டம் தீட்டினார்"



(கொழும்பு)

தனது மகளை கொலை செய்வதற்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ திட்டம் தீட்டியிருந்ததாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

சுதந்திர கட்சியின் உறுப்பினர்களுக்கான தெளிவுபடுத்தல் கூட்டம ஒன்று நேற்று முன்தினம் களனி

24ஆம் பக்கம் பார்க்க....

## சுற்றுலா விடுதியில் பொருட்கள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சுண்டுக்குளி பகுதியில் உள்ள விடுதியில் தங்கி நின்ற சுற்றுலாப் பயணிகள், வெளியேறும் போது விடுதியில் இருந்த இலட்ச ரூபாய் பெறுமதியான பொருட்களை திருடிச் சென்றுள்ளதாக விடுதி உரிமையாளரினால் யாழ். பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் முறைப்பாடு செய்யப்

23ஆம் பக்கம் பார்க்க....

## இந்தியாவிலுள்ள 18 தமிழ் அகதிகள் அடுத்த வாரம் இலங்கை வருகை

### மீள்குடியேற்ற அமைச்சு தகவல்

(கொழும்பு)

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினுடைய (UNHCR) வசதிப்படுத்தலுடனும் ஒருங்கிணைப்புடனும் பதினெட்டு இலங்கைத் தமிழ் அகதிகள் தமிழ்நாடு இந்தியாவிலிருந்து எதிர்வரும் 28-ம் திகதி இலங்கைக்கு வருகை தர உள்ளனர்.

இவர்கள் சென்னையிலிருந்து மிகின் லங்கா விமான சேவை (MJ130)யினூடாக அதிகாலை 12.20 மணியளவில் வருகைதர உள்ளனர்.

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு,

23ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கண்ணீர் அஞ்சலி

அமரர்

## கணபதிப்பிள்ளை பொன்னையா

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 05 - 03 - 1932 | 21 - 03 - 2016 |



தியாகி அறக்கொடை நிறுவனத்தின் பிரதிப்பணிப்பாளர்
திரு. பொ. விக்னேஸ்வரன் அவர்களின் அன்புத் தந்தை
அமரர் கணபதிப்பிள்ளை பொன்னையா
அவர்கள் 21.03.2016 நேற்று அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு
ஆழ்ந்த கவலை அடைந்ததுடன் அன்னாரின் பிரிவால்
துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்திற்கு ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

(C-4088)

பணிப்பாளர் மற்றும் பணியாளர்கள்
தியாகி அறக்கொடை நிறுவனம்
527, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.


# யானை மலையில் வெடிப்பு

குருநாகலில் உள்ள யானை மலை அல்லது எத்தகல என அழைக்கப்படும் மலைப்பகுதியில் இரண்டு இடங்களில் ஆழமான பிளவுகள் ஏற்பட்டுள்ளன.

இந்த பிளவுகள் ஒவ்வொன்றும் 50 அடி வரை நீளமானவை என தெரிவிக்படுகினறது. குறித்த குன்றிலிருந்து வெடிப்புச் சத்தம் கேட்டதாக அந்தப் பகுதியின் வியாபாரிகள் கூறியுள்ளனர்.

இப்பகுதியில் காணப்படும் உயர் வெப்பமே இந்த இரண்டு ஆழமான வெடிப்புகளுக்குக் காரணமாக இருக்கலாம் என தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவகத்தின் பணிப்பாளர் ஆர்.எம்.எஸ்.பண்டார கூறியுள்ளார்.

மேலும் இந்த வெடிப்பு ஏற்பட்ட இடத்திலிருந்து சிறு கற்களை ஆய்வுக்காக எடுத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-12)


### வீடு வாடகைக்கு உண்டு

வடலியடைப்பு பாதாள வைரவர் கோவில் முன்லேனில் நல்ல நிலையில் உள்ள வீடு வாடகைக்கு உண்டு.
(முற்பணம் தேவையில்லை)
(3970) தொடர்பு : 0775958178

### தவறிவிட்டது

மோட்டார் சைக்கிள் பின் இலக்க தகடு (WI - 3614) வல்லைக்கும் வல்வெட்டிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து தொடர்பு கொள்ளவும்.
M.P தருமலிங்கம்
பத்திரிகை முகவர்
(C-4086) உடுப்பிட்டி 0778201853

### விற்பனைக்கு

பெரிய வெங்காய விதை விற்பனைக்குண்டு
தொடர்புகளுக்கு : 0767796423
(C-4085) 0759996422

# பாராட்டி வாழ்த்துகின்றோம்




யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில்
கடந்த 20.03.2016 நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில்
கனியூட் ஏணெஸ்ற் இயல்டிமென்சன் B.com
பட்டத்தினையும் 19.01.2016 நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில்
கனகநாயகம் நரேஸ் B.B.A பட்டத்தினை
பெற்றமையையுமிட்டு
மனதார வாழ்த்துவதோடு அவர்கள் மேன்மேலும்
பலபட்டங்களைப் பெற்று கல்வியில்
உயர வாழ்த்துகின்றோம்

கனியூட் ஏணெஸ்ற் இயல்டிமென்சன் (B.Com)

கனகநாயகம் நரேஸ் (B.B.A)

(3969)

வாழ்த்துவோர்: பிரதம இறைவரிப் பரிசோதகர், இறைவரிப் பரிசோதகர்கள் வரி அறவீட்டாளர்கள், யாழ் மாநகர சபை

# RAVEENS EMC

Singathin Veedu, Karaveddy East, Karaveddy

T.P :- 021 226 3321 E-mail :- info@raveensemc.com Web :- www.raveensemc.com

Mr.P.Easwaranathan B.Sc (Hons) Ag. Dip. in. Edu.
Justice of the Peace
Director

## G.C.E O/L EXAMINATION RESULTS-2015

| | Name | Results | Mat (ENG) | Eng | Sci (ENG) | His | Tam | Rel | Com | Geo (ENG) | ICT (ENG) | Eng.lit |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | Miss.K.Nithusha | 9A | A | A | A | A | A | A | A | | A | A |
| 02 | Mr.P.Kajan | 9A | A | A | A | A | A | A | A | | A | A |
| 03 | Mr.K.Anushan | 9A | A | A | A | A | A | A | A | | A | A |
| 04 | Mr.R.Vithushanan | 9A | A | A | A | A | A | A | A | | A | A |
| 05 | Miss.S.Lakshika | 8A,B | A | A | A | A | A | A | A | | A | B |
| 06 | Mr.S.Sanjith | 8A,C | A | A | A | A | A | A | A | | A | C |
| 07 | Miss.I.Shobiga | 8A,C | A | A | A | A | A | A | A | | A | C |
| 08 | Miss.T.Elaksika | 8A,C | A | A | A | A | A | A | A | | A | C |
| 09 | Mr.R.Tharsan | 7A,2B | A | B | A | A | A | A | A | | A | B |
| 10 | Mr.V.Vinoth | 7A,B,C | A | A | A | A | B | A | A | | A | C |
| 11 | Mr.R.Tharvekan | 7A,B,S | A | A | A | A | B | A | A | | A | S |
| 12 | Mr.A.Henoshan | 6A,2B,C | A | A | B | A | A | B | A | | A | C |
| 13 | Miss.K.Rubika | 6A,2B,C | A | A | C | A | B | A | | A | A | B |
| 14 | Miss.S.Mithula | 5A,3B,C | A | A | C | A | B | A | B | | A | B |
| 15 | Miss.S.Niththjapupathy | 4A,5B | A | B | B | A | B | A | | B | A | B |
| 16 | Miss.N.Mogana | 3A,3B,2C,S | A | B | C | B | B | A | C | | A | S |

(C-4082)


# மரண அறிவித்தல்

## அமரர் கணபதிப்பிள்ளை பொன்னையா



கைதடி மேற்கை பிறப்பிடமாகவும் கைதடி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் கணபதிப்பிள்ளை பொன்னையா அவர்கள் 21.03.2016 நேற்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை கதிராசிப்பிள்ளை தம்பதியரின் புதல்வரும், நாகரத்தினம் அவர்களின் அன்புக் கணவரும், அமரர் திருமதி பொன்னம்மா இராமநாதன், அமரர் செல்வி தங்கம்மா, திருமதி சிவலக்ஸ்சுமி முத்துக்குமாரசுவாமி, திருமதி பாலசுப்பிரமணியம் செல்லம்மா(ஜேர்மனி), நாகேந்திரம்(பிரான்ஸ்), அமரர் தெய்வேந்திரம், செல்லத்துரை (சுவிஸ்), ஆகியோரின் அன்பு சகோதரரும், ஆ.முத்துக்குமாரசாமி(சுவிஸ்) அவரின் மைத்துனரும், தயாபரன்(லண்டன்), விக்னேஸ்வரன் (பிரதிப் பணிப்பாளர் - தியாகி அறக்கொடை நிறுவனம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் திருமதி எழினி விக்னேஸ்வரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்-நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம், அரச சிறுவர் பொறுப்பேற்பு இல்லம் கைதடி), திருமதி இந்திராதேவி (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் அபிஷா, ஆத்விகா, அஸ்விகா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரிகைகள் 22.03.2016 செவ்வாய்க்கிழமை இன்று காலை 10.00 மணிக்கு கைதடி வடக்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஊரியான் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
கைதடி வடக்கு
கைதடி. (C-4088)
பொ. விக்னேஸ்வரன் (மகன்)
T.P: 0777763436

# வலி.வடக்கில் மீளக்குடியமர 700 குடும்பங்கள் பதிவு

கடந்த டிசெம்பர் மாதம் 29ஆம் திகதி இராணுவ உயர் பாதுகாப்பு வலய பகுதியில் இருந்து விடுவிக்கப்பட்டு இம்மாதம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் கையளிக்கப்பட்ட 701.5 ஏக்கர் நிலப்பரப்பில் 486.5 ஏக்கர் நிலப்பரப்பை கொண்ட தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் 700 குடும்பங்கள் மீளக்குடியமர விருப்பம் தெரிவித்து, தமது பதிவுகளை மேற்கொண்டுள்ளதாக பிரதேச செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் விடுவிக்கப்பட்ட பகுதியில் அநேகமானவை மக்களின் விவசாயக் காணிகளே. இவற்றில் நிரந்தர வீடுகளை கொண்டிருந்தவர்களும் விவசாய காணியில் தற்காலிக குடிசை அமைத்து குடியமர விருப்பம் தெரிவித்தவர்களுமாக 700 குடும்பங்கள் இவ் விண்ணப்பத்தை பதிவு செய்துள்ளன.

இதன், அடிப்படையில் ஜே/235 காங்கேசன்துறை தெற்கு, ஜே/236 பளை வீமன்காமம் வடக்கு, ஜே/250 தையிட்டி தெற்கு, ஜே/245 மயிலிட்டி வடக்கு, ஜே/252 பலாலி தெற்கு, ஜே/253 பலாலி கிழக்கு, ஜே/254 பலாலி வடக்கு ஆகிய ஏழு கிராம சேவையாளர் பிரிவில் இம் மீள்குடியேற்றத்துக்கு விண்ணப்பம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தமது காணிகளை அடையாளப்படுத்தி பதிவை மேற்கொண்ட 700 பேருக்குமான முதற்கட்ட கொடுப்பனவான 13 ஆயிரம் ரூபாய் எதிர்வரும் நாட்களில் வழங்கி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும்,ஒரு பரப்பு காணியை துப்புரவு செய்வதற்கு கூலியாக 1,781 ரூபாய் 25 சதம் மீள்குடியேற்ற அமைச்சினால் வழங்கிவைக்கப்படவுள்ளதாக பிரதேச செயலக வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை விடுவிக்கப்பட்ட குறித்த காணிகளுக்கு அருகாமையில் அமைந்துள்ள இராணுவ முகாம்களையும் இராணுவம் அகற்ற வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ள அப்பகுதி மக்கள், இராணுவம் அங்கிருந்து சென்றால் தான் தம்மால் பயமின்றி விடுவிக்கப்பட்ட குறித்த காணியில் மீள் குடியமர முடியும் எனவும் தெரிவித்துள்ளனர். (இ-4)

## மீண்டும் ஏவுகணைகளை பரிசோதித்தது வடகொரியா

வடகொரியா, சக்தி வாய்ந்த அணுகுண்டு, ஐதரசன் குண்டு மற்றும் அணு ஆயுதங்களை நீண்டதூரம் சுமந்து சென்று தாக்குதல் நடத்தும் ஏவுகணைகள் ஆகியவற்றை பரிசோதித்து வருகிறது.

இதுதவிர,அண்டை நாடான தென்கொரியாவை அச்சுறுத்தும் விதமான நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகிறது. ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் கட்டுப்பாட்டை மீறி வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் நடந்துகொள்வதால் அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் நாடுகளின் எதிர்ப்பையும் சந்தித்து வருகிறார்.

இதனால் அந்த நாட்டின் மீது சில தடைகளும் விதிக்கப்பட்டது. இருந்தபோதும், பேரழிவை ஏற்படுத்தும் ஐதரசன் குண்டை சோதனை நடத்திமேலும் பதற்றத்தை உருவாக்கியது வடகொரியா.

இந்நிலையில், மேலும் இரு ஏவுகணைகளை வடகொரியா பரிசோதித்துள்ளதாக அமெரிக்க பாதுகாப்புத் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த 18 ஆம் திகதி உள்ளூர் நேரப்படி காலை 5.55 மணியளவில் 'ரோடாங்' ரகஸ்கட் ஏவுகணைகளை வடகொரியா பரிசோதித்ததாகவும், 800 கிலோ மீற்றர்வரை பாய்ந்து சென்று 'இலக்கை தாக்கிய அந்த ஏவுகணை, ஜப்பானில் உள்ள கிழக்குக் கடல் பகுதியில் விழுந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

1300 கிலோமீற்றர் தூரம் வரை பாய்ந்து சென்று தாக்கக்கூடிய வல்லமையுள்ள 'ரோடாங்' ஏவுகணைகளால் அண்டை நாடான ஜப்பானை நொடிப்பொழுதில் தாக்கிவிட முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

அண்டை நாடுகளுக்கு எரிச்சலூட்டி, வடகிழக்காசியாவில் பதற்றத்தை ஏற்படுத்தக்கூடிய இதுபோன்ற செயல்களில் இருந்து வடகொரியா விலகி இருக்க வேண்டும் என அமெரிக்க உள்துறை அமைச்சகம் எச்சரித்தது.

ஆனால், இதை எல்லாம் பொருட்படுத்தாத வடகொரியா நேற்றும் வரிசையாக பல ஏவுகணைகளை பரிசோதித்துள்ளது.

குறைந்ததூர இலக்கை தாக்கி அழிக்கும் ஏவுகணைகள் மற்றும்ரொக்கெட்டுகளை நேற்று வடகொரியா பரிசோதித்ததாகவும் அவை ஜப்பானின் கிழக்கு கடல் பகுதியில் விழுந்ததாகவும், தென்கொரியா நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (இ-5)

## குடாநாட்டு நீர்வளத்தை பாதுகாக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும்

### யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் அழைப்பு



நீரின் முக்கியத்துவத்தை அனைத்து சமூகமும் உணர்ந்து செயற்பட்டாலே எதிர்காலத்தில் யாழ்.குடாநாட்டு நீர்வளத்தை பாதுகாக்க முடியும் என யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் செந்தில்நந்தனன் தெரிவித்துள்ளார்.

உலகநீர் தினத்தை முன்னிட்டு "நீரும் வேலையும்" எனும் தொனிப்பொருளில் சுத்தமானகுடிநீர் தேவைக்குரிய தேடலுக்கான மாபெரும் விழிப்புணர்வு நடைபவனி நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. அந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய நாடுகள் பொதுச்சபையால் மார்ச் மாதம் 22 ஆம் திகதி உலகநீர் தினமாக பிரகடனப்படுத்தப்பட்டு உலகளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

நாம் நீரின் முக்கியத்துவத்தை அறியாது செயற்பட்டு வருகின்றோம். நீர் இன்றி எந்ததொழில் முறைகளையும் செய்ய முடியாத நிலையில் இருக்கிறோம். எனவே நீரின் முக்கியத்துவத்தை தமது கருப்பொருளாக அறிந்து சிறந்த முறையில் நாம் செயற்பட வேண்டும். உலகில் அருகிவரும் நிலையில் நீர்வளம் உள்ளது. எதிர்காலத்தில் போர் நிகழுமாக இருந்தால் அது நீருக்கான போராட்டமாக தான் இருக்கும்.

நீருக்காக பலர் ஏங்கி நிற்கும் வேளையில் இங்கு வீதி முழுவதிலும் நீரை ஊற்றுவதனை நாம் அவதானிக்க முடிகிறது. நீரை சிக்கனமாக பாவிக்கும் முறையை நாம் ஒவ்வொருவரும் உணர வேண்டும்.

குறிப்பாக இங்கு உள்ள படித்த சமூகம் முதலில் நீரின் தேவையை உணர வேண்டும்.எமது மாவட்டத்தில் மிகஅதிகமான இரசாயன பாவனைகளின் ஊடாக நீர் பாரிய அளவில் மாசடைந்துள்ளது. அத்துடன் நடைமுறை சாத்தியமில்லாமலும் எந்தவித முன்னறிவித்தலுமின்றி மலசலகூடங்கள் அமைப்பதும் குழாய்க்கிணறுகள் அமைப்பதினாலும் நிலத்தடி நீரை மாசுபடுத்தி வருகிறோம்.

நீரின் வளத்தை பாதுகாக்க வேண்டும் எனில் ஒன்றிணைந்து செயற்படுவது அவசியம். நீரின் வளத்தை பாதுகாக்கவும் நன்னீரை சேமிப்பதற்கும் நீரை சிக்கனமாக பாவிப்பதற்கும் அரசினால் பதிதிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அத்துடன் முன்னாயத்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஆனால் அனைவரின் ஒத்துழைப்பும் இல்லாமல் எந்ததிட்டங்களையும் சாத்தியமாகச் செய்ய முடியாது.

நீர் மாசடைந்த தாக்கத்தால் அநுராதபுரம், பொலநறுவை மாவட்டங்களில் சிறுநீரக நோய் அதிகளவில் தாக்கியுள்ளது. அடுத்து எமது மாவட்டத்தை அதிகளவில் தாக்குவதற்கான சந்தர்ப்பம் காணப்படுகிறது.

எனவே கிராமமட்டங்களிலும் பாடசாலை மட்டங்களிலும் பொதுநிறுவனங்கள் ஊடாகவும் நீரின் முக்கியத்துவத்தை விழிப்புணர்வுகளை மேற்கொண்டு அனைவரும் ஒருங்கிணைந்து செயற்படுவது மிக அவசியம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## க.பொ.த(சா/த) பரீட்சையில் இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி வவு.மாவட்டத்தில் முன்னிலையில்

(குருமன்காடு)

வெளிவந்துள்ள கல்விப் பொதுத்தராதர சாதாரண தர பரீட்சையில் வவுனியா மாவட்டத்தில் இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி முன்னிலையில் உள்ளது.

இந்நிலையில் எட்டு மாணவர்கள் 9 பாடங்களிலும் ஏ சித்தி பெற்றுள்ளதுடன் அவர்களில் மூவர் ஆங்கில மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்றியவர்களாவர்.

இதேவேளை வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் வவுனியாபுதுக்குளம் மகா வித்தியாலய மாணவி ம.கலஸ்சனா மட்டும் 9 ஏ பெற்று சாதனை நிலை நிறுத்தியுள்ளார்.

கடந்த 2007 ஆம் ஆண்டுக்குப்பின்னர் வவுனியா வடக்கில் பெறப்படும் சிறந்த பெறுபேறு இதுவாகும் என தெரிவிக்கப்படுகின்றது. (2-250)

## ஐ.எஸ்.தீவிரவாதிகள் 100 பேர் உயிரிழப்பு

ஈராக் நாட்டின் மொசூல் நகரில் கடந்த இரண்டு நாட்களாக நடத்தப்பட்ட தாக்குதலில் சுமார் 100 ஐ.எஸ். தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளதாக அந்நாட்டு இராணுவம் தெரிவித்துள்ளது.

ஐ.எஸ். தீவிரவாதிகளை குறிவைத்து மொசூல் பல்கலைக்கழகம் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் சர்வதேச நாடுகளின் படைகள் தாக்குதல் நடத்தியதாக ஈராக் இராணுவம் டுவிட்டர் தளத்தில் பதிவு செய்துள்ளது. (இ-5)

## 'எட்கா' பற்றி வெளிப்படுத்துங்கள்



இந்திய அரசாங்கத்துடன் கைச்சாத்திட தீர்மானிக்கப்பட்டுள்ள எட்கா ஒப்பந்தம் தொடர்பான முழு விபரங்களையும் நாட்டுக்கு வெளிப்படுத்துமாறு மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) அரசாங்கத்தைக் கோரியுள்ளது.

இந்த ஒப்பந்தம் தொடர்பில், நாட்டு மக்களுக்குப் போதிய புரிதல் இல்லை என்றும் மக்கள் விடுதலை முன்னணி சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, இந்தியாவுடன் கைசாத்திடவுள்ள இந்த ஒப்பந்தத்தின் பிரதியொன்று, இலங்கை அரசாங்கத்தினால் இந்தியாவிடம் ஏற்கனவே வழங்கப்பட்டுவிட்டது. இந்த ஒப்பந்தம் தொடர்பில், இந்திய அரசாங்கம் தற்போது கவனம் செலுத்தி வருகின்றது என இலங்கையிலுள்ள இந்தியாவின் உயர்ஸ்தானிகர் வை.கே.சின்ஹா அறிவித்துள்ளார்.

இந்த ஒப்பந்தம் தொடர்பில், இலங்கை அரசாங்கத்தினால் இந்தியாவுக்கு அறிவுறுத்திய போதிலும் இலங்கையர்களுக்கு அது தொடர்பில் அறிவிக்காமல் இருப்பது பாரிய பிரச்சினையாகும் என மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார். (இ-5)

## துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளரின் இடமாற்றத்தை எதிர்த்து நேற்று ஆர்ப்பாட்டம்



துணுக்காய் வலய கல்விப் பணிப்பாளரை இடமாற்றம் செய்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து துணுக்காய் கல்வி வலய பாடசாலை மாணவர்களின் பெற்றோர்கள் நேற்று வடமாகாண கல்வி அமைச்சு செயலகத்தை முற்றுகையிட்டு கடும் வெயிலில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

நேற்றைய தினம் வடமாகாண கல்வி அமைச்சில் வடமாகாண கல்வி அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் வடமாகாண கல்வி அமைச்சர் தலைமையில் நடைபெற்றுக் கொண்டிருந்த போது பெற்றோர்கள் பிற்பகல் ஒருமணியளவில் இந்த கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.

அங்கு வருகைதந்த கல்வி அமைச்சர் பெற்றோர்களை ஆறுதலப்படுத்தி உங்கள் பிள்ளைகளின் கல்விக்கு பங்கம் ஏற்படுத்துவோர் மீது நாம் நடவடிக்கை எடுப்போம் என்றும் நீங்கள் உங்கள் பிள்ளைகளின் கல்வியில் அக்கறையாக இருங்கள் என்றும் கூறியதோடு இந்தப் பிரச்சினைக்கு மிக விரைவில் தீர்வு காணப்படும் என்றும் கூறினார்.

அவ்விடத்திற்கு வருகை தந்த மாகாணசபை உறுப்பினர் ரவிகரன் உங்களால் தெரிவு செய்யப்பட்ட மாகாண சபை உறுப்பினர்களில் நான் மட்டும் இங்கே நிற்கின்றேன். உங்களோடு நானும் பிள்ளைகளின் கல்விக்காக போராடுவேன். துணுக்காய் கல்வி வலயம் கல்வியில் வளர்ந்து வருவதனை நானும் அறிவேன். நீங்கள் கலைப்படத் தேவையில்லை. பாடசாலைகளை மூடுவதாக இருந்தால் நானும் உங்களோடு வருவேன். குழப்பம் விளைவிக்கும் நபர்களை இனங்கண்டு துணுக்காய் கல்வி வலயத்தில் இருந்து அகற்றுவதற்கு நான் முழு முயற்சி எடுப்பேன் என்று உறுதியளித்தார்.

இதேவேளை மேற்படி வலய கல்வி பணிப்பாளரினை இடமாற்றக்கோரி அதே கல்வி வலயத்தில் கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபடும் ஆசிரியர்கள் ஒரு வாரத்திற்கு முன்னதாக கல்வி அமைச்சர் அலுவலகம் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-4-9)

SRI LANKA'S MOST ACCEPTED
BRITISH MBA PROGRAMME

Batch Commencement
27th of March

Cardiff Metropolitan University

MBA

MASTER OF BUSINESS ADMINISTRATION

Call now
0769 289 784

(C-4090)



INTERNATIONAL COLLEGE OF BUSINESS & TECHNOLOGY

ICBT CAMPUS JAFFNA
www.icbt.lk

580 Hospital Rd, Jaffna Tel: 021-4 777 888

# ஜனாதிபதி மைத்திரி-கொரியா பௌத்த தூதுக்குழு சந்திப்பு




கொரியாவின் உல்ஷான் சாஜே பிக்கு வைத்தியசாலை முறைமையின் தலைவர் நோன்க் ஹெனஜ் தேரரின் தலைமையிலான கொரியா பௌத்த தூதுக் குழுவினர் நேற்று முன்தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் சந்தித்தனர். கொரியாவின் ஸ்ரீலங்காராமயவின் தலைமை தேரர் சங்கைக்குரிய கடுவக விஜிதவங்ஸ தேரர், பிடிகல சுவ்நெதர தேரர் உள்ளிட்ட மகாசங்கத்தினர் மற்றும் பிரதியமைச்சர் துஷ்மந்த மித்ரபால ஆகியோர்களும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். இதன்போது இலங்கையிலுள்ள பௌத்த பிக்குகளுக்கு வைத்தியசாலை ஒன்றை அமைப்பது தொடர்பில் இணக்கம் ஏற்பட்டுள்ளது. 34 அறைகளுடன் சகல வசதிகளையும் கொண்ட வைத்தியசாலை அமைத்துக் கொடுக்க இவர்கள் உறுதியளித்துள்ளனர்.
(இ-5)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

Congrats!

## திருமதி.நர்மதா விஜயகாந்

22.03.2016 இன்று
செவ்வாய்க்கிழமை
வட இலங்கை சங்கீத சபையில்
நடைபெறவிருக்கும்
வட இலங்கை சங்கீத சபை-2015
ஆம் ஆண்டுக்கான
பட்டமளிப்பு விழாவில்
நாட்டிய கலா வித்தகர் விருதினை
பெறும் நாட்டிய கலாபூஷணி
திருமதி.நர்மதா விஜயகாந்
அவர்களை பாராட்டி வாழ்த்துவதுடன்
இன்னும் பல பட்டங்கள்
பெறவேண்டுமென வாழ்த்தி நிற்கின்றோம்.



Congrats!

வாழ்த்துவோர்:- மாமி வேபி மற்றும் டொனால்
தனுஷா குடும்பத்தினர்.

(சி-4084)


**மீனம்**
சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், செய் தொழில் மேன்மையுண்டு, உங்களின் முயற்சிகளுக்கு நண்பர்கள் பக்கபலமாக இருப்பர்.

**மேடம்**
தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிள்ளைகளின் நலனில் அக்கறை கூடும்.

**இடபம்**
ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரலாம், ரோக பயமுண்டு, எடுத்த முயற்சிகளில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும்.

**மிதுனம்**
வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படும், போசன சுகமுண்டு, பயணங்களால் பலனுண்டு.

**கும்பம்**
சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

| | | | |
|---|---|---|---|
| சூரி புத | | | |
| சுக், கேது | **கிரகநிலை** சந்திராஷ்டமம் திருவோணம், அவிட்டம், இரவு 11.24 இற்கு கன்னி-சந் | | |
| | | | குரு ராகு சந் |
| | சனி செவ் | | |

## இராசி பலன்

22.03.2016
(பங்குனி 09, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.14 மணிக்கு
சதுர்த்தசி பிற்பகல் 4.02 மணிக்கு
பூரம் பிற்பகல் 4.58 மணிவரை
சுபநேரம் 10.46-12.16 மணிவரை
இராகுகாலம் 3.16-4.46 மணிவரை
சித்தாமிர்தம்

வளவன்

**கடகம்**
உங்களின் வார்த்தைகளை பலரும் கேட்டு நடக்க முன்வரலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, பித்த சம்பந்தமான ரோக பயமுண்டு.

**மகரம்**
சிந்தித்து செயற்படுவதன் மூலம் சிறப்புக்கள் காண வேண்டிய நாள், பிரயாண பயமுண்டு, போசன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**சிம்மம்**
ஆழ்ந்த சிந்தனையுண்டு, அனுபவத்தின் வாயிலாக பல உண்மைகளை அறிந்து கொள்வீர்கள், குடும்பச் சுமை கூடும், போசன சுகமுண்டு.

**தனுசு**
திடீர் பயணங்களால் நன்மையுண்டு, ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**விருச்சிகம்**
எடுத்த காரியங்களை முடிப்பதில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், தன்னம்பிக்கை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு, ஆரோக்கியமான நாள்.

**துலாம்**
பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம், உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**கன்னி**
சுப காரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், மனதில் இனம் புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும், சயன சுகக் குறைவுகள் ஏற்புடலாம்.

# உலக நீர் தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு நடைபவனி












படங்கள்: பொ.சோபிகா, உ.சாளின்

உலகநீர் தினத்தை முன்னிட்டு "நீரும் வேலையும்" எனும் தொனிப் பொருளில் சுத்தமானகுடிநீர் தேவைக்குரிய தேடலுக்கானமாபெரும் விழிப் புணர்வு நடைபவனி நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

யாழ்.பிராந்திய தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் ஏற்பாட்டில் பிராந்திய அலுவலகத்தில் இருந்து காலை 8.30 மணியளவில் ஆரம்பித்த இந்த மாபெரும் நடைபவனி யாழ்.போதனா வைத்தியசாலை வீதியூடாக முற்பகல் 10.30 மணியளவில் யாழ் மாவட்டச் செயலகத்தை சென்றடைந்தது.

குடாநாட்டில் நீர்வளமானது இரசாயனப் பதார்த்தங்களினாலும் மலக்கழிவுகளினாலும் மாசடைந்து காணப்படுகிறது. குடிநீருக்கான தரமற்ற நீரையே ஒவ்வொருவரும் நாள்தோறும் பருகிக் கொண்டிருக்கும் நிலையில் பலநோய்கள் பரவியவண்ணம் இருக்கின்றன. எனவே நிலத்தடி நீரை பாதுகாக்கவும் எதிர்கால சந்ததியினருக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்குவதையும் நோக்காக கொண்டு இந்த மாபெரும்நடைபவனிநடைபெற்றது.

இந்த நடைபவனியில் நீர் இன்றேல் நீ இல்லை,குற்றுயிராய் கிடக்கும் நீருக்கு புற்றுயிர் அளிப்போம், நீர் பாதுகாப்பு எம் உயிர் பாதுகாப்பு, இன்றைய மழைநீர் சேகரிப்பு நாளைய குடிநீர் பாதுகாப்பு, நீர்ப் பிரச்சினை என்பது அரசியல் பிரச்சினை அல்ல, இன்றைய மழைநீர் சேகரிப்பு நாளைய குடிநீர் பாதுகாப்பு என பல சுலோகங்களை ஏந்தியவாறு பலர் நடைபவனியில் கலந்து கொண்டனர். அத்துடன் நீர் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு வீதிநாடகமும் வீதிவழியே நடைபெற்றது.

இந்த மாபெரும் நடைபவனியில் யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் செந்தில்நந்தனன், வட மாகாண ஆளுநரின் மேலதிக செயலாளர் ஜெ.செல்வநாயகம்,யாழ் மாவட்டச் செயலக திட்டப் பணிப்பாளர் திருமதி.மோகனேஸ்வரன், வேள்ட் விஷன் திட்டப்பணிப்பாளர் சி.சுதர்சன்,தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் வட மாகாண பொதுமுகாமையாளர் தி.பாரதிதாசன், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் பிராந்திய முகாமையாளர் ஜெகதீசன், திணைக்கள அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (இ-4-9)

## க.பொ.த.சாதாரண தர பெறுபேறுகள் -2015

**வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி**

**தமிழ்மொழி மூலம்**

ஜெ.துவாரகா- 9ஏ, த.கருணாநிதி- 9ஏ, நலக்சிகா- 8ஏபி, ச. திலானி- 8ஏஎஸ், சி.சுரேக்கா- 7ஏ2பி, ர.ஜனந்தினி -7ஏ2பி, மு.சத்தியசந்தியா- 7ஏபிசி, ம.துஷாந்தினி-7ஏபிசி, ஜெ.தர்மசுகி- 6ஏ3பி, ர.தனுஷா-6ஏ3பி, க.பிரியங்கா-5ஏ3பிசி, அ.இமெல்டா- 5ஏ3பிசி, சி.லக்ஸனா- 5ஏ2பிசி, தே.சிவ கௌரி- 5ஏ2பி2சி, சு.நித்தியபூபதி-4ஏ5பி, உ.சரண்யா-4ஏ2பி3சி, அ.மேரி றொசாந்தினி-4ஏபி4சி, சி.யாழினி- 4ஏ3பி2சி, சா.கஸ் தூரி- 4ஏ2பிசிஎஸ், பொ.விேனாத மாலினி- 4ஏ3பிசிஎஸ், ச.சங்கீதா-4ஏ3பி2சி

**ஆங்கிலமொழி மூலம்**

ர.ரஜிந்தா- 8ஏபி , ரவீனா 8ஏபி, சி.அபிவர்ணா- 6ஏ2பிசி, கு.யதுஷா -6ஏபி2சி, சு.சயிந்தவி- 5ஏ4பி, கோ.துஷிக்கா-5ஏ3பிசி

**யாழ்.மத்திய கல்லூரி**

**தமிழ்மொழிமூலம்**

ஆர்.சாந்தரூபன்-9ஏ, ஆர்.பெஞ்சமின்-8ஏபி, எம்.ஜொனாதன்-7ஏபிசி,எஸ்.சிவராதன்-7ஏபிசி,வி.தேனுஜன்-7ஏ2சி,கே.ஜெயராமன்-7ஏ2சி, கே.சஜிதன்-6ஏ3பி,பி.அஜித்-6ஏ2பிசி, என்.நிவேதன்-6ஏபி2எஸ், ஜி.நவநீதன்-5ஏ3பிசி,எஸ்.கோகுல்ராஜ்- 5ஏ3பிசி,ஏ.கஜீவன்-4ஏ2பி3சி, ஆர்.விதுசன்-4ஏ2பிசி2எஸ்,எம். சிவப்பிரியன்-3ஏ5பிசி, எஸ். தர்சன்-3ஏ4பி2சி,ஆர்.சனுஜன்-3ஏ4பிசிஎஸ்,எஸ்.துவாரகன்-3ஏ4பிசிஎஸ், கே.ஜமீஸ்போல்-3ஏ3பி2சிஎஸ்,பி. மதுசன்-3ஏ2பி2சிஎஸ், எஸ். சரண்ராஜ்-3ஏபி5சி,எல். லௌமிகன்-3ஏபி2சி3எஸ்,பி. ஜங்கரன்-3ஏ3சி 2எஸ்

**ஆங்கிலமொழிமூலம்**

சி.இயல்ஸ்பெல்மன்-9ஏ, ரி.சண்முகப்பிரியன்-4ஏ2பி2சிஎஸ்.

**யாழ்.விக்னேஸ்வராக் கல்லூரி, கரவெட்டி**

பி.பிருந்தாபன்-9ஏ, எஸ்.கஜலக்சன்-8ஏபி, வை.சயந்தனா-7ஏ2பி; பி.விதுசாயினி-6ஏ2பிசி,எஸ். நிருபராஜ்-6ஏ2பிஎஸ்,பி. செரின்நிவேதா- 6ஏ2பிசி,எஸ்.சாரங்கன்-5ஏ4பி, ஆர்.கனிரதன்-5ஏ2பிசிஎஸ், எம். அனோஜா-4ஏ4பிசி,என். நிதுசனா-4ஏ3பிசிஎஸ்.

**அருணோதயாக் கல்லூரி**


ம.கஜவரன்-8ஏசி, ப.திவிஜா- 8ஏசி, கு.துவராகன்-6ஏ2பிசி, ச.தமிழரசன்-6ஏ2பிஎஸ், சி.சேயோன்-6ஏ2பிஎஸ், வ.சாத்விகா-5ஏ3பிசி, ச.கௌசல்யா-5ஏ3பிசி, கு.ஜனுசியா-5ஏபி3சி, கௌ.டெனுசன்-5ஏ3பிஎஸ், நி.சிவாஜன்-5ஏபி2சிஎஸ், நா.ததுர்ஷனி-4ஏ2பிசி3எஸ், மிறெங்சன்-4ஏ3பிசிஎஸ், வி.றொசானி-3ஏ5பிசி, இ.ஈழப்பிரியா-3ஏ3பி3சி, பா.டனுஜா- 3ஏ3பி2எஸ், பி.சுகப்பிரியா-3ஏ2பி 3சிஎஸ், தே.அனுசியா- 3ஏ2பி2சி2எஸ், சு.சகேஜன்-3ஏ2பி3சி, பி.நிவேதிகன்-3ஏ4பி2சி.

**யா/மட்டுவில் கமலாசனி வித்தியாலயம்**

கு.அகித்-8ஏசி, தே.கேசுகி-8ஏசி, ம.திவ்வியா-5ஏ3பிசி, கி.கிருஷ்ணாங்கி-5ஏ2பி2சி, ரா.துசியா-5ஏ2பிசிஎஸ், சி.சுபாங்கி-3ஏ2பி2சி, அநிருபன்-ஏ3பி2சி2எஸ், ச.கலைக்ஷன்- ஏ2பி4சிஎஸ், ஆ.அஜீவன்-ஏ2பி4சி, புரதீபா-ஏபி3சி3எஸ், கு.கல் யாணி- ஏ3சி2எஸ், ச.வாசீகன்- 3பி2சிஎஸ்.

## மணவாளக் கோல விழா

நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலயத்தில் நாளை புதன்கிழமை நடைபெறவுள்ள மணவாளக்கோல விழாவை முன்னிட்டு காலை 7.30 மணியளவில் மூலமூர்த்திக்கு பஞ்ச குண்டத்துடன் கூடிய 1008 சங்காபிஷேகமும் பரிவாரமூர்த்திகளுக்கு ஸ்நபன அபிஷேகமும் இடம் பெறும். நண்பகல் 12 மணிக்குக் காலை நிகழ்வுகள் நிறைவு பெற்று அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.மாலை 5 மணிக்கு மாலை உற்சவம் ஆரம்பமாகும்.5.30 மணிக்கு யா/நெல்லியடி மத்திய கல்லூரி மாணவர்களின் பண்ணிசை நிகழ்வும், 6.15 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் பூந்தண்டிகையில்சுவாமி திரு வீதி உலாவும் இடம் பெறும். (இ)



சர்வதேச கெயார் நிறுவனத்தின் ஏற்பாட்டில் வடக்கு மாகாண பிரதேச கலாசார உத்தியோகத்தரகளுக்கான கலாசார வலுவூட்டல் தொடர்பான இரண்டு நாள் செயலமர்வு சுபாஸ் விருந்தினர் விடுதியில் அண்மையில் இடம்பெற்றது. இச்செயலமர்வில் பல்கலைக்கழக அழகியற் கல்வி விரிவுரையாளர் கலாநிதி சுனில் விஜேசிறிவர்த்தன மற்றும் கிழக்கு பல்கலைக்கழக ஓய்வு பெற்ற பேராசிரியர் எஸ். மௌனகுரு ஆகியோர் வளவாளராகக் கலந்து கொண்டனர்.

# தேர்த்திருவிழா இன்று

யாழ்.மானிப்பாய் மேற்கு கட்டுடை அரசடி வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனத்தில் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தேர்த்திருவிழா இடம்பெறும்.

தொடர்ந்து நாளை புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

கடந்த 9 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய இம் மஹோற்சவ விஞ்ஞாபனம் தொடர்ந்து 15 தினங்கள் நடைபெற்று வருகின்றது. (இ-5)

யாழ்.சுன்னாகம் தாளையம்பதி ஐயனார் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் கடந்த 13 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 திணங்கள் நடைபெற்று வருகின்றன.

மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா இன்று செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணிக்கும் நாளை புதன்கிழமை காலை தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது. (இ-5)

# வேதாந்த மடம் மடப்பள்ளி மண்டப திறப்புவிழா நாளை

வேதாந்த மடம் புதிய மடப்பள்ளி மண்டபத்தின் திறப்பு விழா நாளை புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு யாழ்ப் பாணம் கந்தர்மடம் இல. 18, குமாரசாமி வீதி, வேதாந்த மடத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் பா.செந்தில் நந்தனன் பிரதம விருந்தினராகவும் நல்லூர் பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை சிறீ, சைவ மகா சபை செயலாளர் மருத்துவர் ப.நந்தகுமார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ)

# பெருஞ்சாந்தி விழா நாளை

அல்வாய் ஸ்ரீ லக்ஷ்மி நாராயண மனோன்மணி அம்மன் ஆலய திருக்கோவில் நூதன ஆலய நூதன பிரதிஷ்டா ஏக குண்டபக்ஷ திருக்குடப் பெருஞ்சாந்தி விழா நாளை 23 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறும்.

இதனை முன்னிட்டு இன்று செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு எண்ணெய்க்காப்பு இடம்பெறும். (இ-5)

# திருவுருவச் சிலை இன்று திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.சுழிபுரம் கம்பளை ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தானத்தின் அலங்கார உற்சவத் திருவிழாவின் இறுதி நாள் இன்றாகும்.

கம்பளை அம்பாளுடைய திருவுருவச் சிலை பறாளை வீதியில் திறந்து வைக்கப்படவுள்ளது. (இ)

## தற்காலிக வீடு அமைக்க நிதியுதவி வழங்கல்

ஒழுகும் குடிசைக்குள் வசிக்கும் ஒரு குடும்பம் தொடர்பான செய்தி பத்திரிகையில் வெளியானதையடுத்து அக் குடும்பத்திற்கு தற்காலிகமாக வீடு அமைப்பதற்காக நிதியுதவி (காசோலை) வழங்கப் பட்டுள்ளது.

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் உள்ள ஜே/ 411 கிராம அலுவலர் பிரிவில் வசிக்கும் குடும்பம் ஒன்றின் நிலை தொடர்பான பத்திரிகைச் செய்தியையடுத்து அக் குடிசையைநேரில்சென்றுபார்வையிட்ட பருத்தித்துறை பிரதேச செயலாளர் இ.த.ஜெயசீலன் சமூக சேவைப் பகுதியினூடாக தற்காலிக வீடு அமைப்பதற்கான ஏற்பாடுகளை செய்து முதற்கட்டமாக ரூபா 30 ஆயிரம் பெறுமதியான காசோலை வழங்கப்பட்டுள்ளது.

மேலும் அவர்களுக்கு நிரந்தர வீடும் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-60)

# தரம்-5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்- இல.03

★ வலம்புரி கல்விப்பிரிவு ★

பகுதி-I விடைகள்

21.03.2016 அன்று வெளிவந்த வினாத்தாளுக்குரிய விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 3 | 11 | 3 | 21 | 3 | 31 | 1 |
| 2 | 2 | 12 | 3 | 22 | 3 | 32 | 1 |
| 3 | 3 | 13 | 1 | 23 | 2 | 33 | 2 |
| 4 | 3 | 14 | 2 | 24 | 3 | 34 | 2 |
| 5 | 2 | 15 | 2 | 25 | 1 | 35 | 2 |
| 6 | 3 | 16 | 3 | 26 | 3 | 36 | 2 |
| 7 | 2 | 17 | 3 | 27 | 1 | 37 | 1 |
| 8 | 2 | 18 | 3 | 28 | 2 | 38 | 3 |
| 9 | 2 | 19 | 3 | 29 | 3 | 39 | 1 |
| 10 | 3 | 20 | 2 | 30 | 3 | 40 | 3 |


மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்



உயர்திரு
சற்குணானந்தன் கைலாசநாதன்

கல்வி உலகினிலே
ஆசிரியராய் அதிபராய் கோட்டக் கல்வி
அதிகாரியாய் வலிகாமம் வலயத்தின்
பிரதிக்கல்விப் பணிப்பாளராய்
வட மாகாண உதவிக் கல்விப்
பணிப்பாளராய்
சேவையாற்றி ஓய்வுபெற்ற
மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்.
மகத்தான உம்பணி
மக்களுக்காய் தொடரட்டும்...

(பணிநிலை ஓய்வு - 10.03.2016)

(3925)

தி. தவரத்தினம் - ஆசிரியர்
யா/ விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்.


## தேர்த்திருவிழா தெய்வீகச் சொற்பொழிவு

பருத்திநகர் வியாபாரி மூலை பழவத்தை பதியுறை ஸ்ரீ காளி அம்பாள் திருக்கோவில் வருடாந்த அலங்கார உற்சவப் பெருவிழாவில் இன்று செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழா நடைபெறும்.

இத் திருவிழாவன்று ஆலய உற்சவங்களில் தேர்த் திருவிழாவின் மகத்துவம் எனும் விடயத்தில் தெய்வீக ஞானத் தமிழருவி மதுரகவி காரை எம்.பி. அருளானந்தம் தெய்வீகச் சொற் பொழிவு நிகழ்த்தவுள்ளார். இ


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா:12<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L/அரசதொழில்<br>தொ.இ: B/5665 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 44செவ் 4 இல்<br>உயரம்: 153cm<br>தகைமை/தொழில்:சித்தவைத்தியர்<br>தொ.இ: G/4742 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 30<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: BSc, MSc/ பொறியியலாளர் சிங்கப்பூர்<br>தொ.இ: B/5669 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 21<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:O/L<br>தொ.இ: G/4746 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 34சூரிசெவ் 12 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/Lபின்லாந்து PR<br>தொ.இ: B/5670 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 20செவ் 4 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L/தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: G/5648 |
| பிறப்பு: 1972 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 45<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:ஜேர்மன் PR<br>தொ.இ: B/5672 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 44செவ் 8 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:MA/அரசதொழில்<br>தொ.இ: G/4749 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
([illegible])


# அதிருப்தியுடன் இருக்கிறோம்

## அமைச்சர் டிலான் பெரேரா சுட்டிக்காட்டு

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சியின் செயற்பாடுகளினால் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் கடும் அதிருப்தியுடன் உள்ளனர். இந்த நிலைமை நீடித்தால் நாங்கள் கடுமையான தீர்மானம் ஒன்றை எடுக்க வேண்டியேற படும் என்று அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார.

எங்களுக்கு தெரியாமலேயே சில விடயங்களை பிரதமர் முன்னெடுத்து வருகின்றார். இவ்வாறான சந்தர்ப்பங்களில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொறுமையுடன் இருக்கின்றார்.

ஆனால் நாங்கள் எவ்வளவு காலத்துக்கு பொறுமையாக இருப்போம் என்று கூற முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

தேசிய பிரச்சினைக்கு தீர்வுகாணவேண்டும் என்ற உயரிய நோக்கத்துக்காகவே நாங்கள் பல்வேறு விமர்சனங்களுக்கு மத்தியில் அரசாங்கத்தில் நீடிக்கின்றோம். ஆனால் சுதந்திரக் கட்சியின் ஆதரவை பெறுமதியற்றதாக பிரதமர் கருதக்கூடாது என்றும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமைகள் மற்றும் தேசிய அரசாங்கத்தின் செயற்பாடுகள் குறித்து விபரிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின எம்.பிக்கள் தற்போதைய அரசாங்கத்தின் அமைச்சரவையில் இடம்பெறுகின்றனர்.

ஆனால் அவ்வாறு சுதந்திரக் கட்சியினர் அரசாங்கத்தில் அங்கம் வகிப்பதை மறந்துவிட்டே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியினர் செயற்பட்டு வருகின்றனர்.

குறிப்பாக வரவு செலவுத் திட்டத்தில் திருத்தங்களை எமக்கு தெரியாமல் கொண்டு வருகின்றனர். அது எமக்கு தெரியாது. அரசியலமைப்பினை உருவாக்குவதற்காக பாராளுமன்றத்தை அரசியலமைப்பு பேரவையாக மாற்றும் பிரேரணையை கொண்டு வரும் போதும் எம்முடன் பேச்சு நடத்தப்படவில்லை. பின்னர் நாங்கள் முன்வைத்த திருத்தங்களை ஏற்றுக் கொண்டனர். நாங்கள் 9 திருத்தங்களை முன்வைக்க வேண்டியேற்பட்டது என்பதனை இங்கு குறிப்பிடுகின்றோம்.

இவ்வாறு பல்வேறு விடயங்களில் தனித்து செயற்படுவதற்கு ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியினர் முயற்சிப்பதை அவதானிக்க முடிகின்றது.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைவருடன் பிரதமருக்கு முரண்பாடுகள் இருக்கலாம். அதற்காக அனைத்து டாக்டர்களையும் விமர்சிப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது.

தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டுமென்றும் எந்த தரப்புக்கும் பாதிப்பு ஏற்படாத தேர்தல் முறையை கொண்டுவர வேண்டும் என்ற நோக்கத்துக்காகவுமே நாங்கள் பல்வேறு விமர்சனங்களுக்கு மத்தியில் இந்த அரசாங்கத்துடன் இணைந்திருக்கின்றோம்.

ஆனால் அவ்வாறு கடினமான சூழ்நிலைகளுக்கு மத்தியில்பிரதமருக்கு நாங்கள் வழங்கும் ஆதரவு உரிய மதிப்பை பெறாமல் இருக்கின்றது.

இப்படியே சென்றால் தேசிய அரசாங்கத்தின் நோக்கம் நிறைவேறாமல் போய் விடுமோ என்ற சந்தேகம் தற்போது எமக்கு ஏற்படுகின்றது.

விசேடமாக கடந்த 17 ஆம திகதி கொழும்பில் நடைபெற்ற பொது எதிரணியின் கூட்டத்தில் மகிந்தவை ஆதரிப்பதற்காக மக்கள் வரவில்லை. மாறாக ஐ.தே.கவின் எதிர்ப்பாளர்களே அன்றைய தினம் கொழும்பில் ஒன்றுகூடினர் என்பதை உறுதியாக கூற வேண்டும்.

அந்தக் கூட்டத்தையிட்டு நாங்கள் கவலைப்படவில்லை. உண்மையில் அந்தக் கூட்டம் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியே கவலைப்பட வேண்டியுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)



152 ஆவது பொலிஸ் வீரர்கள் தினம் நேற்று காலை வவுனியா பொலிஸ் தலைமையகத்தில் நடைபெற்ற போது... (படங்கள்:- குருமன்காடு செய்தியாளர்)

# போக்குவரத்து இன்றி பின்தங்கிய நிலையில் காணப்படும் பிரதேசங்களில் வாழ்கின்றோம்

## இலவச மின்சார இணைப்பை ஏற்படுத்தித் தருமாறு ஜனாதிபதிக்கு கடிதம்

(பனிக்கன்குளம்)

பனங்காமம் வீரப்பராஜன்குளம்,இளமருதம்குளம், மூன்றுமுறிப்பு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள் தமக்கான இலவச மின்னிணைப்பை பெற்றுதருமாறு கோரி ஜனாதிபதிக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

எமது பிரிவில் இருந்து 2008 இல் இடம்பெயர்ந்துசென்று 2010 இல் திரும்ப மீள் குடியமர்ந்தோம். முல்லைத்தீவு மாவட்டத்தில் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவில் பின்தங்கிய போக்குவரத்தற்ற காட்டுப் பிரதேசங்களில் வசித்து வருகின்றோம். மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவில் கூடுதலான கிராமங்களுக்கு 2010 இலிருந்து 2015 ஆம் ஆண்டுவரை இலவச இணைப்புடன் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

குறித்த பிரதேச செயலாளர் பிரிவில் மிகவும் பின்தங்கிய கிராமங்களான பனங்காமம், வீரப்பராயன் குளம், இளமருதங்குளம், மூன்றுமுறிப்பு ஆகிய கிராமங்களுக்கு மின்சார சபையினால் மின்சாரம் வழங்கும் வேலைகள் 2014 ஆம் ஆண்டு ஆரம்பித்து 2015 ஆம் ஆண்டு 6 ஆம் மாதம் அளவில் தான் முடிவுற்றது. அதன் பின்னர் நாம் எமது விண்ணப்பங்களை மாங்குளம் மின்சார சபையில் சென்று வழங்கினோம். இலவச இணைப்பு நிறுத்தப்பட்டுவிட்டது என்று கூறி எமது இலவச இணைப்புக்கான கடிதங்களை திருப்பி தந்துள்ளனர்.

சில விண்ணப்பதாரிகளிடமிருந்து இலவச இணைப்புக் கடிதங்களுடன் விண்ணப்பங்களை ஏற்றும் உள்ளனர். இது சம்பந்தமாக எமது முறைப்பாட்டு விண்ணப்பத்தை வடக்கு மாகாண சபை முதலமைச்சருக்கு அனுப்பியிருந்தோம். பின்னர் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளரிடம் முறையிட்டு விண்ணப்பத்தையும் பிரதிகள் அரசாங்க அதிபர், மின்சார சபை, வடக்கு மாகாண சபை, வன்னி பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கு அனுப்பியிருந்தோம். எதுவித பதிலுமில்லை.

எனினும் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் நேரில் சந்தித்த போதுதான் இது சம்பந்தமாக சம்பந்தப்பட்டவர்களுடன் கதைத்ததாகவும் விரைவாக உங்கள் கிராமங்களுக்கு இலவச மின்சார இணைப்புடன் மின்சாரம் வழங்கப்படும் எனவும் கூறினார். கேட்டு மகிழ்ச்சியாக இருந்தது. இருந்தும் 2015 ஆம் ஆண்டு மார்கழி மாதமளவில் பனங்காமம் கிராமத்தில் ஒரு சிலருக்கு மின்சார சபையினரால் இலவச மின்சார இணைப்பு பொருத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சென்ற 2016.01.06 ஆம் திகதியில் இதுவரை இலவச மின்சார இணைப்புடன் மினசாரம் கிடைக்காத கிராமங்களுக்கு இலவச இணைபபினை கடன் தவணை அடிப்படையிலும் மின்சாரம் வழங்க இருப்பதாகவும் தொலைக்காட்சியில் தெரிவிக்கப்பட்டதாக அறிந்தோம்.

இவ்விடயம் கேட்டு பெரிதும் வருந்துகின்றோம். மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவில் மேற்காட்டப்பட்ட பின்தங்கிய போக்குவரத்தற்ற கிராமங்களுக்கு இலவச மின்சார இணைப்புச் சலுகையை இல்லாமல் செய்தமை மிகவும் பாரபட்சமான நடவடிக்கை ஆகும்.கூடுதலான கிராமங்களுக்கு இலவச இணைப்புடன் மின்சாரம் வழங்கி விட்டு மிகவும் பின்தங்கிய காட்டு பிரதேசத்தில் போக்குவரத்தற்ற கிராமங்களில் பெரும் சிரமங்களின் மத்தியில் பன்னெடுங் காலமாக வாழ்ந்துவரும் மக்களுக்கு இலவச மின்சார இணைப்பு வழங்கலை நிறுத்தியமை தங்கள் நல்லாட்சியில இவ்விடயம் மிகவும் வருந்தத்தக்கதாகும்.

ஆகவே ஜனாதிபதி அவர்களே! இது சம்பந்தமான உண்மை விடயத்தை கண்டறிந்து எமக்கும் மேற்காட்டிய கிராமங் களுக்கும் இலவச இணைப்புடன் மின்சாரம் கிடைக்க ஆவன செய்து தருமாறு மிகவும் பணிவுடன் தங்களை வேண்டி நிற்கின்றோம்.

இந்தவிடயம் தொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டத்தில் அமைச்சர் றிசாட் பதியுதீன் அமைச்சரவை தீர்மானம் வழங்கியுள்ளதாகவும் முல்லைத்தீவு மாவட்டம் யுத்தத்தால் மிகவும் பாதிக்கப்பட்ட மாவட்டமாகவும் இருப்பதால் அனைவருக்கும் இலவச மின்னிணைப்பு வழங்கப்படுமெனவும் தெரிவித்திருந்தார். எனினும் மின்சாரசபையினர் தமக்கு இதுவரை அவ்வாறான ஒரு அனுமதி கிடைக்கவில்லையெனவும் தெரிவிக்கின்றனர் முல்லைத்தீவு மாவட்ட மக்கள். மின்னிணைப்பை பெறுவதற்காக அலைந்து திரியும் நிலைமை முல்லைத்தீவு மாவட்டத்தில் காணக கூடியதாகவுள்ளமையும் இங்கு குறிப்பிடத் தக்கது. (2-281)




# தாழ்வுபாடு கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

(மன்னார்)

இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்ட நிலையில் மனனார் தாழ்வுபாடு கடற்பரப்பில் வைத்து கடந்த 12 ஆம் திகதிகைது செய்யப்பட்ட 23 இந்திய மீனவர்களில் 17 மீனவர்களை எதிர்வரும் 24 ஆம திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மனனார் நீதவான் ஏ.ஜீ.அலெக்ஸ்ராஜா நேற்று திங்கட்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

இலங்கை கடற்பரப்பினுள்அத்து மீறிநுழைநது 3 படகுகளில் மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இந்திய மீனவர்கள் 23 பேரை கடந்த 12 ஆம் திகதி சனிக்கிழமை மாலை தாழ்வுபாடு கடற்கரை பகுதியில் வைத்து கைது செய்த கடற படையினர் குறித்த மீனவர்களை விசாரணைகளின் பின் மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் பொலிஸார் குறித்த மீனவர்களை மறு நாள் ஞாயிற்றுக்கிழமை நண்பகல் மன்னார் பதில் நீதவான் இ.கயஸ் பெல்டானோ முன்னிலையில் ஆஜர்படுத்தினர்.

இதன்போது விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் பதில் நீதவான் இ.கயஸ் பெல்டானோ குறித்த மீனவர்களில் 20 பேரை நேற்று திங்கட்கிழமை வரை விளக்கமறியலல் வைக்குமாறும் ஏனைய வயது குறைந்த 3 சிறுவர் தொழிலாளர்களையும் நேற்று வரை மன்னாரில் உள்ள சிறுவர் இல்லம் ஒன்றில் அனுமதிக்குமாறும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருந்தார்.

இந்த நிலையில் குறித்த 23 இந்திய மீனவர்களும் மீண்டும் விசாரணைக்காக நேற்று மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

இதன் போது விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதவான் ஏ.ஜீ.அலெக்ஸ் ராஜா விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 20 மீனவர்களில் மேலும் வயது குறைந்த 3 சிறுவர் தொழிலாளர்கள் உட்பட 6 சிறுவர்களை மன்னாரில் உள்ள சிறுவர் இல்லம் ஒன்றில் எதிர்வரும் 24 ஆம் திகதி வயாழக்கிழமை வரை தங்க வைக்குமாறும் ஏனைய 17 இந்திய மீனவர்களையும் எதிர் வரும் 24 ஆம் திகதி வியாழக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு நேற்று திங்கட்கிழமை உத்தரவிட்டுள்ளார். (2-4-281)

# 152 ஆவது பொலிஸ் வீரர்கள் தினத்தையொட்டி மடுக்கந்தை பொலிஸாரால் இரத்ததான முகாம்



(குருமன்காடு)

நாடளாவிய ரீதியில் 152 ஆவது பொலிஸ் வீரர்கள் தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

இந் நிகழ்வு நேற்று காலை வவுனியா பொலிஸ் தலைமையகத்திலும் நடைபெற்றது. இதன்போது யுத்தகாலத்தின் போது வவுனியாவில் உயிரிழந்த பொலிஸ் வீரர்கள் நினைவாக வவுனியா பொலிஸ் தலைமையகத்தில் அமைக்கப்பட்டிருந்த நினைவுத் தூபிக்கு அஞ்சலி செலுத்தி அவர்களது சேவைகள் நினைவு கூரப்பட்டன.

வவுனியாமாவட்டபொலிஸ - பொது மக்கள் நட்புறவு பிரிவினரின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் ஈ.எம். மகிந்த ஏக்கநாயக்க, வவுனியா மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வசந்த விக்கிரமசிங்க மற்றும் பொலிஸ் அதிகாரிகள், இறந்த பொலிஸ் வீரர்களின் உறவினர்கள், பொலிஸார் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை, பொலிஸ் வீரர்கள் தினத்தை முன்னிட்டு மடுக்கந்தையில் பொலிஸாரால் இரத்ததான முகாம் ஒன்றும் நடத்தப்பட்டது. (2-250)

# மதுபானசாலை கழிவுநீர் வீதியில் விடப்படுவதால் துர்நாற்றம்

## வர்த்தகர்கள் குற்றச்சாட்டு

(குருமன்காடு)

வவுனியா வைரவபுளியங்குளத்தில் உள்ள மதுபானசலையில் இருந்து கழிவுநீர் வீதிக்கு வருவதாக அப்பகுதி வர்த்தகர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

வவுனியா வைரவபுளியங்குளத்தில் அமைந்துள்ள மதுபானசாலையொன்றில் இருந்து தினமும் கழிவு நீர் வீதியில் விடப்படுவதனால் அப்பகுதி எங்கும் அந் நீர் தேங்கி நிற்பதனால் துர்நாற்றம் வீசுவதாகவும் தமது வர்த்தக நிலையங்களுக்கு வாடிக்கை யாளர்கள் வருவதில் சிரமங்களை எதிர் கொள்வதாகவும் வைரவ புளியங்குளத்தில் உள்ள வர்த்தகர்கள் சிலர் விசனம் தெரிவித்தனர்.

குறிப்பாக மாலை வேளையில் இவ்வாறு கழிவு நீர் வெளியேற்றப்படுவதாகவும் இது தொடர்பில் வவுனியா நகரசபைக்கு எழுத்து மூலமாக தெரியப்படுத்தியும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் பாதிக்கப்பட்ட வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர். (2-250)

# இரு வெவ்வேறு திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புபட்டதாகக் கூறப்பட்ட நபர் கைது

## பண்டாரிக்குளத்தில் வீசப்பட்டிருந்த சீசீடிவி கமராவின் முக்கிய பாகங்கள் மீட்பு




(குருமன்காடு)

வவுனியாயில் இடம்பெற்ற இரு வேறு திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், குளத்தில் வீசப்பட்டிருந்த திருட்டுப்போன சீசீடிவி கமராவின் முக்கிய பாகங்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஜனவரி மாதம் 27 ஆம் திகதி வவுனியா, ஹொரவப்பொத்தானை பகுதியில் உள்ள பிரபல தளபாட விற்பனை நிலையம் ஒன்றில் உள்நுழைந்த திருடர்கள் அங்கிருந்து ஒரு தொகை பணத்தினை திருடிச் சென்றிருந்ததுடன், அங்கு பொருத்தப்பட்டிருந்த சீசீடிவி கமராவின் சேவர் உள்ளிட்ட முக்கிய பகுதிகளையும் தம்முடன் எடுத்து சென்றிருந்தனர்.

இதேபோல், கடந்த 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு வவுனியா, வேப்பங்குளம் பகுதியில் பிரபல ஐஸ் கிறீம் விற்பனை நிலையம் ஒன்றில் உள்நுழைந்த திருடர்கள் பத்தாயிரம் ரூபாய் பணத்தை திருடிச் சென்றிருந்ததுடன், அங்கு பொருத்தப்பட்டிருந்த சீசீடிவி கமராவின் சேவர், ஆவணப்பதிவு உள்ளிட்ட முக்கிய



பகுதிகளையும் எடுத்துச் சென்றுள்ளனர்.

இவை தொடர்பில் உரிமையாளர்களினால் கிடைத்த முறைப்பாடுகளை அடுத்து விசாரணைகளை மேற்கொண்ட வவுனியா குற்றத்தடுப்பு பொலிஸார் சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், அவரிடம் பெற்ற வாக்கு மூலத்தின் அடிப்படையில் திருட்டின் போது எடுத்துச் செல்லப்பட்ட சீசீடிவி கமராவின் சேவர் உள்ளிட்ட பகுதிகள் பண்டாரிக்குளம் குளத்தில் இருந்து பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளதாகவும் வவுனியா பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (2-250)

# கரப்பந்தாட்ட மைதானம் இளைஞர்களிடம் கையளிப்பு



முல்லைத்தீவு ஐயங்கன் குளப்பகுதியில் தேசிய இளைஞர் மன்றம் மற்றும் மக்கள் பங்களிப்புடன் கரப்பந்தாட்ட மைதானம் இளைஞர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இலங்கை இளைஞர் பாராளுமன்ற செயற்றிட்டத்தின் கீழ் துணுக்காய் இளைஞர் சம்மேளனம் ஐயங்கன் குளத்தில் கரப்பந்தாட்ட மைதானமொன்றினை அமைத்தனர்.

இந்நிலையில் இளைஞர் கழக உறுப்பினர்கள் தங்களுடைய முயற்சியால் மக்களிடமும் உதவிகளைப் பெற்று சமூகத்துடன் இணைந்து பொதுமக்களின் அபிலாசையை நிறைவேற்றும் வகையில் கையளிக்கப்பட்டது.

துணுக்காய பிரதேச இளைஞர சேவை அதிகாரி ஜெ.சுகந்தனின் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் விளை யாட்டு உத்தியோகத்தரினால் மைதானம் இளைஞர்களிடம் கையளிக்கப் பட்டது.

இதேவேளை துணுக்காய் பிரதேசசெயலக பிரிவிற்குட்பட்ட உயிலங்குளம் கிராமத்தில் அமைக்கப்பட்ட விளையாட்டு மைதானமும் இளைஞர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (2-281)




# க.பொ.த(சா/த) பரீட்சை பெறுபேறுகள்-2015

**மு/முள்ளியவளை வித்தியானந்தா தேசிய பாடசாலை**

த.சுவப்னா-9ஏ, சி.கபினுஜன்-8ஏசி ,சி.யுகப்பிரியா-8ஏசி, தீ.ஹம்சவி-8ஏசி, வி.தனோஜன்-7ஏ2பி, ப.சோபிகா-7ஏ2பி, தி.தனுசிகா-7ஏ2பி, பா.கபிசாளினி-7ஏபிசி, சா.ரிசோபனா-6ஏ2பிசி, பொ.ஹம்சா-6ஏ2பிசி, வி.வினுஜா-6ஏபி2சி, மு.ஜெரூதன்-5ஏபி2சிஎஸ்.

**ஆங்கில மொழிமூலம்**

உ.நர்த்தனா-6ஏ2பிசி, கு.உமையந்தி-5ஏ4பி.

(2-292)

**மு/குமுழமுனை மகா வித்தியாலயம்**

வெ.தனோஜன்-8ஏசி, தி.சரணியா-5ஏ3பிசி.

**மு/முல்லைத்தீவு சிலாவத்தை தமிழ் வித்தியாலயம்**

க.துஜீவன்-8ஏசி.

(2-292)

**மு/கலைமகள் வித்தியாலயம்**

சி.நிரூசிகா-7ஏபிசி, ம.அனோஜிதன்-7ஏசிஎஸ்,கு.டன்சிகா-6ஏ2பிசி, றொ.நர்மிதா-6ஏசி2எஸ், க.திலக்சனா-5ஏ3பிசி.

(2-310)

**மு/முள்ளியவளை வற்றாப்பளை மகா வித்தியாலயம்**

ச.லிதுசஷா-8ஏபி, பி.யதுர்சன்-7ஏபிஎஸ், ச.கோபிகாந்-6ஏபி2சி, ப.பிரசாந்-5ஏபி.

(2-292-310)

**மு/மல்லாவி மத்திய கல்லூரி**

சி.விேனோதன்-8ஏஎஸ், இ.கஜீவன்-6ஏ2பி, ஸ்ரீ.பவிசன்-4ஏ4பிஎஸ், கே.ஸ்ரீவித்தியா-4ஏ4பி.

**மு/யோகபுரம் மகா வித்தியாலயம்**

யோ.நிரோஜா-6ஏ2பிசி.

**மு/மாங்குளம் மகா வித்தியாலயம்**

ச.சாரூஜன்-5ஏ4பி, ஸ்ரீ.பாலகணேஸ்-4ஏபி2சி2எஸ், ப.சயந்தா-4ஏ2பி2சிஎஸ், ச.தரணிகா-4ஏபி2சிஎஸ்.

(2-281)

**கிளி/உருத்திரபுரம் மகா வித்தியாலயம்**

ஸ்ரீ.விதுஷா-7ஏ2பி, ப.விஜிதரன்-6ஏ2பிசி, அ.ஜீவிதன்-3ஏ3பிசி2எஸ், வை.கரன்-2ஏ5பிசிஎஸ், வ.யுவப்பிரியா-2ஏ2பி4சிஎஸ், தி.சோபிகா-2ஏபி2சி4எஸ், உ.மேகலா-ஏ2பி4சி2எஸ், பா.தமிழினியன்-ஏ4பி3சிஎஸ், கு.யதீர்சன்-ஏ3பி4சிஎஸ், பு.ஜிந்துஷா-ஏ4பி3சிஎஸ், வா.கௌரி-ஏ2பி3சி2எஸ், சி.தானுகா-ஏ3சி4எஸ்.

(2-271-309)

**கிளி/புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தியாலயம்**

ம.சுபாசினி-3ஏ2பிசி2எஸ், ச.கிருஷா-ஏ2பி3சி2எஸ்.

(2-309)

**கிளி/சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயம்**

ற.லிந்துஜன்-2ஏ2பி4சிஎஸ், க.கலைவாணன்-ஏ3பி3சிஎஸ், வீ.சலோபி-2ஏ5சிஎஸ், இ.ஸ்ரீசயந்தன்-2பி5சி2எஸ், க.கஜன்-பி5சி2எஸ்.

(2-271)

**கிளி/அக்கராயன் மகா வித்தியாலயம்**

யோ.சசிராஜ்-6ஏ2பி,இ.கேமகிரி-7ஏ2பி சு.திகலினி-7ஏபிஎஸ், கெ.சாலினி-6ஏ2பிஎஸ், யோ.புவிசன்-6ஏ2பிஎஸ், ச.டனுசியன்-4ஏ2பி2சிஎஸ், ந.நிரோஜினி-4ஏ4பிஎஸ், ப.புகழ்அருவி-3ஏ3பி2சி.

(2-271)

**கிளி/விவேகானந்தா வித்தியாலயம்**

ம.பேபிகீர்த்திகா-5ஏபி3சி,பு.பிரியந்தன்-4ஏ3பிசி, த.தங்கநிலா-3ஏபி4சி எஸ், சு.பிரசாந்தினி-2ஏ3பி4சி.

(2-271)

**கிளி/கனகாம்பிகைக் குளம் அ.த.க.பாடசாலை**

பு.சிவகாந்தன்-4ஏ3பிசிஎஸ், மே.சுகந்தி-2ஏ4பி2சிஎஸ்,தி.பதுசா-2ஏ3பி3சிஎஸ்.

(2-271)

**பூநகரி நல்லூர் மகா வித்தியாலயம்**

ந.துளசி-2ஏ3பி3சி ஆ.டினோஜன்-2ஏ2பி4சி, க.வானுஜன்-2பி2சி4எஸ், ஜெ.விதுர்சிகா-ஏபி3சி3எஸ், கி.கம்சாயினி-பி4சி3எஸ்.

(2-271)

**கிளி/கனகபுரம் மகா வித்தியாலயம்**

ச.நிருஷா-3ஏ2பி3சிஎஸ், மோ.கயல்விழி-3ஏபி3சி2எஸ், ச.லிசானி-ஏ4பி4சி, வி.வில்வதர்சினி-2ஏ2பி4சிஎஸ், ந.பிரசாந்-ஏ4பி3சி,வி.அஜித்-ஏ3பி3சி எஸ், ம.ரோஜிதா-ஏ2பி4சி எஸ், ம.நிருபாஜினி-ஏ2பி 4சிஎஸ், ச.தனுசன்-ஏபி2சி3எஸ், ர.மதுஷா-ஏபி4சி2எஸ், க.வினுசியா-ஏபி5சிஎஸ், சி.தர்சிகா-ஏபி3சி3எஸ்.

(2-271)

**கிளி/ஊற்றுப்புலம் அ.த.க.பாடசாலை**

ஆ.பானுப்பிரியா-2ஏ2பி4சி, செ.ரேணுகா-பி3சி4எஸ், ஜெ.அனுஜா-ஏ2பி2சி3எஸ்,ச.கயூரி-ஏசி6எஸ்.

(2-309)

**கிளி/புனித அந்தோனியார் றோ.க. வித்தியாலயம்**

அ.லக்சனா -2ஏ3பி3எஸ், சு.கனிவிழி-ஏ2பி 2சி3எஸ், பா.சரண்யா-ஏ2பி 2சி3எஸ், த.யமுனா-ஏ3சி2எஸ், ச.நதீஸா அஸ்வினி-ஏ3சி2எஸ், கு.குவேதா-3சி2எஸ்.

(2-309)

**கிளி/முருகானந்த கல்லூரி**

கே.அபிசிகா-9ஏ, எஸ்.நேஸ்சனா-6ஏ2பிசி, கே.அனுசியா ஜோய்சி-4ஏ4பிசி, ஏ.டிலக்சனா-3ஏபி4சிஎஸ், எஸ்.நிருஜனா-3ஏபி4சிஎஸ், தி.ஆனந்த சாகனா-2ஏ5சிஎஸ், உ.சோபனா-2ஏ2பி2சி3எஸ், வி.பிரிந்திகா-2ஏபி5சிஎஸ்,ஆர்.துசாரா-2ஏ4சி3எஸ், க.ஜானகி-ஏ5பி2சிஎஸ்.

(2-309)

**கிளி/தருமபுரம் மத்திய கல்லூரி**

எஸ்.தட்சனா-7ஏபிஎஸ், எஸ்.கவினன்-6ஏபி2சி, கே.சுகனியா-5ஏ3பிஎஸ், வை.யாஸ்நிலவன்-4ஏபிசிஎஸ், ஆர்.கேதீஸ்-3ஏ3பி3சி, ரி.டிலக்சா-3ஏ2பி3சிஎஸ், ஆ.அன்புநிலா-3ஏபி4சிஎஸ், ஆ.கம்சிஹா-2ஏ4பி2சி, ஜே.ஜேசிந்தா-ஏ 3பி4சி எஸ், கே.விநோதிகா-ஏ4பி3சி.

(2-309)

# மன்னார் பட்டித்தோட்டத்தில் மண் அகழ்வை தடுக்கவும்

## பொதுமக்கள் கோரிக்கை



(பனிக்கன்குளம்)

மன்னார் பட்டித் தோட்டத்தில் பாரிய மண் அகழ்வு இடம்பெற்று வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த பல ஆண்டுகளாக பல ஏக்கர் காணிகளில் மண் அகழ்வு இடம்பெற்று வருவதாக தெரிவிக்கும் மக்கள் மண் அகழ்வு இடம்பெறும் இடம் பாரிய குழிகளாக உருவாகி வருவதாகவும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

பட்டித்தோட்டம் பகுதியில் தனியாருக்கு சொந்தமான காணியிலேயே மண் அகழ்வு தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது.

குறித்த காணியில் காணப்படும் மண் மேடுகளை சமப்படுத்துவதற்கான அடிப்படையில் மண் அகழ்வு செய்வதற்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள நிலையில் ஒரு நாளைக்கு இரண்டு முறைகள் மட்டுமே மண் அகழ்வு செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இருந்த போதிலும் பெக்கோ இயந்திரத்தின் உதவியுடன் மூன்று டிரக்டர் வண்டியில் இரவு-பகலாக மண் அகழ்வு செய்யப்படுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த காணி வடக்கே மன்னார் ஆயரின் காணியையும் தெற்கே பிரதான வீதியையும்கொண்டுள்ளநிலையில் தொடர்ந்தும் மண் அகழ்வு இடம்பெற்றதால் எதிர்கால சந்ததியினருக்கு வீடுகள் அமைத்தல் உள்ளிட்ட கிராமத்தின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையும் என மன்னார் பட்டித்தோட்டம் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக மன்னார் பிரதேச செயலக மற்றும்பொலிஸாரின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ள போதிலும் அதிகாரிகள் எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லையென மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே இது தொடர்பாக உரிய அதிகாரிகள்நடவடிக்கை எடுத்துமண்அகழ்வைதடைசெய்யுமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (2-281)

# உலக நீர் தினம் இன்று

நீர் ஓர் இயற்கை வளமாகும். இயற்கை எமக்குத் தந்த கொடைகளில் நீரானது முக்கியமான இடத்தை வகிக்கின்றது. நீர் பஞ்சபூதங்களில் ''அப்பு தத்துவம்'' என்று சொல்லப்படுகின்றது. நீர் இல்லாமல் பிரபஞ்சத்தில் உயிரினம் வாழமுடியாது. நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்ற ஐம்பூதங்கள் பிரபஞ்சத்தில் செயற்பட்டு ஜீவராசிகளை வாழவைத்துக் கொண்டிருக்கின்றன.

நீரானது உயிராதாரத்திற்கு அத்திவாரமாகவும் தேவையில்லாத கழிவுகளை உடலிலிருந்து அகற்றவும் மிகவும் அத்தியாவசியமாக இருக்கின்றது. நீர் அருந்தாத ஜீவராசிகளே உலகில் இல்லை.

உயிரங்கிகளின் நிலவுகைக்கு மட்டுமன்றி பல்வேறு மனித செயற்பாடுகளுக்கும் நீர் இன்றியமையாத காரணியாக உள்ளது. விவசாய கைத்தொழில் உட்பட பல்வேறு கைத்தொழில் நடவடிக்கைகள், சுத்தப்படுத்தல் நடவடிக்கைகள், வீட்டுத்தேவைகள், போக்குவரத்து ஊடகம், ஓய்வுநேர செயற்பாடுகள், நீர்விளையாட்டுக்கள், சக்தி உற்பத்தி போன்ற பல்வேறு தேவைகளை நிறைவு செய்யும் ஊடகமாக நீர் விளங்குகின்றது.

பூமியில் நீரானது அருவிகள், ஓடைகள், ஆறுகள், ஏரிகள், தடாகங்கள், கிணறுகள், சமுத்திரங்கள், கடல் போன்றவற்றில் காணப்படுகின்றது.

இயற்கையில் நீரானது படிவுவீழ்ச்சி( Precipitation), மேற்பரப்பு நீர்(Surface water), நிலக்கீழ் நீர்(Ground water) என்ற மூன்று மூலங்களில் இருந்து பெறப்படுகின்றது.

புவிமேற்பரப்பில் 70% இற்கும் மேற்பட்ட பகுதி நீரினால் மூடப்பட்டுள்ளது என்பதை நாம் அறிவோம். எனினும் 0.01% எனும் சொற்பமான அளவே நுகரப்படக்கூடியநிலையில் உள்ளது. இதனால்நீர்மட்டுப்படுத்தப்பட்டவளமாகக் காணப்படுகின்றது.

நீரானது வரையறுக்கப்பட்ட வளமாகக் காணப்படுகின்ற போதிலும் எம்மில் பெரும்பாலானோர் நீரைப் பொறுப்பற்ற விதத்திலேயே பயன்படுத்துகிறார்கள்.

உலகிலேயே மனிதன் ஒருவன் தான் பூமியைக் குடைந்து நீரை எடுத்து தன் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்கின்றான். ஆனால் மற்ற பிராணிகளும் விலங்குகளும் மிருகங்களும் பூமியின் மேல் மட்டத்தில் கிடைக்கும் தண்ணீரையே குடித்து வாழ்ந்து வருகின்றன.

சூரிய ஒளிபட்ட நீரில் எலும்பு வளர்ச்சிக்குத் தேவையான சக்தி கிடைப்பதாக மருத்துவ ஆய்வுகள் கூறுகின்றன. மருத்துவ உலகின் தந்தையாகப் போற்றப்படும் ஹிப்போக்ரேடீஸ் The sunlight on water is the foundation of health for mankind என்கிறார். அதாவது "மனித இனத்தை ஆரோக்கியமாக வைத்திருப்பதுசூரியஒளிபட்ட நீர்தான்".

இயற்கைமழையாகப்பொழிந்து சுத்தமான தண்ணீரை கொடுக்கின்றது. சூரியசக்தியுடன் சேர்ந்து அந்நீர் மனிதனுக்கு பலம் கொடுக்கின்றது. ஆனால் மனிதனோ நீரை அசுத்தப்படுத்துகின்றான். இரசாயனக் கழிவுகளை தண்ணீரில் கலந்தும் பூமியில் விட்டும் காற்றில் இரசாயன புகைகளைபரவவிட்டும் மனித இனத்திற்கு எவ்வளவு கெடுதல் செய்ய முடியுமோ அவ்வளவும்செய்து கொண்டிருக்கின்றான்.



நீரில் கரைந்துள்ள உப்புக்களின் அளவின் அடிப்படையில் நீரை நன்னீர் (Fresh water), சவர்நீர் (Brakish water), உவர்நீர்(Sea water) என மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்.


கிணறுகள், தடாகங்கள், ஆறுகள், ஓடைகள், நீர் வீழ்ச்சி போன்றவற்றில் காணப்படும் நீரை நன்னீர் என்றும் கடல்மற்றும் சமுத்திரங்களில் காணப்படும் நீரை உவர்நீர் என்றும் களிமுகங்களில் காணப்படும் நீரை சவர் நீர் என்றும் அழைக்கப்படும்.

உயிரங்கிகளின் நுகர்வுக்குப் பொருத்தமற்ற அளவிற்கு நீருடன் மாசுப்பொருட்கள் கலத்தல் நீர்மாசடைதல் எனப்படுகின்றது. மேற்பரப்பு நீருடன் சேரும் நச்சு இரசாயனப் பொருட்கள் நிலக்கீழ் நீருடன் கலக்கின்றன. நிலக்கீழ் நீர் குடிநீராக பரவலாகப் பயன்படுத்துவதனால் தீங்கு விளைவிக்கும் பதார்த்தங்கள் நீரினூடாக உடலைச் சென்றடைகின்றன. இவை சிறுநீரக நோய்கள், புற்றுநோய்கள் போன்ற அபாயகரமான நோய்களுக்கு ஏதுவாக அமையலாம்.

நீர் மாசடைதலைத் தவிர்ப்பதற்கு துரிதமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாத விடத்து நுகர்வுக்காகப் பயன்படுத்தப்படும் 0.01% அளவு நீரும் எமக்கு கிடைக்காது போய்விடக்கூடிய அபாயம் உள்ளது. இது தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது காலத்தின் தேவையாகும்.

திருமதி ஷா.தாரகா
பொறுப்பதிகாரி
தேசிய நீர்வழங்கல்
வடிகாலமைப்புச்சபை
யாழ்ப்பாணம்.

# நீர் வளம் காப்போம்



இறைபடைப்பில் ஒன்றாகிய நீரானது இப்புவியில் சகல அங்கிகளினதும் வாழ்க்கையில் மிகவும் முக்கியமான தொன்றாகத் திகழ்கின்றது. தாவரங்கள், விலங்குகள் என அனைத்திற்கும் சிறுபராயத்திலிருந்தே நீர்அத்தியாவசியப் பொருளாகக் காணப்படுகின்றது. அந்தவகையில் குடிநீரானது மிகவும் இன்றியமையாததொன்றாகக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவ் உலகில் மூன்றில் இரண்டு பங்கானது நீராகக் காணப்படுகின்ற போதிலும் கூட அந்நீரில் மிகவும் சொற்ப அளவு நீரே தூய நீராகவும் குடிநீராகவும் பயன்படுத்தக் கூடியதாக உள்ளது. இருந்தாலும் அந்நீரானது இன்று அருகி வருகின்றமையினை காணக்கூடியதாகவுள்ளது. அவ்வாறு கிடைக்கின்ற சொற்ப அளவான அந்த நீரினை நாம் சிக்கனமாக பயன்படுத்த வேண்டியதுகட்டாயமானதொன்றாகும்.

தற்காலத்தில் நீரானது மாசடைந்து வருகின்றது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் இன்று நிலத்தடி நீர் மாசடைந்து உள்ளமை பெரும் பிரச்சினையாக உள்ளது. நீரானது மாசடையும் முறைகளாக கிணறுகள் மற்றும் குளங்களுக்கு அருகில் மலசலகூடங்களை அமைத்தல், கடல் நீரினுள் குப்பைகளைக் கொட்டுதல் மற்றும் அதிகளவிலான விவசாய உரப் பாவனைகளை குறிப்பிடலாம். அது மட்டுமல்லாமல் நீர்நிலைகளில் வாழும் உயிரினங்களின் இறப்பு மற்றும் தொழிற்சாலை கழிவுகள் நீருடன் சேர்த்தல் போன்ற காரணிகளினாலும் நீர் மாசடைகின்றது. மனித நடவடிக்கைகளினாலேயே பெரும் பாதிப்புக்கள் ஏற்படுகின்றன.

நாம் நீரினைப் பயன்படுத்தும் போது அதனை எங்கிருந்து பெறுகின்றோம். எவ்வாறு பெறுகின்றோம். அதனை எப்படி பயன்படுத்த வேண்டும் என்பதனை கருத்திற் கொண்டே பயன்படுத்த வேண்டும். அதாவது தேவைக்கேற்ப அளவோடு நீரினை பயன்படுத்த வேண்டும். வீட்டில் பயன்படுத்திக் கொள்ளும் நீரினை சிக்கனமாகப் பேணிக் கொள்ள வேண்டும்.

தற்கால சமூகத்தினை நாம் எடுத்துக் கொள்வோமேயானால் தூய நீரினை பெறுவது மிகவும் கடினமான காரியமாக உள்ளமையை காணக்கூடியதாக உள்ளது. அதனைவிட எமக்கு கிடைக்கும் மழைவீழ்ச்சியும் குறைவாக காணப்படுகின்றமையினால் நீருக்கு பற்றாக்குறையும் வரட்சியும் ஏற்படுகின்றது. இதனை ஈடுசெய்வதாயின் மழைநீரினை சேமித்து வைப்பதன் மூலம் அந்த மழைநீர் மூலமாக வீட்டில் உள்ள நீர்த்தேவைகளினை சுலபமாக நிறைவேற்றிக் கொள்ளலாம். இயற்கை தந்த இனிய பானம் மழைநீரேயாகும். நாம் அதனை வீணடிக்கக்கூடாது.

நீர் அசுத்தமடைவதனால் சூழலுக்கு பிரச்சினை ஏற்படுவதுடன் பல்வேறு நோய்களும் ஏற்படுகின்றன. நாம் அருந்தும் நீரானது சுத்தமான நீராக இருக்க வேண்டும். இல்லையேல் அதனால் வாந்தி பேதி, வயிற்றோட்டம் மற்றும் ஒவ்வாமை போன்ற நோய்களுக்கும் உள்ளாக வேண்டியிருக்கும் நீருடைய தேவையினையும் எதிர்காலத்தில் நீர் நிலைகள் எவ்வாறு காணப்படும் என்பதனையும் அறிந்து கொண்டு நீரினைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இன்று நீரானது மக்கள் மத்தியில் மிகவும் தேவையான ஒருபொருளாக காணப்படுவதோடு மட்டும் அல்லாமல் நீருடைய தேவையும் அதிகரித்து வருகின்றமையை காணக் கூடியதாக உள்ளது. வீட்டில் அன்றாட தேவைகள், போக்குவரத்து, தொழிற்சாலை மற்றும் விவசாய நடவடிக்கைகள் என அனைத்து செயற்பாடுகளுக்கும் நீர் அவசியமானதாகக் காணப்படுகின்றது. அதுமட்டுமல்லாது இன்று உலக சனத்தொகை அதிகரித்து வருகின்றமையினால் நீரினுடைய தேவைகளும் அதிகரித்த வண்ணமே உள்ளன. இன்று சர்வதேச ரீதியில் நீர் பெரும் பிரச்சினையாகவே அமைந்துள்ளது.

தாயைப் பழித்தாலும் தண்ணீரைப் பழிக்காதே எனும் முதுமொழிக்கிணங்க நாம் குடிநீரை வீணடிக்காது சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும். ஒவ்வொருவருக்கும் நீர்த் தேவை உள்ளதென்பதனை அறிந்து கொண்டு செயற்பட வேண்டும். எனவே எமக்கு இறைவனால் கொடுக்கப்பட்ட கொடைதனை நாம் சிதறடிக்கக்கூடாது.

எம் எதிர்கால சந்ததியினரது வாழ்க்கையினையும் கருத்திற்கொள்ள வேண்டும். அவர்கள் வாழ வேண்டும் என்றால் சுத்தமான நீர் தேவை என்பதனை நாம் ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ள வேண்டும். எம் வாழ்நாளில் எமக்கு கிடைக்கின்ற ஒருதுளி நீரையாகிலும் நாம் வீணடிக்கக்கூடாது. அது மட்டுமல்லாமல் இயற்கையில் உள்ள நீர்நிலைகளான ஆறுகள், குளங்கள், ஏரிகள், கிணறுகள், கடல் என்பவற்றினை நாம் தூய்மையாகப் பயன்படுத்தப் பழகிக்கொள்ளல் வேண்டும்.

ஆகவே நீரானது எம் வாழ்க்கையில் மிகவும் முக்கியமானது. உணவில்லாமல் ஒரு வேளை இருந்து விடலாம். ஆனால் ஒரு துளி நீர் இல்லாமல் ஒரு வேளை இருக்க முடியாது. அந்த அளவிற்கு நீர் மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் தாவரங்களுக்கும் மிகவும் அவசியமானதாக காணப்படுகின்றது.

எனவே நாம் அனைவரும் இயற்கையில் உள்ள நீரினை தூய்மையாக பேணி அதன் முக்கியத்துவத்தினை அறிந்து வீணடிக்காமல் பயன்படுத்துவதுடன் எதிர்கால சந்ததி பயன்படுத்தும் வகையில் பேணிப்பாதுகாத்து ஆரோக்கியமான சந்ததி உருவாக வழிவகுப்போம்.

செல்வி.தனுசிகா ஜோர்ஜ் பெர்னாண்டோ
தரம் 11-யா/ஊர்
காவற்றுறை புனித
மரியாள் வித்தியாலயம்.

## வீணாகும் ஒவ்வொரு நீர்த்துளியும் எமக்கு அவசியமான நீர்த்துளியாகும்

தாயைப் பழித்தாலும் தண்ணீரைப் பழிக்காதே என்பது எமது நாட்டுப்புற சொல் வழக்கு. பெற்றதாய்க்கு கொடுக்கும் மரியாதையை விட தண்ணீருக்கு கொடுத்த மதிப்பினை நமது பழமொழிகளில் கண்டு கொள்ளலாம். உயிர்கள் வாழ்வதற்கு நீர் அடிப்படைக் காரணியாக திகழ்கின்றது.

காசைத்தண்ணியாக செலவழிக்கின்றான் என்ற சொல் இனி இல்லாமல்போகும் காலம் வந்துவிட்டது. தண்ணீரை சிக்கனமாக பாவிக்கும் காலமும் தேவையும் வந்து விட்டது. தண்ணீரைத் தேடி அலைவதே மூன்றாம் உலக நாடுகளின் அவலமாக மாறிக் கொண்டிருக்கின்றது.

ஐக்கிய நாடுகள் சபையும் நீர் தொடர்பான விழிப்புணர்வின் பொருட்டு 1992 ஆம் ஆண்டு மார்ச் 22 ஆம் திகதி உலக நீர் தினமாக கடைப்பிடிக்க தீர்மானம் இயற்றியது. நீரின் தேவையும் அத்தியாவசியமும் கருதி விழிப்புணர்வை உருவாக்கும் வண்ணம் இந்நாள் 24 ஆண்டுகளாக கொண்டாடப்பட்டு வருகின்றது.

நீர்ச்சிக்கனம், நீர்த்தூய்மை, நீர்ச்சேமிப்பு குறித்த விழிப்புணர்வு இன்னும் நம்மிடையே உருவாகவில்லை என்பதை நாம் ஒப்புக்கொண்டே ஆக வேண்டும். நீர் தொடர்பான நோய்களால் இறப்பவர்களின் எண்ணிக்கையும் அதிகமாக இருக்கின்றது.

யாழ். குடாநாட்டு மக்கள் தங்களது முழுத் தேவைக்கும் நிலத்தடி நீரிலேயே தங்கியிருக்கின்றார்கள். யாழ்.குடாநாட்டின் குடி நீர் வளம் பெரும் அச்சுறுத்தலுக்குள்ளாகி வருகின்றது. எதிர்காலத்தில் குடாநாடு பெரும் குடிநீர்ப் பற்றாக்குறையை சந்திக்க நேரிடும்.

இதன் காரணமாக நாம் பணத்தை சேமிப்பில் இட்டு வட்டி மூலம் பணத்தை பெருக்குவதனைப்போன்று நீரையும் நாம் சேமித்து நல்ல நீரை நிலத்தின்கீழ் அதிகரிக்கவேண்டும்.

பு.அன்றூ பிரவீன்
சமூக அபிவிருத்தி
உதவியாளர், கிராமிய நீர்
வழங்கல் அலகு, தேசிய
நீர் வழங்கல்,
வடிகாலமைப்புச்சபை

# ஐஸ்வர்யம் தரும் பங்குனி பௌர்ணமி

பௌர்ணமி நாட்கள் தெய்வ வழிபாட்டுக்கு உகந்த நாட்களாக கருதப்படும் நாட்களில் ஒன்றாகும். பௌர்ணமியில் துர்க்கை, காளி முதலான சக்திகளை வழிபடுபவர் சிலர். சிவபெருமானுடைய வேறு வடிவங்களான ஸ்ரீசரபர், வைரவர் முதலான திருக்கோலங்களைவழிபடுவதும் உண்டு. நிறைமதி நாள் எனப்படும் பௌர்ணமி சிவனை விரதம் இருந்து வழிபடுவதற்குரிய நாட்களில் ஒன்றாக சொல்லப்பட்டுள்ளது. இந்த விரதத்தை மார்கழி மாதம் தொடங்குவர்கள்.ஒவ்வொரு மாதத்திலும் ஒவ்வொரு விஷேட அபிஷேகம் இடம் பெறும்.

சிவபெருமானுக்கு பௌர்ணமி நாட்களில் அபிஷேக ஆராதனை செய்து வழிபட்டால் பதினாறு பேறுகளும் பெற்று பல்லாண்டு வாழ்வார்கள். பங்குனி மாதம் பௌர்ணமியில் மஞ்சள் பட்டாடை அணிவிப்பார்கள். வஜ்ர மணிகள் 100 கொண்ட மாலையை சாத்துவார்கள். மகிழம்பூ பூக்களை பூஜை மற்றும் மாலைக்குப் பயன்படுத்துவார்கள். பிட்டுணவு படைப்பார்கள். இப்படி வழிபட செல்வம் செழிக்கும் என்று ஆகமங்களில் சொல்லப்பட்டுள்ளது. பங்குனி மாத பௌர்ணமியில் அபிஷேகத்தில் எல்லாப் பொருட்களையும் பயன்படுத்துவார்கள். இருந்தாலும் கூட தயிரால் அபிஷேகிப்பதில் விஷேட நன்மை உண்டாகும். பங்குனி மாதம் ஹோமம் வளர்த்து அபிஷேகம் செய்ய விரும்புவோர் ஹோம குண்டத்தை அர்த்த சந்திராகாலமாக அதாவது பிறைச்சந்திரன் வடிவில் அமைக்க வேண்டும். கொக்கிறகு, தாமரை, காசிதும்பை மலர்களை மாலைக்கும் அர்ச்சனைக்கும் பயன்படுத்த வேண்டும். சுவாமிக்கு வெள்ளையும் மஞ்சளும் கலந்த வஸ்திரம் சாத்த வேண்டும். பிட்டு படைக்க வேண்டும். இப்படி வழிபட புத்திர பிராப்தியும் ஐஸ்வர்ய பிராப்தியும் கிடைக்கும் என்கிறது காரணாகமம். ஆலயங்களில் பசுந்தயிர் அபிஷேகித்து சாதம் படைப்பார்கள்.

ஒளி விளங்கும் உத்தரநாளில் அதாவது பௌர்ண மியுடன் கூடிய உத்தரத்தில் நடைபெறும் உற்சவத்தை தரிசிப்பவர்கள் இம்மையில் அனைத்தும் பெற்று மறுமையில் முக்தி அடைவார்கள்.

பங்குனி பௌர்ணமி நாளிலும் உத்தர நாளிலும் சிவனை வழிபட்டு எல்லாப் பேறும் பெறுவோமாக.

**சிவஸ்ரீ.வி.பிரணவன்**
ஐயர்
யாழ்/வண் கலட்டி
ஸ்ரீவீரகத்தி விநாயகர்
தேவஸ்தானம்.

# உடற்பருமனை சிறுவயதிலிருந்தே கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தால் நலமாக வாழலாம்

ஒருவரின் உடலின் எடை, இருக்க வேண்டியதிலும் பார்க்க குறைவாகவோ அல்லது கூடுதலாகவோ இருப்பது ஆரோக்கியமானதல்ல. வறுமையான சூழலில் வாழ்வோருக்கு போதிய சரி சம விகித உணவு கிடைக்காததனால் அவர்கள் எடை குறைந்தவர்களாக இருப்பதை அறிவீர்கள். இவர்களில் போசாக்கு குறைவினால் ஏற்படும் நோய்கள் , இரத்தச் சோகை, நோய் எதிர்ப்புச் சக்தி குறைபாடு உள்ளிட்ட பல பிரச்சினைகள் ஏற்படலாம். நோய் எதிர்ப்புச் சக்தி குறைபாட்டினால் பல்வேறு தொற்று நோய்களும் ஏற்படும் சாத்தியம் அதிகரித்திருக்கும். இவர்களது எடை தேவையான அளவிலும் குறைவாக இருக்கும். வேலைகள்செய்வதிலும்விளையாட்டுக்களில் பங்கேற்பதிலும் கூட சிரமத்தை எதிர்கொள்ளக் கூடும்.

எடை சிலரில் இருக்க வேண்டிய எல்லையைத் தாண்டி இருப்பதுண்டு. இன்னும் ஒரு படி மேலாக சிலர் உடற்பருமனால் பாதிக்கப்படுகின்றார்கள். தேவைக்கு அதிகமாக மாப்பொருள் மற்றும் கொழுப்பு உணவுகளை உட்கொள்வதனாலும் சரிசமவிகிதத்தில்உணவை உட்கொள்ளாதமையாலும் மாத்திரமின்றி உடல் இயக்கம் குறைவாக தேகாப்பியாசம் எதுவுமின்றி இருப்பதனாலும் உடற்பருமன் ஏற்படுகிறது. அபூர்வமாக ஒரு சிலரில் பரம்பரை காரணிகளாலும் ஓமோன்களின் அளவு மாறுபட்டிருப்பதாலும் உடல் எடை அதிகரிக்கலாம்.

**உடல் எடையை ஆரோக்கியமாக வைத்திருத்தல்**

ஒருவரின் உடல் ஆரோக் கியமாக இருக்கின்றதா? இல்லையா? என்பதை தீர்மானிப்பதில் முன்னிலையில் இருப்பது உடல் எடையேயாகும். எனவே ஆரோக்கியத்தைப் பேணும் ஒவ்வொருவரும் தமது உடல் எடையை கண்காணித்து கட்டுப்பாட்டு எல்லைக்குள் வைத்திருத்தல் அவசியமாகும். இன்றைய இயந்திரமயப்பட்ட நவீன உலகில் உடற் பருமன் என்பது பரவலாகி ஆரோக்கியத்திற்கு சவாலாக உள்ளது. உடற்பருமனால் ஒருவருக்கு பல்வேறு நோய்கள் ஏற்படலாம் என்பதால் உடலின் எடையைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க வேண்டுமென் உலக சுகாதார நிறுவனம் அறிவுறுத்தியுள்ளது. ஒருவரது வயதிற்கும் உயரத்திற்கும் உடல் எடைக்கும் இடையே ஒருவித சமநிலை பேணப்படவேண்டும். ஒருவருடைய எடை எவ்வளவுக்குள் இருக்கவேண்டும் என்பது பற்றி ஒரு சமன்பாட்டை வகுத்துள்ளார்கள். இதனடிப்படையில் ஒருவருக்கு இருக்கவேண்டிய உடல் எடை சுட்டெண் என்ற அலகு பயன்படுத்தப்படுகின்றது. ஒருவருடைய எடையை கிலோகிராமில் (Kg) அளந்து அதை அவரது உயரத்தை மீற்றரில் அளந்ததன் வர்க்கத்தால் வகுக்க உடல் எடைச் சுட்டெண் வரும்.

$$\text{உடல் எடை சுட்டெண் (BODY MASS INDEX-BMI)} = \frac{\text{நிறை (கிலோ கிராமில்) (Kg)}}{\text{உயரம் மீற்றரில்}^2\ (m^2)}$$

உடல் எடை சுட்டெண் எமது நாட்டைப் பொறுத்தவரையில் 23 இற்குள் பேணப்படுவது சிறந்தது. அதே வேளை 18 இற்கு குறையாமலும் பார்த்துக்கொள்ளவேண்டும். இந்த எடையைப் பேணுவதில் கட்டுப்பாடான சரிவிகித உணவு வகைகளை உட்கொள்வதுடன் வாழ்க்கை நடைமுறையில் இயங்கு நிலையில் செயற்படவேண்டும். அதிகம் உடல் உழைப்பு இல்லாதவர்கள் தேகாப்பியாசம் செய்யவேண்டும். இடைநேர உணவு வகைகளையும் வேறு உணவுகளையும் இயன்றளவு தவிர்ப்பதுடன் உணவில் நார்ப்பொருள் நிறைந்த தானிய வகைகள், மரக்கறி வகைகள், பழவகைகள் என்பவற்றைச் சேர்க்கவேண்டும். உடல் பருமனைக் குறைத்து எடையைக் கட்டுப்படுத்தாமல் விட்டால் அதனால் நாற்பதுக்கும் மேற்பட்ட நோய்கள் ஏற்படலாம் என மருத்துவஆய்வுகள் தெரிவிக்கின்றன.



**உடற்பருமனால் ஏற்படும் நோய்கள்**

உடற்பருமனால் ஏற்படுகின்ற பல்வேறு நோய்களில் நீரிழிவு, உயர் குருதி அழுத்தம், உயர் கொலஸ்ட்ரோல் முக்கியத்துவம் பெறுகின்றன. இவற்றால் நேரடியாக ஏற்படும் தாக்கங்களை விட இந்நோய்களின் கட்டுப்பாடின்மையால் பாரதூரமான நோய் நிலைகளும் அவய இழப்பும் மரணமும் ஏற்படலாம். மாரடைப்பு, ஸ்ரோக், பக்கவாதம், பார்வைக்குறைபாடு, சிறுநீரக செயலிழப்பு, இதய செயலிழப்பு ஏற்படலாம். எதிர்ப்பு சக்திக் குறைபாடு, குழந்தைப்பேறு தாமதமாதல், தாம்பத்திய உறவில் நாட்டமின்மை, நாள முடிச்சு, மூலவருத்தம், ஒற்றைத் தலைவலி, மூட்டுவாதம், புற்று நோய் என்பனவும் உடற் பருமன் உள்ளவர்களுக்கு ஏற்படும் சாத்தியம் அதிகம்.

தம்பதியினர் உடற்பருமனானவர்களாக இருப்பின் இவர்களது ஓமோன்களின் சுரப்பிலும் பாதிப்பு ஏற்படுகின்றது. அதிகளவு எடையும் சேர்ந்து தம்பதிகளுக்கிடையேயான தாம்பத்திய உறவு, நெருக்கம் என்பனவும் குறைந்துவிடும். இதனால் மகப்பேற்றுக்கான சாத்தியம் குறைவடையும். உடற்பருமன் உள்ள பெண்களின்சினைப்பையில்(OVARY) நீர்க்கட்டிகள் தோன்றுவதால் கருமுட்டை உற்பத்தி பாதிப்புறும்.

கருமுட்டையின் உற்பத்தியும் வெளியேற்றமும் தடைப்படும் போது குழந்தைப் பேற்றிற்கான சாத்தியம் அற்றுப்போய்விடும்.இதனால் உடற்பருமன் உள்ளவர்கள் குழந்தைப் பேற்றிற்காக வைத்திய ஆலோசனையை நாட வேண்டிய சூழ்நிலை ஏற்படலாம்.அரச மரத்தை சுற்றி, ஆலய வீதிகளில் அடி அளந்தால் குழந்தைப் பாக்கியம் கிட்டும் என நமது முன்னோர்கள் கூறுவதுண்டு. மரங்களைச் சுற்றுவதன் மூலமும் ஆலய வீதிகளில் வலம் வந்து பிரதிட்டை செய்வதன் மூலமும் உடலுக்கு அப்பியாசம் கிடைப்பதனால் உடற்பருமன் குறைந்துவிடும். இவ்வாறு உடற்பருமன் குறைவதனால் தாம்பத்திய ஈடுபாடு இருபாலாரிலும் அதிகரிக்கின்றது.பெண்களின் உடற்பருமன் குறைவதுடன் சூலகத்திலுள்ள நீர்க்கட்டிகள் குறைவடைந்து கருமுட்டை வெளியேற்றமும் சீராகும்.இதனால் தான் எமது முன்னோர்கள் இவ்வாறு கூறியிருக்க வேண்டும் என எண்ணுகிறேன்.


உடல் எடையை சிறுவயதிலிருந்தே பேண வேண்டும்.என மருத்துவர்கள் ஆலோசனை கூறுகிறார்கள். அவ்வாறே உணவுக் கட்டுப்பாட்டையும் சிறுவயதிலேயே ஆரம்பிக்க வேண்டும்.உடல்எடை அதிகரித்த பின்னர் குறைப்பது சிரமம். இதை விடஉடல் எடையை அதிகரிக்காமல் பார்த்துக் கொள்வது சிறந்ததாகும். இன்றைய சிறுவர்கள் ஓடி விளையாடுவது குறைவு.கணனிகளின் முன்னால் மணிக்கணக்கில் அமர்ந்து விடுகின்றார்கள். உடல் வியர்ப்பது குறைவு. மேலதிக சக்தி எரிக்கப்படாதமையினால் உடல்எடை அதிகரித்து பருமனடைகிறது. நவீன உலகின் வேக உணவு கலாசாரத்தினால் சரிவிகித உணவும் கிட்டுவதில்லை. இனிப்பு, பிஸ்கட், கேக், பானங்கள் என்பனவும் இடைநேர பொரித்த உணவுகளும் அதிகம் பாவிக்கப்படுகின்றன. இவையாவும் உடற்பருமனை ஏற்படுத்தும். உடற்பருமனுக்கு தேவைக்கு அதிகமான உணவு,நேரம் தப்பிய உண வுப்பழக்கம், உடல் உழைப்பு இல்லாதிருப்பது, சரிசம விகிதமான உணவை உட்கொள்ளாமை என்பன உடலைப் பெருக்க வைக்கிறது.

உடல் எடையைப் பராமரிக்காது விட்டால் உடற்பருமன் ஏற்படும். இது மனதளவிலும் பாதிப்பை ஏற்படுத்தி தன்னம்பிக்கையை இழக்க வைக்கும்.உடல் பெருத்தவர்களுக்கு தாழ்வு மனப்பான்மையும் ஏற்படும்.இளம் வயதிலேயே பல்வேறு தொற்றா நோய்கள் ஏற்படும். இனிமையாக வாழ வேண்டிய இளமைப்பருவம் சுவையற்றதாகிவிடும்.மனித வாழ்வுச் சக்கரத்தை அர்த்தமுள்ளதாக தொடர்வதற்கான குடும்ப அலகிலும் பேதங்களும் பிரச்சினைகளும் ஏற்படலாம். தாம்பத்திய உறவு என்பது குடும்ப வாழ்வில் அத்தியாவசியமான ஒன்று.எனவே அதிக கவனம் எடுத்து உடலின் எடையை கட்டுப்பாட்டுள் வைத்திருங்கள்.

Dr. ச. முருகானந்தன்

# பண்ணாகம்
# விசவத்தனை முருகமூர்த்தி கோயில்
# மஹோற்சவ "ரதோற்சவ" பொன்விழா சிறப்புமலர்





## குகன் உண்டு குறை இல்லை

ஈழத்துப் பழனி எனப் போற்றக்கூடிய வகையிலே வானுயர்ந்த தருக்களும் கழனியும் சூழ்ந்த இயற்கை எழில் மிகுந்த விசவத்தனை எனும் பதியிலே முன்னை ஒருவனை நம்புகி லேன் பின்னை ஒருவரை நான் பின் செல்லேன் பன்னிரு கை வேலப்பா என தஞ்சமடையும் அடியார்களைக் காத்து ரட்சிக்கும் ஆறுமுக வள்ளல் இன்று தேரேறி திருவீதியுலா வருகின்றார். ஆலயங்களிலே நிகழும் விழாக்களிலே மஹோற்சவம் மிகவும் மேன்மையானதாகும். இறைவனின் பஞ்சகிருத்தியங்களை உணர்த்துவதுடன் அடியார்களுக்கு போக மோட்சங்களை தரவல்லது.

1966 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்ட இரதம் இவ் ஆண்டு பொன்விழா காணுகிறது. இவ்வேளையிலே இப்பெரும் கைங்கரியத்தை ஆற்றிய கலைஞர்களையும் பரிபாலனசபையினரையும் நினைவு கூருகின்றோம். அவர்களைப் போற்றுகின்றோம். முத்தமிழால் வைதாரையும் வாழவைக்கும் முருகப் பெருமானை இன்று தேரிலே தரிசிக்கும் அனைவருக்கும் சகல செல்வ யோக மிக்க பெருவாழ்வமையப் பிரார்த்தித்து எமது நல்லாசிகளை தெரிவிக்கின்றோம்.

வேல் உண்டு வினையில்லை மயில் உண்டு பயமில்லை குகன் உண்டு குறையில்லை இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க.

ஸ்ரீவத்ஸ.வ.இராஜேஸ்வரக் குருக்கள்
மஹோற்சவ குரு.



## பரிபாலன சபைத் தலைவரின் வாழ்த்துச்செய்தி

பண்ணாகம் விசவத்தனை முருகப் பெருமானின் மஹோற்சவத்தின் இரதோற்சவ பொன்விழா சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகிறேன். 1966 இல் உருவாக்கப்பட்ட எம்பெருமானின் சித்திரத்தேர் இன்றையதினம் ஐம்பதாவது வருடமாக வீதிவலம் வரும் காட்சியை காண நாம் எல்லோரும் கொடுத்து வைத்திருக்க வேண்டும். அவனருளால் அவன்தாள் வணங்கி இன்றைய சிறப்புமிக்க நன்னாளில் எம்பெருமானின் திருவருள் அனைவருக்கும் பரிபூரணமாக கிடைக்க அவன் பாதம் பணிகின்றேன்.

நா.க.கிருஸ்ணமூர்த்தி
பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி
கோயில் பரிபாலன சபைத் தலைவர்.

வி.ஆறுமுகம் அவரின் குமாரர்
தம்பித்துரை சகோதரர்களால்
உருவாக்கப்பட்டது.
31.03.1966

பழைமையும் சிறப்பும்மிக்க பண்ணாகத்திலே தனிப்பெரும் தலைவனாகவும் கருணைக்கடலாகவும் வீற்றிருந்து தன்னுடைய கடைக்கண் பார்வையினாலே பண்ணாகத்தினை அருளாட்சி புரியும் விசவத்தனை முருகப்பெருமானின் இவ்வருட மஹோற்சவத்தின் இரதோற்சவப் பொன்விழா ஆண்டாக அமைவது சிறப்பென்னே!

முத்தமிழால் வைதாரையும் வாழவைக்கின்ற முருகப்பெருமானுக்கு இற்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பே ஓர் சித்திரத் தேரை அமைத்துவிடவேண்டும் என்ற முன்னோர்களின் இறை கைங்கரியமாக உருவாக்கப்பட்டதே இச்சித்திரத்தேராகும். எம்பெருமானுக்கு இச்சித்திரத்தேர் அமைந்த வரலாறு பெருமை வாய்ந்தது. முருகப்பெருமானின் திருவருளும் அமரர்களான எதிர் வீரசிங்கம் (கந்தசாமி வாத்தியார்), பெ.அப்பாப்பிள்ளை ஆகியோரின் விடாமுயற்சியாலும் தூரநோக்கு சிந்தனையாலும் பண்ணாகத்து மக்களின் ஒற்றுமையினாலுமே இச்சித்திரத்தேர் அமைந்தது என்றால் அது மிகையல்ல. எம்மூர் மக்களின் பூரண பங்களிப்புடன் சேகரிக்கப்பட்ட நிதியினைக் கொண்டு 1964 ஆவணியில் தேர் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டது. ஸ்தபதி ஆறுமுகம் தம்பித்துரை சகோதரர்களின் கைவண்ணத்தில் அழகிய இரதமாக உருவாகி 31.03.1966 இல் வெள்ளோட்டமும் இடம்பெற்றது. ஊர்மக்களின் ஒற்றுமைக்கு சாட்சியாக இச்சித்திரத்தேர் பரிணமிக்கின்றது. இச்சித்திரத்தேரில் பொருத்தப்பட்ட 108 மணிகளும் எம் ஊரில் வாழ்ந்த, வாழ்கின்ற 108 பெண்களின் பெயரில் உபயமாக அமைந்தமை சிறப்பானது.

இத்தகு பழைமையும் வரலாற்றுச் சிறப்பும் மிக்க சித்திரத்தேர் மன்மத வருடத்தில் 22.03.2016 இன்று ஐம்பதாவது வருடமாக வீதிவலம் வருகின்றது. பூமழை பொழிய பூலோக நாயகன் தேரேற வரும் காட்சி தேவர்களாலும் முனிவர்களாலும் இலகுவில் காணமுடியாத முருகப்பெருமானின் ஆறுமுக தரிசனமாகும்.

இன்றைய நன்னாளில் ஆறுமுகப்பெருமானின் பொன்விழா இரதோற்சவத்தினை காண வந்திருக்கும் அடியவர் அனைவருக்கும் எம்பெருமானின் திருவருள் என்றென்றும் நிறையப்பெற முருகப்பெருமானின் திருப்பாத கமலங்களை சிரந்தாழ்த்தி வணங்குகின்றோம்.

**குறிப்பு: இவ்வருட மஹோற்சவம் நிறைவடைந்தவுடன் எம்பெருமானின் திருத்தலத்தில் மிகப்பெரிய திருப்பணி வேலைகள் இடம்பெறவுள்ளது. முருகப்பெருமானின் மீளா அடியார்கள் யாவரும் இத்திருப்பணியில் தம்மையும் பரிபூரணமாக இணைத்துக்கொண்டு அவன் அருளுக்கு பாத்திரமாகுங்கள்.**

தொகுப்பு:
மு.பாபுஜி
செயலாளர், பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி கோவில் பரிபாலன சபை

விளம்பர அனுசரணை
இளைஞர்கள்
பண்ணாகம்

(3956)

# மகிந்த அணியின் நாசகார செயல்களை எதிர்த்து விரைவில் பாரிய ஆர்ப்பாட்டம்

## விக்கிரமபாகு கருணாரட்ன அறிவிப்பு


(கொழும்பு)

நாட்டின் சகல தொழிற்றுறைகளிலும் தமது ஆதரவாளர்களை நிலை கொள்ளச் செய்துள்ள மகிந்த அணியினர் தற்போது எல்லாத் தொழில் துறைகளினுள்ளும் குழப்பங்களை ஏற்படுத்துகின்றனர். சர்வதேச மட்டத்தில் யுத்தக் குற்றவாளிகளாகிவிட்டனர். எனவே மகிந்த அணியில் உள்ள 30 பேரும இளைஞர்களை இனவாதிகளாக்கி இவர்கள் ஊடாக தம்மை பாதுகாத்துக் கொள்ள முற்படுகின்றனர். மக்களை ஒன்று திரட்டி விரைவில் அவர்களின் முயற்சிக்கு முற்றுப்புள்ளி வைப்போமென நவ சம சமாஜ கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்தார்.

மகிந்த அணியினர் கொழும்பில் நடத்திய கூட்டம் குறித்து வினவிய போதே அவர் மேற கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த காலத்தில் ஜனநாயகத்திற்கு முரணாக ஆட்சி செய்த மகிந்த ராஜ பக்ஷ உள்ளிட்ட முப்பது பேர் அடங்கிய குழு தற்போது நாட்டில் குழப்ப நிலையை ஏற்படுத்தி பல்வேறு நாசகார செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

முன்னாள் ஜனாதிபதியாக இருந்த காலப் பகுதியில் மகிந்தவின் ஆதரவாளர் குழுக்களில் சிலர் நாட்டின் சகல தொழிற்றுறைகளிலும் சேவையில் அமர்த்தப்பட்டனர். இவர்கள் தான் நாட்டில் ஏற்படும் மின் வெட்டு, துப்பாக்கிச் சூடு, இனவாதம் தூண்டல் உள்ளிட்ட நாசகார செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் என்பது விரைவில் வெளிச்சமாகும்.



இவர்கள் கடந்த அரசாங்கத்தில் இருந்த போது அதிகார போக்கில் யுத்தக் குற் றங்களில் ஈடுபட்டமை தற் போது சர்வதேச அரங்கிலும் முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகாவின் ஊடாகவும் படிப்படியாக வெளிச்சத்திற்கு வருகின்றன.

இந்நிலையில் இராணுவத்தினரை சர்வதேச நீதிமனறத்திற்கு அனுப்பி தண்டிக்கப் போகின்றனர் என்ற எண்ணக்கருவை அவர்கள் மத்தியில் உருவாக்கி அவர்களை அரசாங்கத்திற்கு எதிராக செயற்படச் செய்து குழப்பத்தை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர்.

இராணுவத்தை மட்டுமல்லாது இளைஞரிடத்தில் இனவாதம் பாடி அவர்களின் மனதிலும் ஆழமாக இனவாதத்தை விதைக்க முற்படுகி ன்றனர்.

இவ்வாறு இளைஞர் மத்தியில் இனவாத குழுவொன்றை தோற்றுவித்து அதன் மூலம் இன்று சர்வதேச மட்டத்தில் குற்றவாளிகளாக்கப்பட்டுள்ள மகிந்த உட்பட 30 பேரையும் காப்பாற்றிக்கொள்ள முயற்சிக்கின்றனர்.

இவர்களின் அட்டகாசங்கள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் இதற்கு வெகு விரைவில் முற்றுப்புள்ளி வைக்க நாம் தீர்மானித்துள்ளோம். அரசியல் சக்திகளை விட மக்கள பலம் போதும் என்ற விதத்தில் நவ சமசமாஜ கட்சி, மக்கள் விடுதலை முன்னணியிலிருந்து விலகிய ஏனைய தரப்புக்கள், தொழிற் சங்கங்கள் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் விரைவில் ஆர்ப்பாட்டம் நடத்துவோம் என மேலும் தெரிவித்தார். (இ-5)


**பாராட்டுகின்றோம்**

பண்ணாகம் விசுவத்தனை முருகன் ஆலய ரதோற்சவ பொன்விழாவினை மனதார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:-
பண்ணாகம் முத்தமிழ் மன்றம்
அறநெறிப்பாடசாலை
077 085 7515

(3957)

**வீடும் வளவும் விற்பனைக்கு**

கோண்டாவில் பொற்பதி வீதியில் காளி கோயிலுக்கு அண்மையில் 4 பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக் குண்டு.

தொடர்பு: 077 703 7058

(3943)

**யாரிடம் பேசுவது?**

நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் ஒன்றுமே முடியாது.
நான் என்ன செய்வது?
என்று எண்ணுகின்றீர்களா ......

எம்முடன் பேசுங்கள்.

**கை கொடுக்கும் நண்பர்கள்**

தினந்தோறும் காலை 9.00 முதல் பி.ப 1.00 மணிவரை
104, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
• மதசார்பற்றது • ரகசியம் பேணப்படும்
021 222 8117, 077 900 8776
Sponsored by Enlightenment Circle , UK

(C-3712)

**காணி விற்பனைக்கு**

கோண்டாவில்சந்திக்குஅண்மையில் பலாலி வீதியுடன் வியாபார நிலையம் அமைக்கக் கூடிய வகையில் 3 பரப்புக் காணிவிற்பனைக் குண்டு.

தொடர்பு:- 077 703 7058

(3943)


## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 669

Search for people, places and things — Nagendram Home

**ரதி**




**தர்மசீலன்**



"அரிய புகைப்படங்கள்"
சென்னை பல்கலைக்கழகத்தில் 1948ஆம் வருடம் எடுத்த புகைப்படம்.. படிக்கும்போது மாணவர்கள் தூங்காமல் இருக்க அவர்கள் முடியை இப்படி கட்டி வைத்துள்ளனர்...

**ராஜமணி**





**நிஷாந்த்**




**வின்ஜக்ஷன்**



**டிலக்ஷி**




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# லெப்.கேணல் சம்மி குணரட்ன வைத்தியசாலையில் அனுமதி

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமல் போன சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் கடந்த ஒன்பது மாத காலமாக விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ள, லெப்டினன்ட் கேணல் சம்மி குணரட்ன வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இராணுவ புலனாய்வுப் பிரிவின் கட்டளை அதிகாரியாக கடமையாற்றி வந்த சம்மி குணரட்ன, நேற்று முன்தினம் இரவு திடீரென சுகவீனமுற்றதாகவும், அவரை கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதித்ததாகவும் சிறைச்சாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நீரிழிவு நோயினால் சம்மி குணரட்ன பாதிக்கப்பட்டிருந்தார் என தெரிவிக்கப்படுகிறது. இதற்காக சிறைச்சாலையின் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த போதிலும், உடல் நிலையில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை.

உடலின் குளுகோசின் அளவு திடீரென மிகவும் குறைந்த காரணத்தினால், லெப்டினன்ட் கேணல் சம்மி குணரட்ன மயக்கமடைந்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து சிறைச்சாலை மருத்துவர்களின் பரிந்துரைக்கு அமைய கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, எக்னெலிகொட காணாமல் போதல் தொடர்பில் 9 இராணுவப் புலனாய்வுப் பிரிவு உத்தியோகத்தர்கள் தொடர்ச்சியாக கைது செய்யப்பட்டுள்ளதனால் அவர்கள் பெரும் உள மற்றும் உடல் ரீதியான சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக சிறைச்சாலை வட்டாரத் தகவல்களை மேற்கோள்காட்டி கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ-5)

## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை-21.03.2016

| நாணயம் | நாடு | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| டொலர் | அமெரிக்கா | 143.16 | 147.10 |
| பவுண்ட் | பிரிட்டன் | 206.06 | 213.38 |
| ஈரோ | ஐரோப்பிய ஒன்றியம் | 160.46 | 166.87 |
| பிராங் | சுவிட்சர்லாந்து | 146.68 | 152.79 |
| டொலர் | கனடா | 108.88 | 113.42 |
| டொலர் | அவுஸ்திரேலியா | 107.52 | 112.57 |
| டொலர் | சிங்கப்பூர் | 104.77 | 108.78 |
| ரூபா | இந்தியா | 2.1677 | ------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 381.6976 |
| குவைத் | டினார் | 478.5978 |
| ஓமான் | ரியால் | 373.7808 |
| கட்டார் | ரியால் | 39.5194 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.3713 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.1799 |

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 70 | 100 | 80 | 120 | 100 |
| உருளைக்கிழங்கு | 70 | 100 | 50 | 80 | 70 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 120 | 100 | 100 | 120 | 120 | 140 | 120 |
| தக்காளி | 40 | 20 | 20 | 30 | 40 | 50 | 20 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 45 | 40 | 50 | 60 | 50 |
| கோவா | 40 | 40 | 40 | 60 | 50 | 80 | 50 |
| கரட் | 80 | 100 | 80 | 80-200 | 100 | 120 | 80 |
| பூசணி | 40 | 30 | 20 | 40 | 40 | 40 | 50 |
| புடோல் | 60 | 30 | 30 | 60 | 60 | 50 | 50 |
| வாழைக்காய் | 30 | 40 | 40 | 50 | 40 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 70 | 40 | 50 | 50 | 50 | 80 | 50 |
| பெரிய வெங்காயம் | 60 | 100 | 50 | 80 | 70 | 80 | 80 |
| பாகற்காய் | 80 | 100 | 80 | 140 | 120 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 100 | 60 | 70 | 40-80 | 80 | 100 | 60 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 | – | 80 | 70 | 120 | 80 |
| பயற்றங்காய் | 80 | 60 | 60 | 70 | 80 | 100 | 80 |
| லீக்ஸ் | 100 | 100 | 90 | 100 | 120 | 120 | 100 |
| பீற்றூட் | 80 | 100 | 70 | 40 | 80 | 80 | 80 |
| கறிமிளகாய் | 140 | 100 | 90 | 120 | 100 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 800 | 400 | 300 | 300-400 | 400 | 400 | 500 |
| போஞ்சி | 120 | 200 | 90 | 120 | 120 | 160 | 120 |
| கத்தரிதம்புள்ள | 80 | 30 | 50 | 60 | – | 100 | 80 |
| கீரை – 1பிடி | 30 | 10 | 15 | 30 | 50 | 30 | 40 |
| தேசிக்காய் | 160 | 100 | 140 | 120 | 120 | 120 | 140 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30-50 | 25-35 | 50 | 40 | 35-45 | 40 |
| இராசவள்ளி | 150 | 200 | 110 | 140 | 140 | 120 | 140 |
| வெங்காயப்பூ | 140 | 100 | 110 | 120 | 70 | 120 | 60 |
| முள்ளங்கி | 40 | 40 | 30 | 40 | 40 | 50 | 30 |
| பொன்னாங்காணி | 20 | 40 | 15 | 30 | 40 | 40 | 30 |
| வல்லாரை | 20 | 10 | 10 | 10 | 20 | 20 | 5 |
| ஈரப்பலா | 80 | 50 | – | – | – | – | – |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## இலங்கையில் ராஜீவ் காந்தியைக் கொல்ல முயற்சி 136

...இலங்கையில் பிரதமர் ராஜீவ்காந்தியை கொலை செய்ய முயற்சி நடந்தது. இராணுவ அணிவகுப்பைப் பார்வையிட்டபோது சிங்கள சிப்பாய் ஒருவன் அவரைத் துப்பாக்கியால் தாக்கினான். இதில் ராஜீவ்காந்தி மயிரிழையில் உயிர் தப்பினார்.

இலங்கை தமிழர் பிரச்சினையைத் தீர்க்க சமரச ஒப்பந்தம் செய்வதற்காகப் பிரதமர் ராஜீவ்காந்தி கொழும்பு சென்றார்.

வரலாற்றுச் சிறப்பு மிக்க சமரச ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட்டுவிட்டு 30.07.1987 அன்று அவர் கொழும்பில் இருந்து புறப்பட்டார்.

**இராணுவ அணிவகுப்பு**

ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் மாளிகையிலிருந்து புறப்படும் முன் அவர் முறைப்படி இராணுவ வீரர்களின் அணிவகுப்பு மரியாதையைப் பார்ஙையிட்டார். கடற்படையில் இருந்து தேர்ந்து எடுக்கப்பட்ட 72 சிப்பாய்கள் இந்த அணிவகுப்பில் கலந்து கொண்டார்கள். ஜனாதிபதி மாளிகை முன் இந்த அணிவகுப்பு மரியாதை நடந்தது.

**எதிர்பாராத சம்பவம்**

வீரர்கள் அணிவகுப்பை பார்வையிட்டபடி ராஜீவ்காந்தி நடந்து கொண்டிருந்தார். அவரது வலப்புறம் வாளேந்தியபடி ஒரு சிங்கள சிப்பாயும் பின்னால் கடற்படை அதிகாரி ஒருவரும் போய்க் கொண்டு இருந்தார்கள்.

முதல் வரிசையைப் பார்த்து விட்டு 2 ஆவது வரிசையைப் பார்வையிட்டார். அப்போது எதிர்பாராத சம்பவம் நடந்தது.

**துப்பாக்கியால் தாக்கினான்**

வரிசையில் நின்று கொண்டிருந்த ஒரு சிங்கள சிப்பாய் திடீர் என்று துப்பாக்கியைத் தலைகீழாகத் தூக்கி பிடித்துக் கொண்டு துப்பாக்கிக்-கட்டையால் ராஜீவ்காந்தியின் தலையில் ஓங்கி அடித்தான்.

ராஜீவ்காந்தி சட்டென்று நகர்ந்து கொண்டதால் துப்பாக்கிக் கட்டை அடி அவரது இடது தோள் பட்டையில் விழுந்தது.

**உயிர் தப்பினார்**

ராஜீவ்காந்தி சிறிது நேரம் தடுமாறினார். பின்னர் சமாளித்து நின்று கொண்டார். ராஜீவ்காந்தியின் அருகில் நடந்து வந்த இராணுவ அதிகாரி துப்பாக்கியால் தாக்கியவனைப் பிடித்துக் கொண்டார்.

துப்பாக்கி கீழே விழுந்தது. துப்பாக்கி சற்று குறி தப்பியதால் ராஜீவ்காந்தியின் தோளிலும் கழுத்திலும் பட்டது. தலையில் பட்டிருந்தால் படுகாயம் அடைந்திருப்பார்.

**கீழே விழுந்த துப்பாக்கி**

கீழே விழந்த துப்பாக்கியில் கத்தி செருகப்பட்டிருந்தது. கண் இமைக்கும் நேரத்தில் சம்பவம் நடந்து விட்டது.

சம்பவம் நடந்தபோது அருகில் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவும் ஏராளமான வெளிநாட்டு தூதர்களும் இருந்தார்கள் அவர்கள் அதிர்ச்சி அடைந்தனர்.

சிலர் ராஜீவ்காந்தி அருகில் ஓடிச் சென்று நடந்த சம்பவம் பற்றிப் பதற்றத்துடன் விசாரித்தார்கள்.

**புன்னகை**

கொலை முயற்சிக்குப் பிறகும் ராஜீவ் காந்தி கொஞ்சமும் பதற்றம் இல்லாமல் புன்னகையுடன் காணப்பட்டார். ஒன்றும் இல்லை. நன்றாகத்தான் இருக்கிறேன் என்றார்.

திடீர் தாக்குதலில் பிரதமருக்குத் தோள் பட்டையில் லேசான சிராய்ப்பு காயம் ஏற்பட்டது என்று இந்திய தூதரகத்தைச் சேர்ந்த திருமதி பிரைம் ரோஸ் சர்மா கூறினார்.

கொலை முயற்சி சம்பவத்தைத் தொடர்ந்து இராணுவ அணிவகுப்பு இடையில் நிறுத்தப்பட்டது. பாதுகாப்பு அதிகாரிகள் அவசரமாக ராஜீவ் காந்தியை அருகில் நின்ற காரில் ஏற்றி அனுப்பி வைத்தார்கள்.

ராஜீவ்காந்தி குண்டு துளைக்காத அந்த காரில் ராணுவத் தலைமையகத்துக்கச் சென்றார். அங்கிருந்து ஹெலிகப்டரில் கட்டுநாயக்கா விமான நிலையத்துக்குச் சென்றார். பிறகு இந்திய விமானப் படை விமானத்தில் டில்லிக்குப் புறப்பட்டார்.

**பேட்டி**

விமானத்தில் ஏறும்முன் அவர் நிருபர்களுக்குப் பேட்டி அளித்தார். அப்போது கொலை முயற்சி பற்றி குறிப்பிட்டார்.

அவன் ஏன் உங்களைத் தாக்கினான் என்று பிரதமரிடம் கேட்டபோது, அவனைத்தான் கேட்க வேண்டும் என்று பிரதமர் வேடிக்கையாகப் பதில் அளித்தார்.


அவர் மேலும் கூறியதாவது,

அணிவகுப்பைப் பார்வையிட்டபடி நடந்து கொண்டு இருந்தேன். அப்போது தலைகீழாகத் துப்பாக்கியை பிடித்தபடி ஒருவர் என்னைத் தாக்க முயன்றது தெரிந்தது.

உடனே தலையைக் குனிந்து கொண்டேன். அதனால் தலையில் அடிபடுவதில் இருந்து தப்பினேன். இடது புற காதுக்கு கீழே தோள் பட்டைக்கு மேல் லேசாக அடிபட்டு வீக்கம் ஏற்பட்டது இவ்வாறு ராஜீவ்காந்தி கூறினார்.

**தீவிரவாதி**

பிரதமரைத் துப்பாக்கியால் தாக்கியவனைப் பாதுகாப்பு அதிகாரிகள் கீழே தள்ளிப் பிடித்து விட்டார்கள் அவன் சிங்களத் தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்தவனாக இருக்கலாம் என்று கருதப் படுகிறது.



(தொடரும்)

# கொண்டயாவை தேடுகின்றனர் கொட்டதெனியாவ பொலிஸார்

கொட்டதெனியாவ சிறுமி சேயா படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தில் கைது செய்யப்பட்டு விடுதலையான கொண்டயா எனப்படும் துனேஸ் பிரியசாந்தவை கொட்டதெனியாவ பொலிஸார் மீண்டும் வலைவீசித் தேட ஆரம்பித்துள்ளனர்.

கொட்டதெனியாவ பிரதேசத்தை அண்மித்த பதுகொடவத்தை பிரதேசத்தில் வசிக்கும் ஓய்வுபெற்ற கடற்படை அதிகாரி ஒருவரின் தோட்டத்தினுள் அத்தமீறி நுழைந்ததாக கொண்டயாவுக்கு எதிராக முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் சுமார் ஒரு மாதத்துக்கு முன்னதாக குறித்த கடற்படை அதிகாரியின் புதல்வி தூங்கும் அறையின் கூரை ஓடொன்று அகற்றப்பட்டிருந்ததாகவும், அதனை கொண்டயாவே செய்திருக்க வேண்டும் என்றும் அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த முறைப்பாட்டின் பிரகாரம் தற்போது கொட்டதெனியாவ பொலிஸார் கொண்டயாவை கைது செய்வதற்கு வலை வீசித் தேடத் தொடங்கியுள்ளனர்.

கொட்டதெனியாவ பிரதேசத்தில் படுகொலை செய்யப்பட்ட சிறுமி சேயாவின் கொலைச் சம்பவம் தொடர்பில் பொலிஸாரினால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்த கொண்டயா மற்றும் பாடசாலை மாணவனொருவன் பொலிஸாரின் சித்திரவதைகளுக்கு ஆளாகியிருந்தனர்.

இதற்கு எதிராக அவர்கள் இருவரும் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடொன்றை மேற்கொண்டுள்ள நிலையில், குறித்த மாணவன் போதைப் பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் அண்மையில் மீண்டும் கைது செய்யப்பட்டிருந்தான்.

தற்போது கொண்டயாவுக்கு எதிராகவும் முறைப்பாடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு, அவரும் தேடப்படும் நபராக மாறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# கட்சியிலிருந்து நீக்க முடியாது!

## மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு



(கொழும்பு)

**ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து தமமை நீக்க முடியாது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். ஹைட்பார்க் மைதானத்தில் நடைபெற்ற கூட்டு எதிக்கட்சியின் கூட்டத்தில் பங்கேற்றமைக்காக தம்மை கட்சியிலிருந்து நீக்க முடியாது என அவர் தெரிவித்தார்.**

சிங்கள பத்திரிகையொனறுக்கு நேற்று முன்தினம் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எம்மை கட்சியிலிருந்து நீக்கினால் நாம் புதிய கட்சியொன்றை அமைத்துக் கொளவோம் என பாரியளவில் சிலருக்கு பீதி ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாகவே எம்மை தொடர்ந்து தாக்கி வருகின்றனர்.

எனினும் இதனால் நாம் மேலும் மேலும பிரபல்யம் அடைகின்றோம்.

ஹைட்பார்க் மைதானத்தில் குழுமிய மக்கள் கூட்டத்தைக் கண்டு சிலர் ஊர் ஊராகச் சென்று எம்மை திட்டித் தீர்க்கின்றனர்.

அரசாங்கத்தில் இணைந்து கொண்டுள்ள தரப்பு ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவான குழுவாகும்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களிக்குமாறு கடந்த தேர்தலில் கோரியிருந்தார் என மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (இ-5)

# அரச இரசாயன மரபணு ஆய்வுகூட வசதிகளை மேம்படுத்துவதற்கு 500 மில். ரூபா நிதியுதவி

அரச இரசாயன மரபணு ஆய்வுகூட வசதிகளை மேம்படுத்துவதற்கு தென்கொரிய அரசாங்கம் 500 மில்லியன் ரூபா நிதியுதவி வழங்கவுள்ளது.

விசேட அபிவிருத்தி திட்ட உதவியின் அடிப்படையில் இவ்வாறு 500 மில்லியன் ரூபா நிதி உதவி வழங்கப்படவுள்ளதாக நீதி அமைச்சு அறிவித்துள்ளது.

நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ மற்றும் கொரிய சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிறுவனத்தின் தலைவர் சியோக் சியோ ஆகியோருக்கு இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அரசாங்க இரசாயன பகுபாய்வு அறிக்கைகளை உரிய நேரத்தில் வழங்குதல், சர்வதேச தரத்தில் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குதல் போன்றனவற்றில் காணப்பட்ட குறைபாடுகளை களையும் நோககில் இவ்வாறு உதவி வழங்கப்படவுள்ளது.

தொழில்நுட்ப ரீதியில் தரமான ஆய்வு கூடங்கள் காணப்படாத காரணத்தினால் வழக்கு விசாரணைகளை மேற்கொள்வதில் கால தாமதம் ஏற்படுவதாக நீதி அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

ஆய்வு கூடங்களை மேமபடுத்துவதற்கான உதவி வழங்குதல் தொடர்பிலான உடன்படிக்கை அண்மையில் கைச்சாத்திடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# பொலிஸாரின் சம்பளம் 40 வீதத்தினால் உயர்வு

(கொழும்பு)

பொலிஸாரின் சம்பளம் 40 வீதத்தினால் உயர்த்தப்படும் என சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரட்நாயக்க தெரிவித்துள்ளார்.

பொலிஸ் உத்தியோகத்தர்களின் சம்பளம் 40 வீதத்தினால் உயர்த்தப்படவுள்ளதாக வெல்லாவ பிரதேசத்தில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டில் 20 வீத சம்பள உயர்வும் அடுத்த ஆண்டில் 20 வீத சம்பள உயர்வும் வழங்கப்படும் என அவர் ரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

பொலிஸ் நிலையங்கள் கட்டடங்கள் அமைப்பதனால் அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைக்கும் என கருதவில்லை.

குறிப்பாக பொலிஸ் சட்டம் பற்றி நாம் கவனம் செலுத்தி வருகின்றோம். இது மிகவும் பழைய ஓர் சட்டமாகும்.

பொலிஸ் சேவை மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும்.

பொலிஸ் உத்தியோகத்தர்களின் இடமாற்றம் மற்றும் பதவி உயர்வு குறித்து கொள்கைகள் வகுக்கப்பட்டு அவை அமுல்படுத்தப்பட வேண்டும்.

40 வீத சம்பள அதிகரிப்பிற்கு திறைசேரியில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

திடீரென ஏற்பட்ட சில சிக்கல்கள் காரணமாக சம்பள உயர்வினை வழங்குவதில் கால தாமதம் ஏற்பட்டுள்ளது.

எனினும் விரைவில் சம்பள உயர்வு வழங்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். (இ-5)

# இன்று ஒரு தகவல்

## உள்ளமும் பள்ளமும்

அரங்கங்களிலும் சரி, பயணங்களிலும் சரி, கியூ வரிசைகளிலும் சரி, சுற்றி இருப்பவர்களைப் பரம எதிரிகளாக எண்ணும் எண்ணம் பலரிடம் இருந்து வருகிறது.

கைபடக் கூடாது, கால்படக்கூடாது, இருமக்கூடாது, தும்மக்கூடாது, சிரிக்கக்கூடாது, பொருட்களை அங்கங்கு வைக்கக் கூடாது என்றெல்லாம் ஆயிரத்தெட்டுக் கட்டுப்பாடுகளோடு மற்றவர்கள் நம்மிடம் நடந்து கொள்ள வேண்டும் என நாம் எதிர்பார்க்கிறோம்.

இவள் என்னை விட அழகா? இவன் என்னை விடப் படித்தவனா? இவர் என்னை விடப் பணக்காரரா? என்றெல்லாம் மனதுக்குள் மகாபாரத யுத்தமே நடந்து கொண்டிருக்கும்.

இவையனைத்தும் காரணமற்ற–அர்த்தமற்ற–தர்க்க மற்ற நினைப்புகள்,

அந்தக் குறுகிய நேரத்துக்குள் சுயநலப்பேய் சுயரூபம் எடுத்து ஆடத் தொடங்கும்.

இப்படியெல்லாம் எண்ணுபவர்கள், அந்தச் சில மணி நேரத்தை அல்லது பயணத்தை அமைதியற்றதாக ஆக்கிக் கொள்கிறார்கள்.

சில தவறு நிகழ்ந்து விட்டாலும், பொறுமைகாட்டாது முகத்தைக் கடுமையாக மாற்றிக் கொண்டு, நாலு வார்த்தை சொல்லி மற்றவர்கள் மனத்தையும் புண்ணாக்கித் தாங்களும் சலிப்படைகிறார்கள். அத்தோடு விட்டால் பரவாயில்லை. அவர்களது நடவடிக்கைகளை வேண்டா வெறுப்பாக கவனித்துக் கொண்டும் இருப்பார்கள். இது ஏன் புரியாத புதிர்.

சிறு சிறு நடவடிக்கைகளை வைத்து உடனிருப்பவர்களைப் பற்றி எடைபோடுவது முறையாகாது. அந்தக் கணிப்புச் சரியாக இராது என்பதும் உறுதி.

இத்தகைய அவசர முடிவுகளை வைத்துக் கொண்டு அவர்கள் மீது பாய்வதும் பொருத்தம் அற்றதே. நீங்கள் உங்கள் பெருந்தன்மையை வெளிப்படுத்துங்கள்! புன்னகை பூக்கப் பேசுங்கள். கண்ணாடியென அவர்களும் அதே குணங்களோடு உங்களிடம் பிரதிபலிப்பார்கள்.

இத்தகைய செயல்களின் மூலம் இரு நன்மைகள் இருக்கின்றன.

ஒன்று அந்த நேரத்தில் தேவைப்படும் சிறு சிறு உதவிகளை நாம் பெற முடியும்.

இரண்டாவது மன ஒருமைப்பாடு குலையாமல் இருக்கும்.

அதன் மூலம் பயணத்தின் நோக்கம் எதுவோ அல்லது பயணத்தின் விளைவு எதுவோ அது தொடர்பான விடயங்களைப் பற்றிச் சிந்திக்க வல்லது. உரிய இடத்தைச் சேர்ந்தவுடன் ஆக்கபூர்வமாகசெயற்பட முடியும்.

அப்படி இல்லாமல் தேவையற்ற செயல்களின் மூலம் மன அமைதியை சிதைத்துக் கொண்டால், நினைப்பு அவற்றை விட்டு விட்டு அகல மறுக்கும், காரியங்கள் சறுக்கும். அரங்கமாக இருப்பின் உரிய நிகழ்ச்சியை இரசிக்க முடியாமல் போய்விடும்.

முன் பின் அறியாதவர்களிடம் கூடப் பெருந்தன்மையுடன் நடந்து கொண்டு நற்பெயர் எடுக்க வேண்டும் என்ற மனப்பான்மைக்கு உரமிட்டால், அது பூத்துக் குலுங்கிக் காய்த்துச் சுவை மிக்க வாழ்வைக் கனியாக்கித்தரும்.

லேனா தமிழ்வாணன்



# சிறுவர் அரங்கம்

1389

## பூமிக்கு வந்த சூரியப் பந்து!

"...சரி. நீ இங்கே நில். நான் அந்த மரத்துக்கு பக்கத்துல நக்கிறேன். நீ பந்தை உதைத்து என்கிட்ட அனுப்பு. நான் அதைத தடுத்து மீண்டும் உன் கிட்ட அனுப்புறேன். இப்படியே நாம விளையாடுவோம்" என்றது வாண்டு.

'அய்யயோ... யானைகள் கால்களில் நான் சிக்கப் போறேன்னா?' என நினைக்கும் போதே சூரியனுக்கே வியர்க்க ஆரம்பிச்சுடுச்சி.



"ரெடி! ஒன்... டூ... த்ரீ..." ன்னு ஆரம்பித்த மகி, சூரியப் பந்தை ஓங்கி உதைத்தது.

வாண்டை நோக்கி பறந்த சூரியனை தனது துதிக்கையால் பிடித்தது. சூட்டை தாங்க முடியாம பந்தை உடனே கீழேப போட்டது.

"ஐயோ! பந்து ரொம்பச் சுடுதே... அடுப்பிலிருந்து யாராவது இந்தப் பந்தை தூக்கி போட்டாங்களா?" என்றது வாண்டு.

"ஆமா! இவரு விளையாடறதுக்கு சுடச்சுட பந்தை சுட்டுத் தந்திருக்காங்க பாரு" என கேலி செய்தது மகி.

இருவரின் உரையாடலுக்கு இடையே 'வேறு இடம் செல்லலாம்' என நினைத்த சூரியன் சற்றே உருண்டது.

"ஏய் வாண்டு!, காத்துல அந்தப் பந்து உருளுது பாரு. அதை என்கிட்ட உதைச்சி அனுப்பு" என்றது மகி.

.....சர்க் ஓங்கி ஒரே உதை.

இப்போது மீண்டும் மகியின் உதை.

நாலைந்து உதைகளிலேயே சூரியனுக்கு தலை சுற்ற ஆரம்பித்தது.

'அய்யய்யோ! தெரியாமல் பூமிக்கு வந்துட்டோமே'ன்னு எண்ணியவாறு, 'எப்படி இவர்களிடமருந்து தப்புவது' என யோசித்தது சூரியன்.

அந்த நேரத்தில் வாண்டு அடித்த சூரியப் பந்தை மகி தவறவிட்டது.

"நீ தோத்துட்ட. நீ தோத்துட்டன்னு" கூறி மகிழ்ச்சியில் வலம் இடதுமாக உடலை ஆட்டியது வாண்டு.

சற்றே கோபமா மகி,

"இப்ப பிடி பார்க்கலாம்" எனக் கூறி, ஒரு சிறிய பாறை மீது வைத்து குறிபார்த்து சூரியப் பந்தை ஓங்கி காலால் ஒரு உதைவிட்டது.

இதுதான் சமயம் என தனது முழு பலத்தையும் சேர்த்து வானத்தை நோக்கி பறந்தது சூரியன்.

வானத்திற்கு வந்த பிறகு தான் அது பழைய நிலைக்கு வந்துச்சு.

'இனி என்ன ஆனாலும் சரி, பூமியைச் சுற்றிப் பார்க்க போகவேகூடாது' என மனதிற்குள் சபதம் எடுத்தது சூரியன்.

தாங்கள் அடித்த பந்து எங்கே விழுந்துச்சின்னு தேடிக் கொண்டிருந்தன யானைகள்.

குழந்தைகளே! உங்களுக்கு தெரிஞ்சா அதை யானைகளிடம் சொல்லுங்க. **(முற்றும்)**

03.2016
22

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1622 - வேர்ஜினியாவில் ஜேம்ஸ்டவுன் நகரில் அல்கோன்கியான் பழங்குடிகள் 347 ஆங்கில குடியேற்றவாசிகளைப் படுகொலை செய்தனர்.
- 1829 - கிரேக்கத்துக்கான எல்லைகளை மூன்று வல்லரசுகளான பிரித்தானியா, பிரான்ஸ், ரஷ்யா ஆகியன வரையறுத்தன.
- 1873 - புவேர்ட்டோ ரிக்கோவின் ஸ்பானிய தேசிய சபையில் அந்நாட்டில் அடிமைத் தொழிலை அழிக்க சட்டமியற்றப்பட்டது.
- 1895 - முதன் முதலாக லூமியேர சகோதரர்கள் அசையும் திரைப்படத்தை பிரத்தியேகமாகக் காண்பித்தார்கள்.
- 1939 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனி, லித்துவேனியாவிடம் இருந்து மெமெல் பிரதேசத்தைக் கைப்பற்றியது.
- 1943 - இரண்டாம் உலகப் போர்: பெலாரசின் காட்டின் நகர மக்கள் அனைவரும் நாசி ஆதிக்கவாதிகளால் உயிருடன் எரித்துக் கொல்லப்பட்டனர்.
- 1945 - அரபு கூட்டமைப்பு கெய்ரோவில் அமைக்கப்பட்டது.
- 1960 - ஆர்தர் ஷாவ்லொவ், மற்றும் சார்ல்ஸ் டவுன்ஸ் ஆகியோர் லேசருக்கான முதலாவது காப்புரிமத்தைப் பெற்றார்கள். .
- 1965 - இலங்கையில் தமிழரசுக் கட்சியுடன் இணைந்து டட்லி சேனநாயக்கா தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி அமைத்தது.
- 1993 - இன்டெல் நிறுவனம் முதல் பென்டியம் chip (80586) இனை அறிமுகம் செய்தது.
- 1995 - சோவியத் விண்வெளிவீரர் வலேரி பொல்யாக்கொவ் விண்ணில் 438 நாட்கள் கழித்துவிட்டு பூமி திரும்பினார்.
- 1997 - ஹேல்-பொப் வால்வெள்ளி பூமிக்குக் கிட்டவாக வந்தது.
- 2004 - ஹமாஸ் இயக்கத்தை ஆரம்பித்தவர்களில் ஒருவரான அஹமது யாசின் இஸ்ரேலிய வான் தாக்குதலில் கொல்லப்பட்டார்.
- 2006 - பாஸ்க் ஆயுதக்குழு ஈ.டிஏ காலவரையறையற்ற போர் நிறுத்தத்தை அறிவித்தது.

### பிறப்புக்கள்

- 1868 - ரொபேர்ட் மில்லிக்கன், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (இ. 1953)
- 1931 - பேர்ட்டன் ரிக்டர், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர்

### இறப்புக்கள்

- 1627 - பிலிப்பே டி ஒலிவேரா, யாழ்ப்பாணத்தின் முதலாவது போர்த்துக்கேய ஆளுநர்.
- 1952 - டி. எஸ். சேனநாயக்கா, இலங்கையின் முதலாவது பிரதமர் (பி. 1884)
- 2005 - ஜெமினி கணேசன், தமிழ்த் திரையுலக நடிகர் (பி. 1920)

### சிறப்பு நாள்

- உலக நீர் தினம்

## உலக நீர் தினம்



உலகம் இயங்குவதற்கு, தண்ணீர் என்ற சக்கரம் அவசியமானது. இது ஐம் பூதங்களில் ஒன்று. இயற்கையுடன் தொடர்புடையது. நேரடியாகவும், மறைமுகமாகவும் அன்றாட வாழ்வின் பெரும்பாலான பணிகளுக்கு தண்ணீர் பயன்படுத்தப்படுகிறது. இதன் முக்கியத்துவத்தை உணர்த்தவும், சிக்கனமாக பயன்படுத்த வலியுறுத்தியும் மார்ச் 22 ஆம் திகதி, உலக தண்ணீர் தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.

மக்கள்தொகை பெருக்கம், தொழில் வளர்ச்சியால் தண்ணீரின் தேவை அதிகரித்துள்ளது. ஆனால் ஆண்டுக்கு ஆண்டு, உலகுக்கு கிடைக்கும் நல்ல நீரின் அளவு குறைகிறது. மூன்றாம் உலகப் போர் வருமானால் அது தண்ணீருக்காகத்தான் என விஞ்ஞானிகள் எச்சரிக்கின்றனர். குடிநீர், சுகாதாரம், விவசாயம், கால்நடைகளுக்கு என பல வழிகளில் தண்ணீரின் பயன்பாடு அவசியம். பூமியில் 70.8 விழுக்காடு நிலப்பரப்பில் நீர் உள்ளது. ஆனால் குடி நீர் வளம் மிகவும் குறைவு.

மனிதர்களே இயற்கை வளத்துக்கு மதிப்பு அளிக்க வேண்டும். இணக்க சூழ்நிலையில் வாழ்வதற்கு நீர் வளமும் இயற்கை மூல வளமும் உத்தரவாதம் அளிக்க முடியும். இல்லை என்றால் மனித குலம் ஒருநாள் கூட பூமியில் வாழ முடியாது. உயிரைப் பேணிக் காக்க வேண்டும். இய ற்கை வளத்தையும் பேணிக்காக்க வேண்டும்.

**வருக வருக எங்கள் வான்மழையே-எங்கள்**
**வாழ்வில் இனிக்கிற தேன்துளியே**
**தருக தருக உந்தன் தரிசனமே-எட்டுத்**
**திசைகள் அளந்துவரும் பூரணமே**

# சம்பந்தன் எதிர்க்கட்சி தலைவராகவுள்ளதால் நாம் நிரந்தர அரசியல் தீர்வைக் காணமுடியும்

## நம்பிக்கை வெளியிடுகிறார் நீதியமைச்சர்

(கொழும்பு)

**தமிழ் மக்களின் தலைவராகவும் எதிர்க் கட்சித் தலைவராகவும் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் இருக்கின்றமையே தமிழ் பேசும் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வை காண முடியும் என்ற நம்பிக்கையை எமக்கு ஏற்படுத்தியுள்ளது என்று நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

உருவாக்கப்படவுள்ள புதிய அரசியலமைப்பில் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைக்கு ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வு கிடைக்குமா என வினவியபோதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டில் இனவாதத்தை பரப்புவதற்கு சில தரப்பினர் பாரிய முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றனர். எவ்வாறான இனவாத செயற்பாடுகள் முன்னெடுக்கப் பட்டாலும் நல்லாட்சி அரசாங்கத்தின் நல்லிணக்க செயற்பாடுகளில் பின்னடைவு ஏற்படாது.

கொழும்பில் நடத்தப்பட்ட ஒன்றிணைந்த எதிரணியின் கூட்டத்தை நாங்கள் ஒரு பொருட்டாகவே கருதவில்லை. அதனை நாங்கள் சவாலாகவே எடுக்கவில்லை.

நடைபெற்று முடிந்த இரண்டு பிரதான தேர்தல்களில் இந்த நாட்டில் இனவாதம் நிராகரிக்கப்பட்டது. இனவாதத் தரப்புக்களை மக்கள் மிகவும் தெளிவான முறையில் நிராகரித்திருந்தனர். இனவாதிகள் தோல்வியடைந்தனர். ஆனால் அவ்வாறு தோல்வியடைந்த தரப்பினர் தற்போது 4 ஆயிரம் அல்லது 5 ஆயிரம் பேரை இணைத்துக் கொண்டு கொழும்பில் கூட்டம் நடத்துவது ஒரு விடயமே அல்ல.

மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டத்தை நாம் சவாலாக எடுக்க வேண்டிய அவசியமில்லை. அதுமட்டுமன்றி இவ்வாறு கூட்டங்களை நடத்துவதன் மூலம் ஒரு நாளும் ஆட்சியை கைப்பற்ற முடியாது.

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் நாங்களும் கொழும்பில் 50 ஆயிரம் பேரைக் கொண்டு கூட்டங்களை நடத்தியிருந்தோம். ஆனால் அவ்வாறு கூட்டங்களை நடத்துவதன் மூலம் உடனடியாக ஆட்சியை கைப்பற்ற முடியாது என எங்களுக்கு தெரியும். எனவே மகிந்த தரப்பினர் 4 ஆயிரம் பேரைக் கொண்டு நடத்திய கூட்டம் தொடர்பில் நாங்கள் அலட்டிக் கொள்ள வேண்டியதில்லை.

புதிய அரசியலமைப்பினை உருவாக்குவதற்கு நாங்கள் தற்போது நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றோம். அந்த புதிய அரசியலமைப்பினூடாக தமிழ் பேசும் மக்களின் இனப் பிரச்சினைக்கு சகலரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வை காண முடியமென நாங்கள் நம்புகின்றோம். இந்த நம்பிக்கையை தமிழ் மக்களும் எம்மீது வைக்கவேண்டும்.

இனவாத தரப்புக்களின் முயற்சிகளை நிராகரித்து மிகவும் பொறுமையாக செயற்பட்டு நாம் தேசியப் பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டும்.

எவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்வோம் என்பது குறித்து தற்போது நாம் கூறிக் கொண்டிருக்க முடியாது. தேவையான நேரத்தில் அவசியமான திட்டங்களை நாங்கள் வெளிப்படுத்துவோம்.

விசேடமாக தமிழ் மக்களின் தலைவராகவும் எதிர்க்கட்சித் தலைவராகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் இருக்கின்றமையே தமிழ் பேசும் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வை காண முடியும் என்ற நம்பிக்கையை எமக்கு ஏற்படுத்தியுள்ளது.

காரணம் அவர் சிரேஷ்ட மூத்த அரசியல்வாதியாக இருக்கின்றார். அவரின் ஆரோக்கியமான பங்களிப்புடன் இந்தப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வைக் காணமுடியும் என்பது எமது நம்பிக்கையாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)





152 ஆவது பொலிஸ் வீரர் தினம் நேற்றையதினம் காங்கேசன் துறையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் காங்கேசன் துறை பொலிஸ் பிரிவுக் குட்பட்ட தெல்லிப்பழை, இளவாலை, அச்சுவேலி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, நெல்லியடி ஆகிய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் மற்றும் ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

(படங்கள்: அளவெட்டி செய்தியாளர்)


# ஓராண்டு நினைவஞ்சலி

“சிறி” உன்னை இழந்து நாம் சிறகொடிந்து தவிக்கிறோம்



தோற்றம்
07.07.1973

மறைவு
02.04.2015

## அமரர் இராசலிங்கம் சிறிறாம்

“சிறி” தன்னை நினைக்கையில் மேனிதான் சிலிர்க்குதே
சிறியவர் பெரியவர் அனைவரின் நண்பனாய்- நிலைமை
அறிந்ததும் உதவிக்குமுன்வந்துகுதிப்பவர்- ஐயகோ
அறியாது தவிக்கிறோம் உந்தனை இழந்துமே
மீண்டும் எம் மனதினில் சுழன்றிடும் நினைவுகள்
மீதமாய் எம்மிடம் எஞ்சிய உணர்வுகள்
ஆண்டொன்று ஓடியே போனதே நண்பனே
ஆறுதல் கூறிட நீயின்றித் தவிக்கிறோம்
நெல்லியான் என்றதும் நெக்குருகி நிற்பான்
நெடியவன், நமக்கெல்லாம் நெருங்கிய நண்பன்
வல்லவன் வாழ்க்கையில் வேகமாய் வளர்ந்தரன்-
பொன்னாலை
வரதனனின் காலடிவரமாகப் பெற்றான்

உனையிழந்து தவிக்கும் ஆருயிர் நண்பர்கள்,
நெல்லியான், சுழிபுரம்.

(சி-4084)

# பங்குனி மாத இராசி பலன்கள்

## 14.03.2016~13.04.2016

ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்



**சோதனைகளை எல்லாம் சாதனைகளாக மாற்றிக் காட்டும் சிம்ம இராசி நேயர்களே! தெய்வ வழிபாடுகளால் திருப்தி காண வேண்டிய நேரம்!**




பங்குனி மாதக்கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, இம்மாதம் உங்கள் ராசிநாதன் சூரியன் அஷ்டமத்தில் இணைந்து சஞ்சரிக்கின்றார். எனவே வரவும், செலவும் சமமாகும். திடீர் விரயங்கள் கூடுதலாக இருக்கும். உடல் ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். அர்த்தாஷ்டமச் சனியோடு செவ்வாயும் இணைகின்றார்.

எனவே இந்த கிரகங்களின் சேர்க்கை முன்னேற்றத்தில் முட்டுக்கட்டைகளை ஏற்படுத்தாமல் இருக்க வரம்கொடுக்கும் தெய்வங்களைத் தேர்ந்தெடுத்து வழிபடச் செல்வது நல்லது. பூமி விற்பனையால் ஒருசில ஏமாற்றத்தை சந்திக்க நேரிடும். வாங்கிய பூமி பிரச்சினைக்குரியதாக இருக்கின்றதே என்று சிலர் கவலைப்படுவர். கோபம் அதிகரிக்கும். உடன் இருப்பவர்களை அனுசரித்துச் செல்ல இயலாத சூழ்நிலை உருவாகும்.

ராசியிலேயே குரு பகவான் சஞ்சரிக்கின்றார். பஞ்சம அஷ்டமாதியான குரு பகவான் வக்ரம் பெற்று ராகுவோடு இணைந்திருப்பதால் பிள்ளைகளால் ஏற்பட்ட பரச்சினைகள் அகலும். அவர்களின கல்யாண வாய்ப்புகள் கைகூடும. இதுபோன்ற காலங்களில் சுபச் செலவுகளை உருவாக்கிக் கொள்வது நல்லது. வாகனப் பழுதுச் செலவுகள் அதிகரிக்கும். எனவே பழைய வாகனங்களைக் கொடுத்துவிட்டுப் புதிய வாகனங்களை வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும். எனவே விருப்ப ஓய்வில் வந்து விடலாமா என்று சிலர் சிந்திப்பர். குறிப்பாக வேறு வேலைக்கு மாற்றம் பெற முயற்சித்தவர்களுக்கு அதில் வெற்றி கிடைக்கும். சுய தொழில் செய்பவர்கள் பங்குதாரர்களை மாற்றிக்கொணடு பணிகளைச் செய்யத் தொடங்கலாம். பழைய பங்குதாரர்களால் ஒரு சிலருக்கு பிரச்சினைகள் ஏற்படும். உத்தியோக மாற்றங்களும், ஊர் மாற்றங்களும், வீடு மாற்றங்களும், நாடு மாற்றங்களும் அவரவர் சுய ஜாதகத்திற்கேற்ப வந்து சேரலாம். வரும் மாற்றங்கள் வளம் சேர்க்கும் மாற்றமாக அமைய பிரார்த்தனைகள் தான் கைகொடுக்கும். எனவே பங்குனி உத்திர நாளில் முருகப்பெருமானை வழிபடுவது நல்லது.

### மேஷ புதனின் சஞ்சாரம்!

மார்ச் 30 ஆம தகதி நீச்ச புதன் மேடத்தில் சஞ்சரிக்கப் போகின்றார். இதன் விளைவாக பிரிந்த உறவினர்கள் மீண்டும் வந்திணைவர். பிரபலஸ்தர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். அரசு தொடர்பான காரியங்களில் அனுகூலம் கிடைக்கும். வெளிநாட்டிலிருந்து வரும தகவல் அனுகூலமானதாக இருக்கும். ஆரோக்கியத் தொல்லையும் அகலும். எதிர்பாராத தன வரவு வந்து உங்கள் எதிர்காலத் திட்டங்களை நிறைவேற்ற வழி வகுத்துக் கொடுக் கும்.

### மீன சுக்ரனின் சஞ்சாரம்!

ஏப்ரல் 2 ஆம தகதி மீனத்தில் சுக்ரன் உச்சம் பெறப்போகிறார். அசுர குருவான சுக்ரன் உச்சம் பெறுவது யோகம்தான். கிள்ளிக் கொடுக்காமல் அள்ளிக்கொடுக்கும் சுக்ரன் உச்சம் பெறும்பொழுது நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும். நகைகள் வாங்க வேண்டுமென்ற ஆர்வம் மேலோங்கும். பெண் வழிப்பிரச்சினைகள் அகலும். உடன்பிறந்தவர்கள் உறுதுணையாக இருப்பர். தேங்கிய காரியங்கள் திடீரென நடைபெறத் தொடங்கும். வாங்கிய கடனையும் கொடுத்து மகிழ்வீர்கள். வளர்ச்சி அதிகரிக்கும். பொதுநலத்தில் உள்ளவர்களுக்கு புதிய பொறுப்புகள் கிடைக்கும். இம்மாதம் செவ்வாய் தோறும் சக்தி வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். உத்திரப்பெருவிழா வரும் நாளில முத்துக்குமரனை வழிபாடு செய்வது நல்லது.

## தெய்வ வழிபாடுகளால் திருப்தி காண வேண்டிய நேரம்!


### பெண்களுக்கான சிறப்பு பலன்கள்

ஆரோக்கியத்தில் அக்கறை செலுத்த வேண்டிய மாதம் இது. ஆதாயம் அதிகமாகக் கிடைத்தாலும், மன நிம்மதி குறைவாகவே கிடைக்கும். மற்றவர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்க வேண்டாம். கணவன், மனைவிக்குள் அனுசரித்துச் செல்வதன மூலமே அமைதி கிடைக்கும். குழந்தைகளால் நன்மை உண்டு. குறிப்பாக பிள்ளைகளின் கல்யாண வாய்ப்புகளை நிறைவேற்றி வைப்பீர்கள்.

அவர்கள் கடல் தாண்டிச் சென்று படிக்கும் முயற்சிக்கு ஏற்பாடு செய்திருந்தால் அதிலும் அனுகூலம் கிடைக்கும. உத்தியோகம் பார்க்கும் பெண்களுக்கு உயர்பதவி கிடைக்கும் வாய்ப்பு உண்டு. ஆபரண சேர்க்கை ஏற்படும். அழகன் முருகனை வழிபடுவது ஆனந்த வாழ்வளிக்கும்.



**தன்னம்பிக்கை குறைகிற போது தன்னை அண்டியவர்களிடமெல்லாம் ஆலோசனை கேட்டும் கன்னி இராசி நேயர்களே! விபரீத ராஜயோகம் செயற்படும் நேரம்!**




பங்குனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கிறபொழுது, மாதத்தொடக்கத்தில் உங்கள் ராசிநாதன் புதன் நீச்சம் பெற்று விரயாதிபதியோடு கூடியிருக்கிறார். அதே நேரத்தில் 3, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய் 5, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சனியோடு இணைந்து சஞ்சரிக்கின்றார்.

6இறகு அதிபதியும், 8இற்கு அதிபதியும் இணைந்து 3 இல் சஞ்சரிக்கும் பொழுது விபரீத ராஜயோகம் செயறபடும். அந்த அடிப்படையில் சில நல்ல மாற்றங்கள் வந்து சேரப்போகின்றது. கடந்த காலத்தில் தடையாக இருந்தவைகள் இப்பொழுது தகர்த்தெறியப்படும். இடையில் வந்தவர்களால ஏற்பட்ட இடையூறுகள் அகலும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வும், உள்ளத்தில் மகிழ்ச்சியும் உருவாகும்.

தொழில் புரிபவர்களுக்கு தொகை வரவு இருமடங்காக வந்துசேரும். சில முரண்பாடான கிரகங்களின் சேர்க்கை சிலருக்கு யோகத்தை தரும். அந்த அடிப்படையில்தான் உங்களுக்கு இம்மாதம் ஒப்பற்ற வாழ்க்கை அமைய அற்புதமான கிரகங்களின் ஆதிக்கம் இருக்கின்றது.

உங்களுக்கு உயர்வுகள் ஏற்படும் போது ஊர் மக்கள் அனைவரும் உங்களை போற்றிக்கொணடாடுவர். ஆனால் உடனிருக்கும் உறவினர்கள் உள்ளத்தில் ஒன்றும் உதட்டில் ஒன்றும் வைத்துப் பேசுவர். இடம், பூமி சம்பந்தமாக எடுத்த முயற்சியில் வெற்றி கிடைக்கும். கடன் சுமை குறையும். கவலைகள் தீரும். உங்கள் ராசிக்கு 12 ஆம் இடத்தில் குரு வக்ரம் பெற்று சஞ்சரிப்பதால் சுபவிரயங்கள் அதிகரிக்கும். துணிந்து முடிவெடுத்துச் சில காரியங்களைச் செய்து முடித்து வெற்றி கர்ண் பீர்கள்.

அங்காரகனுக்கும், சனிக்கும் உரிய வழிபாடுகளை முறையாக மேற்கொள்வது நல்லது. எனவே அதற்குரிய அனுகூல ஸ்தலங்களுக்குச் சென்று வழிபட்டு வந்தால் தடைகள் அகலும். தனவரவு திருப்திகரமாக இருக்கும். பங்குதாரர்கள் உங்களுக்கு பக்கபலமாக இருப்பார்கள். மங்கல நிகழ்ச்சிகள் மனையில் நடைபெறும். பங்குனி உத்திரத் திருநாளில் முருகப்பெருமானை உள்ளன்போடு வழிபட்டால் நல்லதே நடக்கும்.

### மேஷ புதனின் சஞ்சாரம்!

உங்கள் ராசிநாதன் புதன் மார்ச் 30 ஆம தகதி மேஷ ராசிக்கு செல்ல இருக்கிறார். இதன் பலனாக மறைந்த புதனால் நிறைந்த தன லாபம் உங்களுக்கு கிடைக்கப் போகின்றது. கல்வி, கலை சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். கடித அனுகூலம் உண்டு. மாமன், மைத்துனர் வழியில் இருந்த மனக்கசப்புகள் மாறும். தொழில் சம்பந்தமாக புதிய பங்குதாரர்களை சந்தித்து முக்கிய முடிவெடுப்பீர்கள். மூடிக் கிடந்த தொழில் திறப்புவிழாக் காணும். வங்கிச் சேமிப்பு உயரும். பொதுநலம் மற்றும் அரசியலில் இருப்பவர்களுக்கு, பொறுப்புகளில் மாற்றம் ஏற்படும்.

### உச்ச சுக்ரனின் சஞ்சாரம்!

உங்கள் ராசிக்கு 2, 9இறகு அதிபதியானவர் சுக்ரன். அந்த கிரகம் நல்ல இடத்தின் ஆதிபத்யம் பெற்று உச்சம் பெறும்பொழுது பணம் பல வழிகளிலும் வந்து கையை நிரப்பும். பாராட்டு மழையில் நனைவீர்கள். தினம் ஒரு நல்ல தகவல் வந்து கொண்டேயிருக்கும். தெய்வீக சிந்தனை மேலோங்கும். வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் நேரமிது. பெண் வழிப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. தங்கம், வெள்ளி வாங்குவதில் தனிக் கவனம் செலுத்துவீர்கள். வெளிநாட்டிலிருந்து கூட ஒரு சில்ருக்கு அழைப்புகள் வந்து சேரலாம். எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் விதத்தில் உச்ச சுக்ரனின் ஆதிக்கம் இருக்கின்றது. இம்மாதம் பங்குனி உத்திரத்தன்று முருகப்பெருமானை வழிபாடு செய்யுங்கள். வார வழிபாடாக புதன்கிழமை தோறும் பெருமாள் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

## விபரீத ராஜயோகம் செயற்படும் நேரம்!

### பெண்களுக்கான சிறப்பு பலன்கள்

இம்மாதம் உங்களுக்கு இனிய மாதமாகும். எடுத்த காரியத்தை எளிதில் முடித்து வெற்றி காண்பீர்கள். பொன் மனம் படைத்தவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். புதிய திருப்பங்கள் ஏற்படும். வாழ்க்கைத் துணையின் முன்னேற்றத்திற்கு உங்கள் அதிர்ஷ்டமும் ஒரு காரணம் என்று குடும்ப உறுப்பினர்கள் எடுத்துரைப்பர்.

குழந்தைகளின் கல்யாண வாய்ப்புகள் கைகூடும். வங்கிச் சேமிப்பு உயரும். வாகன மாற்றமும் உருவாகும். அங்காரகனையும், சனியையும் வழிபட்டால் அற்புதமான வாழ்க்கையை அமைத்துக் கொள்ள இயலும்.

(தொடரும்)

# நாமலுக்கு 450 மில்லியன் ரூ.கொமிசன் வழங்கப்பட்டமை தொடர்பில் விசாரணை

(கொழும்பு)

**கொழும்பு மாநகரில் அமைக்கப்படவிருந்த "கிரிஷ் சதுக்கம்" திட்டம் தொடர்பான கொடுக்கல்- வாங்கலில் நாமல் ராஜபக்ஷசவுக்கு கொமிஷனாக 450 மில்லியன் ரூபா வழங்கப்பட்டமை தொடர்பான விசாரணைகளை நிதி மோசடிப் பிரிவு ஆரம்பித்திருப்பதாக ஊழலுக்கு எதிரான முன்னணி தெரிவித்துள்ளது.**



குறித்த திட்டத்துக்காக கிரிஷ் நிறுவனம் சிங்கப்பூர் எச்.எஸ்.பீ.சி. வங்கியில் நாமல் ராஜபக்ஷவின் பெயரில் உள்ள வங்கிக் கணக்கில் 3.5 மில்லியன் அமெரிக்க டொலர்களை வைப்பிலிட்டிருப்பது உறுதியாகியிருப்பதாக ஊழலுக்கு எதிரான முன்னணியின் ஆலோசகர் ரஞ்சித் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியல் பழிவாங்கலுக்காகவே தனது மகன் நாமல் ராஜபக்ஷ, நிதி மோசடிப் பிரிவினரால் விசாரணைக்கு உட்படுத்தப்படுவதாக முன்னாள் ஜனாதிபதி கூறியிருந்தார். கிரிஷ் சதுக்கத் திட்டத்தில் நாமல் ராஜபக்ஷ தற்பொழுது மாட்டிக்கொண்டுள்ளார்.

கொழும்பு புறக்கோட்டைப் பகுதியில் ஹோட்டல், அலுவலகங்கள் மற்றும் வீடுகளைக் கொண்ட "கிரிஷ் சதுக்கம்" ஒன்றை அமைப்பது தொடர்பில் இந்தியாவைச் சேர்ந்த கிரிஷ் குறூப் நிறுவனம் 650 மில்லியன் அமெரிக்க டொலரில் ஒப்பந்தமொன்றைச் செய்துகொண்டது.

இத்திட்டத்துக்காக 450 மில்லியன் ரூபா "கொமிஷன்" பெற்றுக்கொள்ளப்பட்டதா? என்பது குறித்து நிதி மோசடிப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இது தொடர்பில் மூன்று அரசியல்வாதிகளின் பெயரும் பல்வேறு வர்த்தகர்களின் பெயர்களும் வெளியாகியுள்ளன.

நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான காணியே கிரிஷ் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான ஒப்பந்தம் நாமல் ராஜபக்ஷவுக்குச் சொந்தமான "நாமல் ராஜபக்ஷ அசோசியேட்" என்ற சட்ட நிறுவனத்தாலேயே தயாரிக்கப்புட்டுள்ளது.

அப்போது பங்குப் பரிவர்த்தனை நிலையத்தின் தலைவராக இருந்த கலாநிதி காலக்க கொடஹேவா கிரிஷ் நிறுவனத்தின் ஆலோசகராக இருந்தார்.

குறித்த திட்டத்தைத் தொடங்குவதற்கான ஆரம்பகட்ட அனுமதியை வழங்குவதற்கு 450 மில்லியன் ரூபா தேவை என நாமல் ராஜபக்ஷவிடமிருந்து நாலக்க கொடஹேவாவுக்கு குறுஞ் செய்தியொன்று அனுப்பப்பட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டு கிரிஷ் கம்பனியுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் 450 மில்லியன் ரூபா தமக்குச் சொந்தமானது என நகர அபிவிருத்தி அதிகாரசபை குறிப்பிட்டிருந்தது.

எனினும் முழுமையான பணத்தையும் தாம் செலுத்தியிருப்பதாக அக்கம்பனி சுட்டிக்காட்டியிருந்தது.

இது தொடர்பில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளால் இத்திட்டம் இடைநடுவில் தடைப்பட்டதுடன், 550 மில்லியன் ரூபா தண்டமும் விதிக்கப்பட்டது.

2013 ஆம் ஆண்டு குறித்த கொடுக்கல்-வாங்கல் வெளிச்சத்துக்கு வந்தது. ஊடகவியலாளரான மந்தனா அபயவிக்ரமவின் வீட்டின் மீது இனந்தெரியாதவர்கள் நடத்திய தேடுதலுக்கும் இதற்கும் தொடர்பிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

அதேநேரம், நாமல் ராஜபக்ஷவின் பணிப்புரைக்கு அமைய நாலக்க கொட ஹேவா 400 மில்லியன் ரூபாவை கிரிஷ் கம்பனிக்கு மீளச் செலுத்தியுள்ளார்.

இதன்மூலம் குறித்த கொடுக்கல்-வாங்கலுக்காக 450 மில்லியன் ரூபா நாமல் ராஜபக்ஷவால் கொமிஷனாகப் பெறப்பட்டுள்ளமை புலனாகிறது.

இது தொடர்பில் நிதி மோசடிப் பிரிவினர் விசாரணைகளை நடத்திவருகின்றன ரெனஅவர் மேலும் தெரிவித்தார். (இ-5)




## ஆங்கில மொழிமூல பட்டதாரிகளைப் புறக்கணித்தல்

ஆங்கிலப் பாடங்களில் நிலவும் ஆசிரிய வெற்றிடங்களுக்கு பட்டதாரிகள் மற்றும் ஆங்கில டிப்ளோமாக்காரர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை -2016ஆங்கில மொழிமூல பட்டதாரிகளை புறக்கணித்தல்.

மேற்படி ஆசிரியர்களை நியமிப்பதற்கான போட்டிப் பரீட்சைக்காக மாகாண பொதுச் சேவை ஆணைக் குழுவால் அண்மையில் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தில் ஆங்கில மொழிமூலப் பட்டதாரிகள் சேர்த்துக்கொள்ளப்பட வில்லை.இது தொழில் வாய்ப்புக்காக ஏங்கும் ஆசிரியத் தொழிலில் அர்ப்பணிப்புடன் சேவை செய்ய ஒரு சந்தர்ப்பத்திற்காக காத்திருக்கும் ஆங்கில மொழிமூலப்பட்டதாரிகளுக்கு மன உளைச்சலையும் வேதனையையும் கொடுத்துள்ளது.

பின்வரும் தகைமை உடையோர் மாத்திரமே மாகாணப் பொதுச் சேவை ஆணைக் குழுவால் போட்டிப் பரீட்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

1) ஆங்கில மொழியை முதன்மைப் பாடமாகக் கொண்ட பட்டதாரிகள். இவ்வகை பட்டதாரிகள் மிகச் சிலரே ஆவர்.

2) 2 வருடத்திற்கு குறையாத உயர் தேசிய டிப்ளோமா (HNDE)பாட நெறியை கொண்டவர்கள்

இவர்கள் 2வருடம் ஆங்கில டிப்ளோமா பாட நெறியை பயின்று டிப்ளோமா பட்டம் பெற்றவர்கள்.

ஆங்கில மொழிமூலப் பட்டதாரிகள் பொருளாதாரம்,முகாமைத்துவம் போன்ற பல பாடங்களையும் ஆங்கில மொழி மூலத்தில் பயின்று சித்தியடைந்தவர்கள் .எனவே 4 வருடம் ஆங்கில மொழி மூலத்தில் பயின்ற இவர்கள் எவ்வகையிலும் டிப்ளோமா தாரிகளுக்கு குறைந்தவர்கள் அல்லர் .மேலும் குறிப்பிட்ட பாடங்களை பாடசாலைகளில் 6–11 வரையான வகுப்புகளுக்கு கற்பிக்க இவர்கள் பொருத்தமானவர்களாக அமைவர். எனவே இவர்களை போட்டிப் பரீட்சையில் சேர்த்துக் கொள்ளாமை பாரிய தவறாகும்.அத்துடன் குறித்த ஆங்கில மொழி மூலப் பட்டதாரிகளுக்கு செய்யப்படும் அநீதியும் ஆகும்.

எனவே மாகாண பொது சேவை ஆணைக் குழு இத் தவறை திருத்தி ஆங்கில மொழி மூலப் பட்டதாரிகளையும் இணைத்துக் கொண்டு இப் பரீட்சையை நடத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

ந.பாலகுமார்

## நிர்வாக சபை கூட்டம் இன்று

வடமாகாண சமாதான நீதவான்களின் இடைக்கால நிர்வாக சபைக்கூட்டம் இன்று காலை 9.30 மணிக்கு கண்டி வீதியில் உள்ள சர்வோதய காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் இடைக்கால நிர்வாக சபைக்கு தெரிவு செய்யப்பட்ட அனைத்து சமாதான நீதவான்களையும் கலந்து கொள்ளும்படி இணைப்பாளர் என்.கிருபாகரன் கேட்டுக் கொண்டுள்ளார்.(இ-134)

## விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

வலிகாமம் கல்வி வலயத்தின் முறைசாராக் கல்வி அலகினால் நடத்தப்படும் பின்வரும் பயிற்சி நெறிகளுக்கான போதனாசிரியர் பதவிகளுக்குப் பொருத்த மானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள்கோரப்படுகின்றன.

விண்ணப்படிவங்களை வலிகாமம் கல்வி வலய கல்வி அபிவிருத்திப் பிரிவில் பெற்று 31.03.2016 ஆம் திகதிக்கு முன்பாக மீள ஒப்படைக்கவும் .மேலதிக விபரங்களை அலுவல விளம்பரப் பலகையில் பார்வையிடலாம்.

பயிற்சி நெறிகள்:-கேக் ஐசிங் வடிவமைப்பு, அடிப்படை எழுத்தறிவூட்டல், நவீன ஆடை வடிவமைப்பும் தயாரிப்பும் முக ஒப்பனையும் தலையலங்காரமும்வெல்டிங்(மின்ஒட்டுதல் தொழில்நுட்பம்), கனணிப்பயிற்சி நெறி என வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ)

# செய்தித்துளிகள்

## பொன்னம்பலவானேஸ்வரர் இன்று தேரில் ஆரோகணிப்பார்

கொச்சிக்கடை ஸ்ரீ பொன்னம்பலவானேஸ்வரர் ஆலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறும் தேர் உற்சவத்தை முன்னிட்டு காலை 5 மணிக்கு சுவாமிக்கு ஆரம்ப பூசையும் 6.45 மணியளவில் வசந்த மண்டபப் பூசையும் நடைபெற்று காலை 8 மணிக்கு சுவாமி தேரில் ஆரோகணித்து வெளி வீதி உலா வரவுள்ளார். (இ)

## மகாநாயக்கருக்கான தெரிவு ஏப்ரல் 7

கண்டி அஸ்கிரிய பீடத்தின் புதிய மகாநாயக்கரை தெரிவு செய்யும் நிகழ்வு எதிர்வரும் ஏப்ரல் 7ஆம் திகதியன்று இடம்பெறவுள்ளது.

இதற்கான தேர்தல் 7ஆம் திகதி மாலை 4 மணிக்கு இடம்பெறும் என அஸ்கிரிய பீடம் அறிவித்துள்ளது.

அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கராக இருந்த வணக்கத்துக்குரிய கலகம தம்மசிடி ஸ்ரீ தம்மானந்த அத்தாதஸ்ஸி தேரர் கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் காலமானதை அடுத்து இந்த பதவிக்கு வெற்றிடம் ஏற்பட்டது.

இலங்கையின் பௌத்த மதத்துக்கு முதன்மையான குருவாக விளங்கும் அஸ்கிரிய மகாநாயக்கர், அரசியலுக்கும் முக்கிய ஆலோசகராக சில வேளையில் முடிவுகளை மாற்றுபவராக செயற்பட்டு வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## சிசிலியா கொத்தலாவலவின் விளக்கமறியல் மீண்டும் நீடிப்பு

செலிங்கோ குழுமத்தின் அதிபராகவிருந்த லலித் கொத்தலாவலவின் மனைவியான சிசிலியா கொத்தலாவலவின் விளக்கமறியல் மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்தப்பட்ட போதே விளக்கமறியலை நீடித்து உத்தரவிடப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை சிசிலியாவை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார். (இ-5)

## மோதலுக்கும் பாதாளக்குழுவுக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை

ஒபேசேகரபுர பகுதியில் இடம்பெற்ற மோதலுக்கும் பாதாள உலகக் குழுக்களுக்கும் தொடர்பில்லை என பாதுகாப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை இராஜகிரிய - ஒபேசேகரபுர பகுதியில் இரு குழுக்களுக்கு இடையில் இடம்பெற்ற கருத்து முரண்பாடு வலுவடைந்தமையால் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டார்.

இதன்போது, காயமடைந்த மற்றுமொருவர் தற்போது கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இதனடிப்படையில், இந்த சம்பவத்துடன் பாதாள உலகக் குழுக்களுக்கு சம்பந்தமில்லை எனவும், மது பானம் அருந்தியதால் ஏற்பட்ட முரண்பாடே இதற்குக் காரணம் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ-5)

## கொக்கு இறைச்சி விற்பனை; இருவர் பொலிஸாரால் கைது

விற்பனைக்காக கொக்குகளைக் கொன்ற இரு இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து கொல்லப்பட்ட 20 கொக்குகளும் கைப்பற்றப்பட்டதாக மட்டக்களப்பு கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர்.


கிரான்- ஈரளக்குளம் பிரதேசத்தைச் சேர்ந்த 18 வயதுடைய இந்த இளைஞர்கள் நீதிமன்றில் ஆஜர்செய்யப்படவுள்ளதாக கரடியனாறு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சேனநாயக்க தெரிவித்தார். (இ-5)

## 68 வாடகை வாகனங்களை பயன்படுத்தினாராம் வீரவன்ச

அரசாங்கத்தின் சுற்றுநிருபங்களை உதாசீனப்படுத்தி முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச, 68 வாடகை வாகனங்களை பயன்படுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.இதன் காரணமாக முன்னைய அரசாங்கத்திற்கு பல மில்லியன் ரூபாய்கள் நட்டமேற்பட்டுள்ளது.

இந்த தகவலை நிதிமோசடி தொடர்பில் பொலிஸ் பிரிவு வெளியிட்டுள்ளது.இவ்வாறு பயன்படுத்தப்பட்ட வாடகை வாகனங்களால் 70 மில்லியன் ரூபாய்கள் நட்டமேற்பட்டதாக கண்டறியப்பட்டுள்ளது. (இ-5)

# இனியும் பொறுத்துக்கொள்வாரா இந்தியத் தூதுவர் வை.கே.சின்ஹா



மகிந்தவைச் சூழ தற்போது இந்திய எதிர்ப்பாளர்கள் உள்ள நிலையில், எதிர்காலத்தில் இந்தியாவின் ஆதரவைப் பெற்றுக் கொள்வதில் மகிந்த பெரும் நெருக்கடியை எதிர்நோக்குவார்.

இவ்வாறு சிலோன் ருடே நாளிதழில் எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார் உபுல் ஜோசப் பெர்னாண்டோ. இதனை மொழியாக்கம் செய்துள்ளார் நித்தியபாரதி.

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் எவ்வாறு இந்தியாவுடன் தொடர்பைப் பேணியிருந்தது என்பது தொடர்பாகவும் இது தொடர்பில் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் போன்ற முன்னாள் அமைச்சர்களின் கருத்துக்கள் மற்றும் கோட்பாடுகள் எவ்வளவு தூரம் முரண்பாடானவையாக உள்ளன என்பது தொடர்பாகவும் கொழும்பு மற்றும் டில்லிக்கு இடையில் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளை இந்த அமைச்சர்கள் எவ்வளவு தூரம் தமது சுயநல அரசியலுக்காகப் பயன்படுத்தினர் என்பது தொடர்பாகவும் இங்கு ஆராயப்படுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்பைப் பேணிய தமிழ்நாட்டு அரசியல்வாதிகளுக்கு எதிராக இந்திய மத்திய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மகிந்தவின் ஆட்சிக்காலத்தில் இந்தியாவுக்கான இலங்கையின் உயர் ஆணையாளராகச் செயற்பட்ட பிரசாத் காரியவசம் அழுத்தம் கொடுத்திருந்தார். காரியவசத்தின் இந்த அழுத்தமானது இந்திய மத்திய அரசாங்கத்தைக் குழப்பத்திற்கு உள்ளாக்கியது. காரியவசத்தால் விடுக்கப்பட்ட இந்த அறிக்கைக்கு முரணாக, காரியவசத்தால் விடுக்கப்பட்ட இந்த அறிக்கை கொழும்பு அரசாங்கத்தின் நலன்களை அடிப்படையாகக் கொண்டது என மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் பதிலளித்தது.

இந்தியாவுடனான பொருளாதார தொழில்நுட்ப கூட்டு உடன்படிக்கையை எதிர்த்து இலங்கையில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடும் எதிர்க்கட்சி அரசியல்வாதிகளுக்கு எதிராக கொழும்பிலுள்ள இந்திய உயர் ஆணையாளர் வை.கே.சின்ஹா மிகத் தீவிரமான அறிக்கை ஒன்றை அண்மையில் வெளியிட்டிருந்தார். இந்தியாவுடனான பரந்த பொருளாதார கூட்டு உடன்படிக்கையை ஆதரித்த அதே அரசியல்வாதிகள் தற்போது பொருளாதார தொழில்நுட்ப கூட்டு உடன்படிக்கையை எதிர்க்கின்றமை தன்னை அதிர்ச்சிக்கு உள்ளாகியுள்ளதாக இந்தியாவின் உயர் ஆணையாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தியாவின் முன்னாள் ஆணையாளர்களில் ஒருவரான ஜே.என்.டிக்சித் போன்றே சின்ஹாவும் தற்போது சர்ச்சைக்குரிய செயற்பாடுகளில் ஈடுபட முயற்சிப்பதாக, பரந்த பொருளாதார கூட்டு உடன்படிக்கையை முன்னர் ஆதரவளித்த பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் பதிலளித்துள்ளார். இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்திக்கும் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவிற்கும் இடையில் 1987 ஜூலையில் இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னரும் அதற்கு முன்னரும் டிக்சித் சர்ச்சைக்குரிய பங்கு வகித்திருந்தார்.

கொழும்பில் உயர் ஆணையாளர்களாகப் பணியாற்றிய சிலர் பின்னர் இந்தியாவின் வெளியுறவுச் செயலர்களாகக் கடமையாற்றியுள்ளனர். வி.வை. குண்டேவியா, ஜே.என். டிக்சித், சிவ்சங்கர் மேனன் மற்றும் நிருபமா ராவ் ஆகியோரே கொழும்பில் உயர் ஆணையாளர்களாகவும் பின்னர் இந்திய வெளியுறவுச் செயலர்களாகவும் பணியாற்றியவர்களாவர்.

கொழும்பில் பணியாற்றிய இந்திய உயர் ஆணையாளர்களில் டிக்சித் மற்றும் நிருபமா ஆகிய இருவரும் சர்ச்சைக்குரிய பங்கை வகித்திருந்தனர். இந்திய- இலங்கை ஒப்பந்தத்தின் நிர்மாணி டிக்சித் ஆவார். நிருபமா ராவ் இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிட்டதுடன் இலங்கையின் அப்போதைய சுற்றுலாத்துறை அமைச்சர் அனுர பண்டாரநாயக்கவின் கடுமையான கண்டனங்களுக்கும் உட்பட்டிருந்தார்.

அப்போதைய அரசாங்கங்கள் மற்றும் எதிர்க்கட்சி ஆகிய இரண்டினதும் விமர்சனங்களை டிக்சித் மற்றும் நிருபமா ஆகிய இருவரும் சந்தித்தனர். ஆனால் இந்தியா இவ்விருவரையும் காப்பாற்றியது. ஏனெனில் இவர்கள் இந்தியாவின் அறிவுறுத்தல்களையே செயற்படுத்தியிருந்தனர். கொழும்பில் இவ்விருவரும் தமது பதவிக் காலத்தை முடித்து இந்தியாவிற்குத் திரும்பிய பின்னர் இவர்கள் இந்திய வெளியுறவுச் செயலர்களாக பதவி உயர்த்தப்பட்டனர்.

இவ்வாறானதொரு நிலையில், தற்போது இலங்கைக்கான இந்திய உயர் ஆணையாளராகப் பதவி வகிக்கும் வை.கே. சின்ஹா கூடிய விரைவில் இந்திய வெளியுறவுச் செயலராக நியமிக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

சின்ஹா சர்ச்சைக்குரிய குணவியல்புகளைக் கொண்டிருப்பது போல் தெரியவில்லை. இவர் மிகவும் அமைதியான ஒருவராகவே காணப்படுகிறார். இலங்கையின் இந்திய உயர் ஆணையாளராகச் செயற்பட்ட அசோக் காந்தாவை அடுத்தே சின்ஹா கொழும்பிற்கு வருகை தந்தார். இவரது வருகையின் பின்னர் மகிந்தவின் ஆட்சியும் கைமாறியது.

அசோக் காந்தாவை திருப்பி அழைக்குமாறு இந்தியாவுக்கு மகிந்த மறைமுகமாக அழுத்தம் கொடுக்கப்பட்ட போதிலும், கொழும்பில் தனது கடமைகளை நிறைவு செய்யும் வரை அவரை இந்தியா திருப்பி அழைக்கவில்லை. அசோக் காந்தாவை தொடர்ந்து கொழும்பிற்கான இந்திய உயர் ஆணையாளராக நியமிக்கப்பட்ட சின்ஹா, மகிந்த அரசாங்கத்துடன் சில சிக்கலான முக்கிய விடயங்கள் தொடர்பாக பேச்சுக்களை நடத்தாது அமைதி காத்தார்.

தனது ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு இந்தியப் புலனாய்வு அதிகாரி ஒருவர் முயற்சி செய்வதாக மகிந்த அரசாங்கத்தால் பழிசுமத்தப்பட்ட போதிலும், மகிந்த ஒருபோதும் சின்ஹாவையும் கொழும்பிலுள்ள அவரது உயர் ஆணையகத்தையும் பழிசுமத்தவில்லை. நரேந்திர மோடி கொழும்பிற்கு வருகை தந்த போது, மகிந்தவின் வேண்டுகோளுக்கு இணங்க, மகிந்தவிற்கும் மோடிக்கும் இடையிலான பேச்சுக்களுக்கு சின்ஹாவே அனுசரணையாளராகச் செயற்பட்டார்.

கூட்டு எதிர்க்கட்சி ஜி.பி.எஸ் வரிச் சலுகை வழங்கப்படும் ஒரேயொரு தென்னாசிய நாடு இலங்கை என பேராசிரியர் பீரிஸ் சுட்டிக்காட்டியிருந்தார். இந்த ஏற்பாடுகளின் கீழ் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு 7200 ஏற்றுமதிப் பொருட்களை ஏற்றுமதி செய்ய முடியும். இதனைப் பயன்படுத்துமாறு இந்திய நிறுவனங்களுக்கு இலங்கைய அழைப்பு விடுத்ததுடன் ஐரோப்பாவிற்கான ஒரு பாதையாக இலங்கை அமைய வேண்டும் எனவும் கோரியிருந்தார்.

(தொடரும்)

பிச்சைக்காரனுக்கு பிச்சை இல்லை என்று மருமகள் சொல்லக் கூடாது. மாமியார்தான் சொல்ல வேண்டும். – ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தென்பகுதி குழப்பங்கள் தமிழ் மக்களைப் பாதிக்கும்

2016ஆம் ஆண்டில் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் நம்பியிருக்கும் வேளையில் தென்பகுதி அரசியலில் மிகப்பெரும் முரண்பாடுகள் வெளிக்கிளம்பியுள்ளன.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசை எதிர்ப்பதில் கங்கணம் கட்டி நிற்கின்றார். உங்களால் முடியாவிட்டால் ஆட்சியை என்னிடம் தாருங்கள்; நான் நாட்டை எப்படி ஆட்சி செய்து காட்டுகிறேன் பாருங்கள் என்று மார்தட்டும் மகிந்த ராஜபக்ஷவுக்கு வெறும் வார்த்தைகளால் பதில் அளிப்பதையே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செய்து வருகிறார்.

ஐயா! தாங்கள் நாட்டை ஆட்சி செய்த இலட்சணம் கண்டுதானே நான் களத்தில் இறங்கினேன். உங்களின் ஆட்சி எப்படிப் போனது? என்ன நடந்தது? என்றெல்லாம் எங்களுக்குத் தெரியும் என்பது ஜனாதிபதி மைத்திரியின் பதிலாகும்.

இதனிடையே முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், மகிந்த ராஜபக்ஷ தரப்பை எதிர்ப்பதில் தீவிரமாக உள்ளார்.

இந் நிலைமைகள் தென்பகுதியில் புதியதொரு சலசலப்பை ஏற்படுத்தி வருகிறது. இஃது தமிழ் மக்களைப் பொறுத்தவரை நல்லது அல்ல என்றே கூற வேண்டும்.

ஏனெனில் தென்பகுதியில் அரசியல் குழப்பங்கள் இருக்குமாயின் அது தமிழ் மக்களுக்கான பிரச்சினைக்குத் தீர்வு என்ற விடயத்தை திசை திருப்பும் என்பதே உண்மை.

அதாவது தீர்வு என்ற எதையும் இலங்கை அரசு தரப்போவதில்லை என்பது இரா.சம்பந்தர் ஐயாவைத் தவிர மற்றெல்லோருக்கும் தெரிந்த விடயம். இருந்தும் 2016க்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணாதது ஏன் என்றொரு கேள்வியை சர்வதேச சமூகம் எழுப்பினால் அதற்கு தென்பகுதியில் இருக்கக் கூடிய அரசியல் குழப்பம் காரணமாகவே இனப்பிரச்சினைக்கு தீர்வு காணமுடியாமல் போனது என்று இலங்கை அரசு சாட்டுப்போக்குச் சொல்லும். இதனை ஏற்றுக் கொள்வதற்கு சர்வதேச சமூகம் தயாராக இருக்கும் என்பது உண்மை.

ஆக, இனப்பிரச்சினைக்கான விடயத்தை விலத்தி ஓடுவதற்கு தென்பகுதியில் இருக்கக்கூடிய அரசியல் சர்ச்சைகள் சந்தர்ப்பமாக அமையும் என்பது ஏற்புடையது.

இது தவிர அரசியல் சர்ச்சையை நிறுத்துவ தென்பது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசுக்கு அவ்வளவு கடினமல்ல.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது ஆட்சியில் கையாண்ட நடைமுறைகளில் ஒரு சிலவற்றை பிரயோகித்தாலும் அரசியல் சலசலப்புகள் அடியோடு நின்று போகும். இருந்தும் அதைச் செய்வதற்கு அரசு தயாரில்லை.

ஏனெனில் போர்க்குற்ற விசாரணை; இனப்பிரச்சினைக்கான தீர்வு; சர்வதேசத்தின் தலையீடு; ஜெனிவாவுக்கான பதில் அளிப்பு என்பவற்றோடு ஒப்பிடுகையில், தென்பகுதியில் தற்போது இருக்கக்கூடிய சலசலப்புகள், குழப்பங்கள் ஒன்றும் பெரிதல்ல.

எனவே, பெரிதுபடுத்தத் தேவையில்லாத ஒன்றைத் பெரிதுபடுத்திக் காட்டுவதன் மூலம் பெரிதுபடுத்த வேண்டியதை சாதாரணமாக்கிவிட முடியும் என்ற கோட்பாடு கடைப்பிடிக்கப்படுகிறது என்பது தெரிகிறது.

எது எப்படியாயினும் சர்வதேச சமூகத்துக்கு எங்களின் பிரச்சினைகளை எடுத்துக் கூறி தென்பகுதி அரசியல் குழப்பங்கள் தமிழ் மக்களை கடுமையாகப் பாதிக்கும் என்ற யதார்த்தத்தை வெளிநாட்டுப் பிரதிநிதிகளின் கவனத்துக்குக் கொண்டு வந்து தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்பதை சர்வதேச சமூகத்தின் ஊடாக வலியுறுத்துவதை தமிழ்த் தரப்புகள் செய்தாக வேண்டும்.

இதைச் செய்யாதவிடத்து தமிழ் மக்களின் எதிர்காலம் மிகவும் பயங்கரமானதாக அமையும் என்பது சர்வ நிச்சயம்.

## எட்கா உடன்படிக்கை கைச்சாத்தானால் இந்தியாவின் மாநிலமாக இலங்கை மாறும்

### உதய கம்மன்பில எச்சரிக்கை

(கொழும்பு)

எட்கா எனப்படும் இலங்கை - இந்திய பொருளாதார, தொழில்நுட்ப கூட்டு உடன்பாடு கைச்சாத்திடப்பட்டால், இலங்கை எதிர்காலத்தில் இந்தியாவின் மாநிலமாகவோ அல்லது காலனித்துவ நாடாகவோ மாறிவிடும் ஆபத்து உள்ளது என ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கத்தால் கையளிக்கப்பட்ட எட்கா உடன்டிக்கை தொடர்பான வரைவை இந்திய அரசு ஆராய்ந்து வருவதாக கொழும்பிலுள்ள இந்திய தூதுவர் வை.கே.சின்ஹா கடந்த சனிக்கிழமை தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், இந்த எட்கா உடன்படிக்கை தொடர்பில் கருத்து வெளியிட்ட போதே தூய்மையான ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இதுதொடர்பில் உதய கம்மன்பில மேலும் குறிப்பிடுகையில்,

இந்தியாவுடன் உடன்பாட்டை செய்து கொள்ள வேண்டாம் என்று நாம் கோரவில்லை. மாறாக இந்தியாவின் காலனித்துவ நாடாக இலங்கையை மாற்ற வேண்டாம் என்றே நாங்கள் கேட்கிறோம்.

இந்தியாவுடனான கூட்டு உடன்பாடுகளுக்கு நாங்கள் எதிரானவர்கள் அல்ல. ஆனால் எமது வளங்களை இந்தியாவுக்கு தாரை வார்க்கும் உடன்பாட்டையே நாம் எதிர்க்கிறோம்.

சிக்கிம் என்ற பிரதேசத்தை ஏற்கெனவே இந்தியாவின் ஒரு மாநிலமாக இணைத்துக் கொண்டு அதற்கு ஒரு நாடாளுமன்ற ஆசனம் வழங்கப்பட்டுள்ளது. அதேபோன்று இந்தியாவுடன் எட்கா உடன்பாட்டில் கையெழுத்திடுவதும், அனுமான் பாலம் அமைப்பதுமே கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவரின் திட்டம்.

இதன்மூலம் இலங்கை எதிர்காலத்தில் இந்தியாவின் மாநிலமாகவோ அல்லது காலனித்துவ நாடாகவோ மாறிவிடும் ஆபத்து உள்ளது.

வரலாற்று ரீதியாக இலங்கையின் எதிரியாகவே இந்தியா இருந்து வந்துள்ளது. எனவேதான் ஜே.வி.பி.யின் தலைவர் ரோகன விஜேவீர இந்தியாவின் ஆதிக்க விரிவாக்கத்துக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

இந்தியாவின் அம்புலன்ஸ் வண்டி சேவையைப் பெற்றுக் கொள்வதால் றோ உளவுப் பிரிவினர் தடையின்றி நாடு முழுவதும் நடமாடும் ஆபத்தான நிலைமை ஏற்படும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, இலங்கையின் சுகாதார சேவையை மேலும் வலுப்படுத்தும் நோக்குடன் இலங்கை அரசாங்கத்துக்கு அதி நவீன அம்புலன்ஸ் வண்டிகள் இந்திய அரசால் வழங்கப்பட்டுள்ளதாக சின்ஹா கண்டியில் கடந்த சனிக்கிழமை கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை கிளிநொச்சி பிரதேசத்தில் வட்டக்கச்சி, இரணைமடு விமானப்படை I மற்றும் II, வட்டக்கச்சி பாம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசததில இரணையிலுப்பைக் குளம், சாஸ்திரிகூழாங்குளம், ஈச்சங்குளம், கிடாச்சூரி, காக்கையன்குளம், பூம்புகார், நொதேர்ண் பாம், ஆசிரியர் தொழில்நுட்பக்கல்லூரி ஆகிய பிரதேசங்களிலும் மின்விநியோகம் தடைப்படும். (இ-9)

## ஆய்வுக் கட்டுரைகளை அனுப்பி வைக்கலாம்

(யாழ்ப்பாணம்)

பண்பாடு என்பது வாழ்வியலாகவும் மேம்பட்ட வாழ்வுக்கான செல்நெறியாகவும் வழிகாட்டி நிற்கின்றது. பண்பாட்டின் மேம்பாட்டிலும் பண்பாட்டினை பேணுகையிலும் கலை இலக்கியங்களின் இடம் முக்கியமானது. இந்தவகையில் இன்றைய உலகமயமாக்கச் சூழமைவில் எங்கள் கலை இலக்கியங்களின் சமகால நிலைமையினை மதிப்பிடுவதும் எதிர்காலத்திற்கான செல்நெறியினை இனங்காட்டுவதும் இந்த ஆய்வரங்கின் பிரதான நோக்கமாகும்.

ஆய்வரங்கின் கருப்பொருள் "ஈழத்துதமிழ்கலை இலக்கிய பண்பாட்டுத் தளத்தில் உலகமயமாதலும் உள்ளூர்மயமாதலும்'' பின்வரும் பொருட்பரப்பினுள் உள்ளடங்கத்தக்கதாக தங்கள் ஆய்வுத் தலைப்புக்களை தெரிவு செய்யுமாறு ஆய்வாளர்களை கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

- சுதேச கலைவடிவங்களின்/பண்பாட்டு அடையாளங்களின் பேணுகையும் மேம்படுத்தலும்
- கலை இலக்கியங்களும் இனவரைவியலும்
- சமூக நீதிக்கான/சமூக மாற்றத்திற்கான கலை இலக்கியங்கள்
- மொழிபெயர்ப்பு இலக்கியங்களும் பண்பாட்டிடைத் தொடர்பாடலும்
- சமகால ஆற்றுகை/காண்பிய கலைகளின் இருப்பும் செல்நெறியும்
- வெகுஜன ஊடகங்களின் சமூகப் பொறுப்பும் ஊடக அறிவும்

ஆய்வாளர்கள் தங்கள் ஆய்வுச் சுருக்கத்தினை (300 சொற்களுக்குள்) எதிர்வரும் 2016.04.30ஆம் திகதிக்கு முன்னராக பணிப்பாளர், வடமாகாண பண்பாட்டுத் திணைக்களம், இல.175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றார்கள். ஆய்வுச் சுருக்கத்தில் தங்களது தொலைபேசி இலக்கம் முகவரி குறிப்பிடப்படல் வேண்டும். ஆய்வரங்குக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுரைகள் பற்றிய விபரங்கள் ஆய்வாளர்களுக்கு பின்னர் அறிவிக்கப்படும் என வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி வனஜா செல்வரட்ணம் அறிவித்துள்ளார். (இ-5)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



மனிதனின் மகிமையை (Dignity) இந்து மதத்தைப் போல் வேறு எந்த மதமும இவ்வளவு உயர்வாகக் கூற வில்லை. அதேவேளையில் உலகில் உள்ள எந்த மதமும் இந்து மதம் செய்வதுபோல் ஏழைகள் மற்றும் தாழ்ந்தவர்களின் கழுத்தை நெரிப்பதும் இல்லை. குற்றம் மதத்தினுடையதல்ல. மாறாக உட்கருத்தைப் பாராமல் வெளி ஆசாரத்தைப் பிரமாதப்படுத்துபவர்களை, அவநம்பிக்கை மிக்கவர்களை, வஞ்சகப் போலிகளை அந்தக் குற்றம் சாரும் என்பதை இறைவன் எனக்குக் காட்டியுள்ளார்.

வேலை செய்யுங்கள், வேலை செய்யுங்கள், வேலை செய்யுங்கள் இதுவே மூலமந்திரம்.

ஒருமதம் பயனுள்ளதாக இருக்கவேண்டுமானால் அது உத்வேகம் மிக்கதாக இருக்கவேண்டடம். அதேவேளையில் அதில் உட்பிரிவுகள் பெருகிக்கொண்டே போகின்ற அபாயத்தையும் தடுக்க வேண்டும்.

எதற்கெடுத்தாலும் ஏன் என்று கேட்டுக்கொண்டிருப்பதல்ல, வேலை செய்வதும் அதிலேயே மடிவதும்தான் நாம் செய்யவேண்டியது. எல்லையற்ற உற்சாகத்துடன் திகழுங்கள்.

## க.பொ.த (சா/த) பெறுபேறுகள்-2015

**சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்**

அ.அசோதா-8ஏசி, த.நிதர்சன்-6ஏபி2எஸ், ந.யதுர்சினி-3ஏ3பி3சி, கி.கஸ்தூரி-4ஏ3பி2சி, து.கலாநிதி-2ஏ5பிசி

**மானிப்பாய் மகளிர் கல்லூரி**

**ஆங்கிலமொழி மூலம்**

ஏ.கௌசிகா-9ஏ, பி.மகிழரசி-9ஏ, பி.லவனியா-7ஏ2பி, ஆர்.தர்சிகா-6ஏ2பிசி

**தமிழ்மொழிமூலம்**

ஆர்.நிவேதா-9ஏ, ஆர்.அபிராமி-8ஏபி, கே.கம்சாயினி-8ஏபி, ரி.பானுப்பிரியா-8ஏஎஸ், எம்.ஆதிரை-7ஏ2பி, டி.டொறின்மேசி-7ஏபிசி, கே.ருபிஷா-7ஏபிசி, என். தரணியா-6ஏ3பி, ஜே. ஜெனனி-6ஏ2பிசி, கே.லக்சி-6ஏபி2சி, பி.பவதாரணி-5ஏ4பி, ஆர்.சுமித்தா-5ஏ4பி, ஜே.பினுசியா-5ஏ3பிசி, எஸ்.பிரியங்கா-5ஏ3பிசி, எஸ்.சர்ப்பவதி-5ஏ2பி2சி, பி.விதுனா-5ஏ2பி2சி, ஆர்.கீர்த்திகா-5ஏ2பி2சி, என்.இலக்ஸ்சியா-4ஏ4பிஎஸ், ஜே.சுஜிபா-4ஏ3பி2சி, ஜே.டிசானி-4ஏ3பிசிஎஸ், எஸ்.தர்சிகா-4ஏ3பி3சி, யு.சுஜா-4ஏ2பி3சி, எஸ்.சோமிகா-4ஏ2பி2சிஎஸ், எஸ்.சஜஸ்ரினா-4ஏ2பிசி2எஸ், ஜே.டிலுக்சி-4ஏ2பிசிஎஸ்

**யாழ்.மாதகல் சென்.ஜோசப் மகா வித்தியாலயம்**

இ.வனஜா-8ஏசி; தி.திருமால்-7ஏ2பி, பெ.அனுசியா-7ஏபிசி, அ.சிந்துஜன்-5ஏ3பிஎஸ், ம.சேவியர் ரஜீதன்-5ஏபி2சிஎஸ், ஜெ.அனுசியா-4ஏ4பிசி, அ.அன்ரன் டனிஸ்-4ஏ3பி2சி,ரா.யோகிதா-4ஏ3பி2சி, ச.சதுஷா-4ஏ2பி2சிஎஸ், அ.அன்ரனி ஜெரிசன்-4ஏபி2சி2எஸ், ஜெ.றுக்ஷன்-3ஏ4பி2சி

**யாழ்.அச்சுவேலி மத்திய கல்லூரி**

தி.யதுசன்-8ஏபி, இ.சிறீராம்-8ஏபி, சி.லதுசன்-7ஏபிஎஸ், க.நிறோசனா-6ஏ2சிஎஸ், கி.கிரிசாந்தன்-6ஏபிசிஎஸ், சி.கோகுலராஜ்-6ஏ2பிசி, ஜெ.மதுராங்கன்-5ஏ2பிசிஎஸ், பொ.சானுஜன்-5ஏபிசி2எஸ், இ.பிறேமலதா-5ஏபிசி2எஸ், த.சரண்யா-5ஏ2பிசிஎஸ், சு.திவ்வியா-5ஏ2பி2சி, சி.நிறோஜன்-4ஏ3பிசிஎஸ், ர.கீர்த்திகன்-4ஏ4பிஎஸ், ச.கோகுலதாஸ்-4ஏ2பி2சி, க.நிலக்சனா-3ஏ2பி4சி, க.அஜிந்தினி-3ஏ2பி3சி, ச.கிரிசாந்-3ஏ3சி 2எஸ்.

## 'எதிர்காலம் எம் கைகளில்'

(யாழ்ப்பாணம்)

போதைப் பொருட்கள் விழிப்புணர்வு மற்றும் சிறுவர் பாதுகாப்பு அமையம் முன்னெடுக்கும் எதிர்காலம் எம் கைகளில் (இளைஞர் யுவதிகளை வலுப்படுத்தும் செயற்றிட்டம்) செயலமர்வு - 01 கைதடியிலுள்ள விநாயகர் மண்டபத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.15 மணியளவில் DASCO தலைவர் க.அருந்தவபாலன் தலைமையில் நடைபெறும்.

இதில் தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தின் தலைவர் பேராசிரியர் க.கந்தசாமி பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். (இ)

# கோப்பாய் கோட்டப்பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்ட தொடர்

## புத்தூர் சோமஸ்கந்தா சம்பியன்







கோப்பாய் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத் தொடர்களில் அனைத்து வயதுப் பிரிவுகளிலும் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியின் அணிகள் கிண்ணங்களை கைப்பற்றின. கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் கடந்த புதன்கிழமை இந்த இறுதியாட்டங்கள் நடைபெற்றன.

15 வயதினருக்கான இறுதியாட்டத்தில் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி அணியை எதிர்த்து கோப்பாய் மகா வித்தியாலய அணி மோதியது. 3 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி அணி 25:23, 25:20 என்ற நேர் செற்கணக்கில் வெற்றி பெற்று சம்பியனாகியது. மூன்றாமிடத்தை ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலய அணி பெற்றது.

17 வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் புத்தூர் சோமஸ்கந்தாக்கல்லூரி அணியை எதிர்த்து ஆவரங்கால் மகாஜன வித்தியாலய அணி மோதியது.

3செற்களைக் கொண்ட இறுதியாட்டத்தில் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரிஅணி முதல்செற்றை 25:22 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்ற ஆவரங்கால் மகாஜன வித்தியாலய அணி 22:25 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இரண்டாவது செற்றைக் கைப்பற்றி பதிலடி கொடுத்தது.

இதனால் கிண்ணத்தைத் தீர்மானிக்கும் செற்றாக மூன்றாவது செற் அமைந்தது. சரிவில் இருந்து மீண்ட சோமஸ்கந்தா கல்லூரி அணி 25:18 என்ற புள்ளிகள் அடிப்படையில் மூன்றாம் செற்றைக் கைப்பற்ற முடிவில் அந்த அணி 2:1 என்ற செற் கணக்கில் சம்பியனாகியது. மூன்றாமிடத்தை ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலய அணி பெற்றது.

19 வயது பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி அணியை எதிர்த்து அச்சுவேலி மத்திய கல்லூரி அணி மோதியது. 3 செற்களைக் கொண்ட ஆட்டத்தில்முதல் இருசெற்களையும் முறையே 25:21,25:12 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி அணி 2:0 என்ற நேர் செற் கணக்கில் சம்பியனாகியது. மூன்றாமிடத்தை ஆவரங்கால் மகாஜன வித்தியாலய அணி பெற்றது. (கு)

# கரைதுறைப்பற்று பி.செயலக மென்பந்து சுற்றுப் போட்டி

## முள்ளியவளை வித்தியா சம்பியன்



கரைதுறைப்பற்று பிரதேச செயலக விளையாட்டுப் போட்டிகளில் விளையாட்டு கழகங்களிடையே நடத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் முல்லைத்தீவுசென்ஜூட் அணியை வீழ்த்தி ஐந்து இலக்குகளால் வெற்றி கொண்டு முள்ளியவளை வித்தியா அணி சம்பியனாகியது.

இப்போட்டிகளை கரைதுறைப்பற்று விளையாட்டு உத்தியோகத்தர் கபிலன் வழி நடத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (கு-302)



உடுவில் பிரதேச செயலக கழகங்களுக்கு இடையே நடைபெற்ற பெண்களுக்கான உதைபந்தாட்ட போட்டி அண்மையில் நடைபெற்றது. இதில் கோட்டைகாடு மல்லாகம் ஸ்ரீமுருகன் அணி இறுதிப் போட்டியில் சம்பியனாகியது. அவ்அணியினரை படத்தில் காணலாம்.

# வலிகாம கல்வி வலய பெண்களுக்கான காற்பந்து

## தெல்லிப்பழை மகாஜன சம்பியன்



வலிகாம கல்வி வலய 19 வயதுப் பிரிவு பாடசாலை பெண்கள் அணியினருக்கான காற்பந்தாட்ட இறுதிப்போட்டி நேற்று முன்தினம் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இறுதிப்போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும் மானிப்பாய் மகளிர் கல்லூரியும் மோதியது. பரபரப்பான இறுதிப்போட்டியில் 3:0 என்ற ரீதியில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி சம்பியனாகியது. 3 ஆம் இடத்துக்கான போட்டியில் நகுலேஸ்வரா வித்தியாலயமும் ஏழாலை சிறிமுருகன் வித்தி யாலயமும் மோதிக்கொண்டன. இப்போட்டியில் 1:0 என்ற ரீதியில் கீரிமலை நகுலேஸ்வரா வித்தியாலயம் வெற்றி பெற்று 3 ஆம் இடத்தினை பெற்றுக் கொண்டது. (கு)

## இன்றைய போட்டிகள்

கொக்குவில் கே.சி.சி.சி விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்படும் துடுப்பாட்ட சுற்றுப்போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் ஸ்ரான்லி அணியினை எதிர்த்து வின்ஸ் அணியும் மதியம் ஒரு மணிக்கு நடைபெறும் போட்டியில் விக்ரோறியா விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கிராஸ் கோப்பர்ஸ் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளது. (கு)

# கே.சி.சி.சி.வெற்றிக்கிண்ணம் -2016 சாவகச்சேரி றிபேக் தாரகை வெற்றி

கே.சி.சி.சி.கிரிக்கட் தொடரின் முதலாவது போட்டியில் சாவகச்சேரி றிபேக்தாரகை மற்றும் அரியாலை மத்தி விளையாட்டுக்கழக அணிகள் மோதிக்கொண்ட போட்டியில் றிபேக்தாரகை 3விக்கெட்டுக்களால் வெற்றியை பெற்றுக் கொண்டது. கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற போட்டியில் நாணயச் சுழற்ச்சியில் வென்ற அரியாலை மத்தி விளையாட்டுக்கழக அணி முதலில் துடுப்பெடுத்தாடி 26.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 154 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. அரியாலை மத்தி விளையாட்டுக்கழக அணி சார்பாக துடுப்பாட்டத்தில் டிலான் 30 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தார்.

றிபேக்தாரகை சார்பாக பந்து வீச்சில் மார்க்சிங் 4 விக்கெட்டுக்களையும் தஸிந்தன் 3விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.154 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடிய றிபேக் தாரகை ஆரம்பத்தில் 44 ஓட்டங்களுக்கு 5விக்கெட்டுக்களை இழந்து தடுமாறிய வேளை மத்திய வரிசை துடுப்பாட்ட வீரர்கள் பிரசங்கர், தர்ஷன்.புஷாந்தன் ஆகியோரின் நிதான ஆட்டத்தின் உதவியுடன் 26.2 ஓவர்களில் வெற்றி இலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் பிரசங்கர் 43 ஓட்டங்களையும், பீரவின் 30 ஓட்டங்களையும் .புஷாந்தன் .26, மற்றும் தர்ஷன் 15 ஓட்டங்களை பெற்று கொடுத்தார்கள். அரி யாலை மத்தி விளை யாட்டுக்கழக அணி சார்பாக பந்துவீச்சில் லினோதரன் 3விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.(கு-29)



## இந்தியாவிலுள்ள..

புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமதஅலுவல்கள் அமைச்சர் சுவாமிநாதன் அவர்களின் முயற்சியால் தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சும் இலங்கை விமான சேவை நிறுவனமும் அவர்களது பயணப்பொதியின் அளவை 40 கிலோகிராமிலிருந்து 60 கிலோகிராமிற்குஅதிகரித்துள்ளது.

இவ் அகதிகள் 18பேரில் 10ஆண்களும் 8 பெண்களும் உள்ளடங்குகின்றனர். இவர்கள் திருகோணமலை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கு மீள்குடியமர்வதற்காக வருகை தருகின்றனர் என சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

இவர்களுக்கு இலங்கையை வந்தடைவதற்கு இலவசமாக விமான பயணச்சீட்டு அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகர் அலுவலகத்தினால் வழங்கப்படும். அத்துடன் மீள் சமூக ஒருங்கிணைப்பிற்கான நன்கொடையாக ஒவ்வொருவருக்கும் 75அமெரிக்க டொலர்களும், போக்குவரத்து நன்கொடையாக ஒவ்வொருவருக்கும் 19 அமெரிக்க டொலர்களும், உணவு அல்லாத பண நன் கொடையாக ஒவ்வொரு குடும்பத்திற்கும் 75 அமெரிக்க டொலர்களும் வழங்கப்படுகின்றது என அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

2011ஆம் ஆண்டிலிருந்து மொத்தமாக 4654இலங்கை தமிழ் அகதிகள் (1,688 குடும்பங்கள்) தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். மேலும் இந்தியாவில் 64 ஆயிரம் பேர்இந்தியாவிலுள்ள 109 முகாம்களில் இருக்கின்றனர். மொத்தமாக ஒரு இலட்சத்திற்கும்அதிகமான இலங்கை அகதிகள் இந்தியாவில் இருப்பதாகவும் அறியப்பட்டுள்ளது. சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் சுவாமிநாதன் அவர்கள் மீள்குடிய மர்த்தப்படும் மக்களுக்கு வாழ்வாதார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேவையான நிதி உதவிகளை வழங்குவதற்கான அமைச்சரவை பத்திரம் ஒன்றை சமர்ப்பித்திருந்தார்.

தற்பொழுது தேசிய திட்டமிடல் திணைக்களத்திடம் விரிவான கருத்திட்ட முன்மொழிகளை அனுமதிப்பது தொடர்பான முன்னெடுப்புக்கள் நடைபெற்று வருகின்றன.

மேலும் மீள்குடியமரும் மக்களுக்கு 6 மாதகாலத்திற்கு உலர் உணவுகளை வழங்குவதற்கான அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது. இவ் அமைச்சானது,வீடுகள் மற்றும் தமது உறவினர்களை இழந்தவர்களுக்கும், காயமடைந்தவர்களுக்கும் நட்டஈடுகளை வழங்குமாறு, ஆட்களையும் ஆதனங்களையும் கைத்தொழில்களையும் புனரமைப்புச் செய்யும் அதிகார சபைக்கு அறிவுரைகளை வழங்கியுள்ளது. வீடுகளை இழந்தவர்களுக்கு அமைச்சினால் மேற்கொள்ளப்படும் 65 ஆயிரம் வீட்டுத்திட்டத்தின் கீழ் வீடுகள் வழங்கப்படுமென சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

அரசாங்கமானது இந்தியாவிலிருந்து கட்டம் கட்டமாக சுய விருப்பில் இலங்கைக்கு அகதிகளை அழைக்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதுடன் அதிகரித்த அகதிகளின் வருகையானது நிரந்தர சமாதானம் மற்றும் நல்லிணக்கத்திற்கான சமிஞ்ஞையாக காணப்படுவதாக அமைச்சின் செயலாளர் தெரிவித்தார். (செ)

## மோ.சைக்கிள்...

கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதியை விட்டு அருகில் உள்ள தூணுடன் மோதியதில் இரண்டு பிள்ளையின் தந்தை ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் நேற்று இரவு 8 மணியளவில் முல்லைத்தீவு மாங்குளம் பிரதான வீதி, 3ஆம் கட்டை வளைவுப்பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் முள்ளியவளை கோப்பாய் பிளவினை சேர்ந்த செல்லத்துரை விஜயகுமார் (வயது 26) என்ற கடற்தொழிலாளியே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

சடலமானது பிரேதப் பரிசோதனைக்காக மாஞ்சோலை மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

விபத்துக்குள்ளாகி உயிரிழந்த நபரை அவ் வழியாக சென்ற இராணுவத்தினரே மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்ததாகவும் தெரியவருகின்றது.

இது தொடர்பில் முல்லைத்தீவு. முள்ளியவளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-281,310)

## தனிமையில் இருந்த...

சேர்ந்த சரவணமுத்து தெய்வநாயகி (வயது 73) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளாரென பொலிஸார் தெரிவித்தனர்.

திருமணம் செய்யாத குறித்த மூதாட்டி கண்பார்வை இழந்து தனிமையில் வசித்து வந்த நிலையில் உறவினர் ஒருவர் வந்து பார்வையிட்டு வருவது வழமையாக இருந்துள்ளது.

குறித்த உறவினர் நேற்றையதினம் வந்து பார்த்தபோது பிரஸ்தாப மூதாட்டி முற் றத்தில் உயிரிழந்த நிலையில் அவரது சடலம் வெயிலில் காய்ந்த நிலையில் கிடப்பதை கண்டுள்ளார். உடனடியாக பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

சம்பவ இடத்திற்கு வந்த சுன்னாகம் பொலிஸார் சடலத்தினை மீட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர். வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்ட விசாரணையின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (செ-9)

## சுற்றுலா விடுதியில்...

பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் சுண்டுக்குளி பகுதியில் உள்ள விடுதியில் (வீடு) கடந்த 19 ஆம் திகதி மாலை தென்னிலங்கையில் இருந்து வந்த சுற்றுலா பயணிகள் நாள் வாடகைக்கு மேற்படி சுண்டுக்குளி பகுதியில் உள்ளவிடுதியில் தங்கியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் அவர்கள் விடுதியினை (வீடு) வெளியேறும் போது உரிமையாளர் துப்புரவு பணிக்காக வந்துள்ளார்.

அப்போது விடுதியின் அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த 53 ஆயிரம் ரூபாய் பணம், 2கைத்தொலைபேசி, 2ஐபாட் என்பன திருடப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

உடனடியாக குறித்த சம்பவம் தொடர்பாக விடுதி உரிமையாளர் பொலிஸில் முறையிட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-9)

## அதிகாரங்களை...

நேற்று முற்பகல் ஹிக்கடுவையில் இடம்பெற்ற மாகாண முதலமைச்சர்களின் 32 ஆவது செயலமர்வில் உரையாற்றியபோதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதனைத் தெரிவித்தார்.

இங்கு கருத்து தெரிவித்த ஜனாதிபதி தொடர்ந்து உரையாற்றுகையில்,

தான் ஜனாதிபதியாக பதவியேற்றது அதிகாரத்தை தன்வசம் வைத்திருப்பதற்காக அன்றி அதிகாரத்தை கையளிப்பதற்காகவும் எனத் தெரிவித்தார்.

இன்று உலக அரசியலில் எப்போதும் கல்விமான்கள், புத்திஜீவிகள், அரசியலமைப்பு நிபுணர்கள் ஆகியோர் அதிகாரத்தை குவிப்பதிலன்றி அதிகாரத்தை பகிர்வது தொடர்பாகவே கவனம் செலுத்துவதாக ஜனாதிபதி இங்கு சுட்டிக் காட்டினார். இவ் எண்ணக் கருவானது எவ்வகையிலும் பலவீனமடையாது என்பதுடன் அதற்கெதிராக ஏதேனும் கருத்து முன் வைக்கப்படுமாயின் அது அபிவிருத்தி அடையாத சமூகம் ஒன்றின் குணவியல்பாகவே கருதப்படுமெனக் குறிப்பிட்டார்.

நவீன உலகில் உயர்ந்தபட்ச அபிவிருத்தியை எய்தியுள்ள அனைத்து நாடுகளும் அதிகாரப்பகிர்வு மற்றும் பிரதேச அபிவிருத்தி ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்ட அரசியலமைப்பின் ஊடாகவே அதனை சாத்தியப்படுத்தியுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

ஒரே நாடு எனும் கொள்கையின் அடிப்படையில் செயற்பட்டு அரசாங்கமும் மாகாண சபைகளும் புரிந்துணர்வுடன் நடவடிக்கை மேற்கொள்வதன் முக்கியத்துவத்தினை இங்கு சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, பதவிகளை வகிக்கும் நபர்கள் நியதிச்சட்ட நிலைமைகளில் குறிப்பிட்ட ஒரு காலம் அப்பதவிகளை வகித்தபோதும் இந்நிறுவனங்கள் முன்னோக்கி செல்லவேண்டியுள்ளதால் அனைவரும் தத்தமது பொறுப்புக்களையும் கடமைகளையும் உரியவாறு நிறைவேற்றுவதற்கு தன்னை அர்ப்பணிக்க வேண்டுமெனவும் பிரச்சினைகளை தீர்க்கும் நாகரிகமடைந்த மக்களின் குணவியல்புகள் அனைவரிடத்திலும் காணப்பட வேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

நாட்டின் ஜனாதிபதி ஒரு கட்சியையும் பிரதமர் மற்றுமொரு கட்சியையும் பிரதிநிதித்துவப்படுத்தி இரண்டு கட்சிகளுக்கிடையிலும் பகிர்ந்தளிக்கப்பட்ட ஓர் அமைச்சரவையுடன் நடவடிக்கை மேற்கொள்ளுதல் இதற்கு முன்னர் காணப்படாத புதியதொரு அனுபவமெனத் தெரிவித்த ஜனாதிபதி, அர்ப்பணிப்பு இலட்சியம் மற்றும் தன்னம்பிக்கை என்பவற்றின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொண்டு தேசத்தின் நன்மைக்காக பொது நோக்கத்தை நிறைவேற்றுவது அனைவரதும் பொறுப்பாகுமென தெரிவித்தார்.(செ-11)

## கொத்து ரொட்டி...

வர்களுக்கு உணவு விஷமானதால் ஆபத்தான நிலையில் நேற்றையதினம் வல்வெட்டித்துறை ஊறணி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வளலாய் வடக்கு பகுதியினை சேர்ந்த ஒரே குடும்பத்தை சேர்ந்த மூன்று சிறுவர்களான சலாஸ் அகிலின் (வயது 06), வின்சலாஸ் லலின்(வயது 05), வின்சலாஸ் ஜஸ்சிலின் (வயது 02) ஆகியோரே மேற்படி உணவு விசமாகிமயங்கிய நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று மதியம் குறித்த கடைக்கு வந்த தந்தை கொத்து ரொட்டியை வாங்கி சென்று அதனுடன் வாங்கி வந்த கறியினையும் ஊற்றி மூன்று பிள்ளைகளுக்கும் பகிர்ந்து கொடுத்துள்ளார்.

கொத்துரொட்டியினை உண்ட சிலமணி நேரத்தின் பின் மூன்று குழந்தைகளும் ஒன்றன் பின் ஒன்றாக வாந்தி எடுத்து மயங்கி வீழ்ந்துள்ளனர்.

உடனடியாக அயலவர்களின் உதவியுடன் சிறுவர்கள் மூவரும் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக வைத்திசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (செ-9)

## கருத்தரங்கத் தொடர்-2 பூசலார் நாயனார் புராணம்

(யாழ்ப்பாணம்)

பெரியபுராணம் காட்டும் வாழ்வியல் கருத்தரங்கத் தொடர்-2 வரிசையில் பூசலார் நாயனார் புராணம் நிகழ்வு இன்று செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் 66, கல்லூரி வீதி நீராவியடி பகுதியில் அமைந்துள்ள யாழ்.சைவபரிபாலன சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக தகைசார் வாழ்நாட் பேராசிரியர் ப.கோபால கிருஷ்ணன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில், யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை விரிவுரையாளர் செல்வி சுரேந்தினி துரைராசசிங்கம் **பூசலார் நாயனார் புராணம்: கட்டமைப்பு** எனும் தலைப்பில் முதலாவது கருத்துரையை வழங்கவுள்ளார்.

இரண்டாவது கருத்துரையினை **பூசலார் நாயனார் புராணம் காட்டும் வாழ்வியல்** எனும்தலைப்பில் ஜப்பான் கக்சுயின் பல்கலைக்கழக முன்னாள் ஆய்வுப் பேராசிரியர் மனோன் மணி சண்முகதாஸ் வழங்கவுள்ளார். (செ)

## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் தனபாலசிங்கம்



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் 81, மணிக்கூட்டுக் கோபுர வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் தனபாலசிங்கம் (இளைப்பாறிய பொலிஸ் சார்ஜன்) 20.03.2016 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - இளையாச்சிப்பிள்ளை தம்பதிகளின் ஏகபுத்திரனும் காலஞ்சென்றவர்களான முருகேசு - நாகரெத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் சர்வதேச லயன்ஸ் கழக இணைப்பாளர், வைத்திய கலாநிதி மு.கதிர்காமநாதன் (மன்னார் கிளினிக் - மன்னார்), மு.பாலசுப்பிரமணியம் (கனடா), மு.கனகேந்திரநாதன் (கணேஷ்- தென்னாபிரிக்கா), கலாநிதி K.M.பத்மநாதன் (உரிமையாளர் - *WESCO Pharmacy Jaffna*. லயன்ஸ் கழக செயலாளர் - கொக்குவில்), காலஞ்சென்றவர்களான விஜயலஷ்மி, மு.வரதராஜா (படத்தயாரிப்பாளர்-சென்னை) ஆகியோரின் அன்பு மைத்துனரும், கனடாவைச் சேர்ந்த கஜேந்திரன், பூலோகேந்திரன், விஜேந்திரன், சுரேந்திரன், சுதனி ஆகியோரின் சிறிய தகப்பனும், தெய்வேந்திரம், புஸ்பவதி (பவளம்) ஆகியோரின் மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 23.03.2016 புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு 81. மணிக்கூட்டுக் கோபுரவீதி, பெருமாள் கோவிலடி யாழ்ப்பாணத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(3972)

தகவல் : Dr.மு.கதிர்காமநாதன் (சர்வதேச லயன்ஸ் கழக இணைப்பாளர்)
Dr.லயன் K.M.பத்மநாதன் (செயலாளர் - கொக்குவில் லயன்ஸ் கழகம்)

## "எனது மகளை...

ஹூனுப்பிட்டியில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன் போதே தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

கடந்த 9 ஆண்டுகளாக தான் அரசியலில் இருந்து தனிமைப்படுத்தப்பட்டிருந்ததாகவும், கட்சியிலிருந்த அனைவருக்கும் தன்னுடன் பேசுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்ததாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த ஆட்சியாளர்கள் இன்னும் ஒரு வருடத்திற்கு ஆட்சியில் இருந்திருந்தால் நாட்டின் மொத்த பொருளாதாரமும் வீழ்ச்சி கண்டிருக்கும் எனவும், அரசாங்க ஊழியர்களுக்கு ஊதியம் வழங்க முடியாத நிலைமைக்கு நாடு தள்ளப்பட்டிருக்கும் எனவும் அவர் இதன போது குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், தற்போதைய அரசாங்கத்திலும் திருடர்கள் சிலர் இருப்பதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இதேவேளை, மகிந்த ராஜபக்ஷவின் 13 பேர் அடங்கிய குழு ஒன்று தன்னை அரசியலில் இருந்து விரட்டியடிக்கும் நோக்கில் போலியான பிரசாரங்களை மேற்கொண்டு வந்திருந்ததாக சுட்டிக்காட்டியுள்ள அவர்,

இது வரைகாலமும் பொறுமையுடன் செயற்பட்டு வந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தற்போது கடுமையான நடவடிக்கையினை எடுக்கவுள்ளதாக சந்திரிகா குமாரதுங்க மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)


### ஆங்கில வகுப்பு

தரம் 02, 03, 04, 05, 06, 07, 08, 09, 10 ஆம் O/L, A/L மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தொழில் புரிபவர்களுக்குமான English Spoken with Grammar வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும்.

தொடர்புகளுக்கு : 0767070069

(3964) M.Suren

### தேவை

யாழ் நகரில் இயங்கும் அச்சகம் ஒன்றுக்கு கணனி ரைப் செற்றிங் ( CorelDRAW, Photoshop) அனுபவம் உள்ளவர்கள்,

ஒவ்செற் மெசின் மைண்டர் ( Kod)

அனுபவம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்

(3971) 0772506234


## முன்னாள் ஜனா...

ரான நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

வெடி குண்டின் துகள்கள் இன்னும் அவரது தலையில் இருக்கின்றன. இதனால், ஏற்பட்டுள்ள நோய் காரணமாக அவர் நினைத்ததை எல்லாம் பேசி வருகிறார் எனவும் கம்மன்பில குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார். இவர்களை போன்றவர்களுக்கு கௌரவத்தை வழங்கி ஒதுக்கி வைத்து விட வேண்டும். கடந்த 17 ஆம் திகதி நடைபெற்ற கூட்டு எதிர்க்கட்சியின் கூட்டத்திற்கு எதிர்க் கட்சியினர் அல்லாத திருடர்கள் வந்ததாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சில கூட்டங்களில் தெரிவித்துள்ளார்.

கூட்டத்திற்கு வந்தவர்கள் திருடர்கள் என்றால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினால், அப்படியான கூட்டத்தை நடத்தி காட்டுமாறு சவால் விடுக்கின்றேன். அதேபோல், 17 ஆம் திகதி நடந்த கூட்டத்தில் நான் தடுக்கி விழுந்தது தொடர்பில் அனைவருக்கும் பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

என்னை திரையில் காட்டாத தொலைக் காட்சிகள் கூட நான் தடுக்கி விழுந்ததை ஒளிபரப்பியது. விழுந்து எழும் கௌரவம் எனக்கு உள்ளது.

கடந்த தேர்தல்களில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்டோரின் வெற்றிக்காக முன்னின்று செயற்பட்ட மாதுளுவாவே சோபித தேரர், பிற்காலத்தில் அரசாங்கம் மீது அதிருப்தியில் இருந்தார். சோபித தேரரின் மரணம் தொடர்பில் கண்டறிய ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட வேண்டும் எனவும் உதய கம்மன்பில குறிப்பிட்டுள்ளார்.(செ-11)

## அமை. சம்பிக்க...

கொண்டு வருவதற்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவான கூட்டு எதிர்க்கட்சிகள் தீர்மானித்துள்ளன.

கொழும்பில் நாளை 23-ம் திகதி புதன்கிழமை இடம்பெறவுள்ள நாடாளுமன்ற அமர்வின் போது சபாநாயகரிடம் அமைச்சர் சம்பிக்க ரணவக்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை கையளிக்கவுள்ளதாக தூய்மையான ஹெல உறுமயவின் தலைவர உதய கம்மன்பில ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் உதய கம்மன்பில குறிப்பிடுகையில்,

அமைச்சர் சம்பிக்க ரணவக்க பயணம் செய்த வாகனம் ராஜகிரியவில் வைத்து கடந்த சில நாட்களுக்கு முன்னர் இளைஞர் ஒருவரின் வாகனத்துடன் மோதியிருந்தது.

இந்த விபத்துக் காரணமாக காயமடைந்த இளைஞர் தற்போது வரை வைத்தியசாலையில் அதிதீவிர பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார். இவருக்கு அரசாங்கச் செலவில சிகிச்சை அளிக்குமாறு நாம் தொடர்ந்தும் வலியுறுத்தியிருந்தோம்.

ஆனால் இவ்விடயம் தொடர்பில் அரசாங்கம் போதிய கவனம் செலுத்துவதாக இல்லை. இந்நிலையிலேயே அமைச்சர் சம்பிக்க ரணவக்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவர பொது எதிரணியினர் தயாராகி வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (செ-11)

## உள்ளக பொறி...

ஆணையாளர் இலங்கையின் நிலைமைகள் தொடர்பில் வாய்மூல அறிக்கையை சமர்ப்பிக்கவுள்ளார்.

இந்நிலையில், ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளரின் இந்த அறிக்கைக்கு முன்னதாக, போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் முன்னெடுக்கப்படவுள்ள உள்ளக விசாரணைப் பொறிமுறையின் இறுதி வடிவத்தை தயாரிப்பதற்கு இலங்கை அரசாங்கம் கடும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

குறிப்பாக, இந்த உள்ளக விசாரணைப பொறிமுறை வடிவத்தை தீர்மானிக்கும் நோக்குடன் இலங்கை அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டுள்ள விசேட செயலணியானது தற்போது விசாரணை பொறிமுறை தொடர்பில் ஆராய்ந்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

## 3 பொ..

யதினம் பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்திய போது நீதிவான் அவர்களை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளார்.

இவ்வாறு கைதானவர்கள் தமிழ்நாடு நாகப்பட்டிணத்தை சேர்ந்த ஜெகதீஸ் (வயது28), கலைமணி (வயது28) ஆகியவர்கள் என பொலிஸார தெரிவித்துள்ளனர்(செ-9)


### தெல்லிப்பளை - விழிசிட்டி ஞானவைரவர் சுவாமி ஆலய வசந்த மண்டப கும்பாபிஷேகம்

தெல்லிப்பளை -விழிசிட்டி ஞானவைரவர் ஆலயத்தில் (புளியடி வைரவர்) புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வசந்த மண்டப கும்பாபிஷேக கிரியைகள் 25.03.2016 (வெள்ளிக்கிழமை) மாலை 6.00 மணியளவில் ஆரம்பமாகும். மறுநாள் 26.03.2016 (சனிக்கிழமை) காலை 8.00 மணிக்கு வசந்த மண்டப கும்பாபிஷேகம் நடைபெறும். தொடர்ந்து ஆலய கும்பாபிஷேக தின சங்காபிஷேகமும் அன்றைய தினம் நடைபெறவுள்ளது என்பதை வைரவப் பெருமான் அடியார்களுக்கு அறியத் தருகின்றோம்.

விழிசிட்டி
தெல்லிப்பளை

நிர்வாக சபையினர்

(C-4091)

### DCM யாழ் நகர்

A/L 2018 - புதிய பிரிவு

கலை,
வர்த்தகம்,
தொழில்நுட்பம்

ஆரம்பம்
26.03.2016
சனி 9.00 A.M

(C-4089)

### Dutch, Deutsch, French



தூதரக பரீட்சைக்கான ஜேர்மன் - Deutsch (டொச்) மற்றும் நெதர்லாந்து - Dutch (டச்) உட்பட அனைத்து புதிய பிரிவுகளும்ஆரம்பமாகின்றது.

* French, Italian, English (A-1 Exam) வகுப்புகளும் நடைபெறுகின்றன.
* வடமாகாணத்தில் அரசாங்க அங்கீகாரம் பெற்று ஜேர்மன் கலாசார நிலையத்தின் அனுசரணையுடன் இயங்கும் ஒரே வெளிநாட்டு மொழிக் கல்வி நிறுவனம் எங்களுடையதே.
* Dutch மற்றும் Deutsch தூதரக பரீட்சைகளில் நீங்கள் சித்தியடைவதை தற்பொழுது நாம் 100% உத்தரவாதப்படுத்துகின்றோம்.
* Audio, Video வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள்.

Vivekananda Academy

அனைத்து புதிய வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.

221/1, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம்.

(Gov. Reg.No: W/A 76795)

Tel: 0213216928, 0774842464 .,0212220393

(சி-4089)

### British College of Higher Studies

BCHS

வழங்கும் சர்வதேச கற்கை நெறிகள்

Settlement Visa மூலமாக UK செல்பவர்களுக்கான

IELTS Life Skills

வடக்கு மாகாணத்திலேயே அதிகப்படியான மாணவர்களை பயிற்றுவித்து பரீட்சையிலே அனைவரையும் வெற்றிபெறச் செய்யும் ஒரேயொரு நிறுவனம்.

100% பயிற்சி → 100% வெற்றி

Student, Migration Visa மூலமாக UK செல்பவர்களுக்கான

IELTS (Academic / General)

ஆரம்பத்தில் பயில சிரமப்படுவர்களுக்கு பிரத்தியேக வகுப்புகள் மூலமாக கூடுதல் பயிற்சிகள் வழங்கப்படும்

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

No.15 , Sirambiyady Lane (Off Stanley Road), Jaffna.
(Above Sathosa SM & Near Ariyakulam Junction)
Tel : 021-2224550
Hotlines: 0777585913,0777222422, 0714299935

(சி-4083)

### New College of Technology Jaffna (NCT)

A/L தொழில்நுட்ப பிரிவு மாணவர்களுக்கான தனியான ஓர் தனியார் கல்வி நிறுவனம்

NCT JAFFNA

⇒ வடக்கின் பிரபல துறைசார் பாடசாலை ஆசிரியர்கள் இணையும் ஒரே ஒரு நிறுவனம்

⇒ A/L 2018 வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
சனி, ஞாயிறு காலை 8.30 மணி முதல்

⇒ A/L 2017 வகுப்புக்கள்
சனி, ஞாயிறு காலை 8.00 மணி முதல்

⇒ புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

Bus நிலையம் → ஆரியகுளம்சந்தி → பலாலி வீதி(300m) → NCT-Jaffna

இல.23, பலாலி வீதி,
பருத்தித்துறை வீதிச் சந்தி,
யாழ். நகர்.

Facebook / New college of Technology Jaffna


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.03.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.